விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

PEOPLE'S FRONT OF LIBERATION TIGERS

P.F.L.T.

# தமிழீழச் செய்திகள்

# "NEWS Of TAMIL EELAM"

மாசி - 1ம் திகதி தொடக்கம் 31 வரையான SINE FEBRUARY 1st to 31-1990

Date Name of Paper Cliping of News Papers

குடாநாட்டின் பல பகுதிகளில்

வியாழன் இ

இருவர் பலி;

Name of Paper Cliping of

முற்ற மக்கள்

றி அவதி!



Jaffna teaching ... Thou... 42 yr ... and 13 year old ...

... 60 year old ... Ken... of ... Velanai were also injured.

பூநகரியில் ஒருவர் பலி

ONE VICTIM AT POONERY

Jaffna Aug.25 th.

One person died when a helicopter attacked Selvapuram of Poonery (Poonati) on last thursday.

... number of people would ... the aerial attack ... early hours of ... Velanai hospital lacks ... treat the wounded. ... that a request has been made to ... arrangements to transfer ... hospital for necessary treatment.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

"TAMILEELA MOTHERLAND IS TIGERS THIRST"

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**
**People Front of Liberation Tigers**

# அறிமுகம்

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந்த யுத்தத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் பெருமளவில் கொல்லப்படுகின்றனர். ஸ்ரீலங்கா இராணுவத்தினராலும் சிங்களக் குண்டர்களினாலும் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள், வயது வித்தியாசம் இன்றி கொல்லப்படுகின்றனர் தமிழ் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர். தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன தமிழ் இளைஞர்களை உயிருடன் எரித்து கொலை செய்கின்றனர். இராணுவத்தால் கைதாகும் தமிழ் மக்கள் சித்திரவதையின் பின் தலை துண்டாடப்பட்டு ஆறுகளில் வீசப்படுகின்றன. ஸ்ரீலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் தமிழர்களின் குடி இருப்புக்களின் மீது கண்மூடித்தனமாக குண்டுகளை வீசுகின்றன. இக் குண்டு வீச்சால் பெருமளவில் தமிழர் கொல்லப்படுவதோடு வீடுகளும் தரை மட்டம் ஆகின்றன. இப்படியாக ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மனித உரிமைகளுக்கு அப்பாற்பட்ட கொலைகளையும் அநீதிகளையும் செய்து வருகின்றது இந்த அநீதிகளை உடனுக்குடன் அம்பலப்படுத்தும் உதயன், ஈழநாடு, முரசொலி ஈழநாதம் ஆகிய நான்கு தமிழ் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு ஓர் புத்தக வடிவில் அமைத்துத் தருகின்றோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

**People Front of Liberation Tigers**

# INTRODUCTION

The Sri Lankan Government had let loose an aggression War against the Tamil population. Excessive, innocent Tamils are been killed in this war. Children, women and Elderly persons, are been killed by the Sri Lanka Forces and Sinhalese thugs, without any differntiate in ages. Tamil women are forced to Sexual violence: Tamils belongings are been pillaged: Tamil teenagers burnt alive and murdered. Tamil people who were been arrested by the forces were tortured and thrown into the rivers later, their heads chopped. Sri Lankan bombers ruthlessly bomberding on to the tamils inhibitances. Excessive tamils are been killed and their residences are made to ground level by these bombardings. So, this is how Sri Lanka Government handles the murders and unjustice activities beyond the humanrights, on the tamils. The four tamil magazines UTHAYAN, EELANADU, MURASOLI and EELANATHAM which publishes these unjustiseness then and there, are been translated in English and introduced as a book.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"



09.02.1991 அன்று ஸ்ரீலங்கா விமானப்படையின் குண்டு வீச்சில் பலியான 4பிள்ளைகளின் தாயான 36வயது புஸ்பநாதன் சிவசாந்தியின் உடல் ஒரு கை துண்டிக்கப்பட்டு-முகம் சிதைந்த நிலையில் உள்ளவை. (1 ஆவதுபடம்)

Puspanathan Sivashanthni (36) mother of 4 children seen here in a state of hand aparted and face perished by Sri Lankan bombardment on09.02.1991

---



பலியான சிவசாந்தியின் கணவன் தன் மனைவியின் உயிரற்ற உடலை கண்டு என்ன செய்வதென்று அறியாது கதறி அழும் காட்சி (2ஆவது படம்)

Not knowing what to do, victim Sivashanthi's husband is shrieking having looked at the dead body.

---

இக் குண்டு வீச்சு பற்றிய 10.02.1991 அன்று உதயன் பத்திரிகையில் வெளிவந்த செய்தி கீழே தமிழ் ஆங்கிலத்தில் உள்ளது.

## நேற்று நடந்த குண்டு வீச்சில்

# கந்தர்மடத்தில் குடும்பப் பெண் பலி!

யாழ்ப்பாணம், பெப். 10

கந்தர்மடம், மணல்தறை ஒழுங்கையில்-குடியிருப்புக்கள் நெருக்கமாக உள்ள பகுதியில் - நேற்றுக் காலை 9. 15 மணியளவில் இரண்டு விமானங்கள் நடத்திய குண்டு வீச்சினால் இளம் குடும்பப்பெண் ஒருவர் பலியானார். ஒரு வீடு பலத்த சேதமானது. மற்றும் சில வீடுகளும் சேதமுற்றன. வயோதிபர் உட்பட இருவர் காயமடைந்தனர்.

இரு குண்டுகள் மணல்தறை ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றின் மீது விழுந்து வெடித்ததில் வீட்டுக்குள் நின்ற திருமதி செல்வரத்தினம் செல்வலட்சுமி [36 வயது] என்ற நான்கு பிள்ளைகளின் தாயார் ஒரு கை துண்டிக்கப்பட்டு - முகம் சிதைந்த நிலையில் - பலியானார்.

இவர் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கட்டுவனில் இருந்து இடம்பெயர்ந்து வந்து இங்கு வசித்து வந்தவராவர்.

வீட்டுக்குள் இருந்த இவரது நான்கு பிள்ளைகளும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். எனினும் இறந்தவரின் பேரனான இராசவேலுப்பிள்ளை [82வயது] கட்டுவன், புஷ்பநாதன் சிவசாந்தி [36 வயது] கட்டுவன் ஆகியோர் காயமடைந்தனர்.

IN YESTERDAYS BOMBARD- MENT AT KANDARMADAM


Jaffna Feb.10th - A young woman died yesterday by about 9.15 A.M., when two bombers activiated bombarding at Kandanmadam Manaltharai Lane, where people thickly populated. A house received severe damage, and including an elderly person too were subjected to injuries.

Mrs. Selvaratnam Selvaletchumy (36) died, her hand aparted - face perished as two bombs fell in the house and exploded at Manaltharai Lane,

This particular woman deported from Kadduvan due to recent Army Operations was residing here. Her four children who were inside the house escaped miraculously. Anyway the victims grandfather Rasavelupillai(82) of Kadduvan and P.Sivashanthini(36) of Kadduvan received kinjuries.

----oooo-----

# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
# People's Front of Liberation Tigers



குண்டு வீச்சில் தரைமட்டமாகி
உள்ள புஸ்பநாதனின் வீடு.
(1ஆவது படம்)

House of Pushpanathan bombarded to Ground Level ( 1st Picture)



குண்டு வீச்சுக்கு பலியாகிய
சிவசாந்தியின் கணவன் புஸ்பநாத-
ன் உயிரற்ற உடலைக் கண்டு
கதறி அழுவதை (2ஆவது படம்)

Husband of Victimised Sivashanthi in bombardment screaming. (2nd Picture)



குண்டு வீச்சுக்கு பலியாகிய
சிவசாந்தியின் முகம் சிதறியும்
கை துண்டிக்கப்பட்டுள்ளதை
(3ஆவது படம்)

Victimized Sivashanthi in a state hands aparted and face perished (3rd Picture)

" TAMILEELA " MOTHERLAND
IS TIGERS THIRST

Date 01.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# புதுக்குடியிருப்பில் குண்டு வீச்சு! 17 அப்பாவிகள் உடல்சிதறிபலி!!

## மக்கள் கூட்டத்தின் மீது கொடூரம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 1

**புதுக்குடியிருப்புச் சந்தியில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் மக்கள் கூட்டத்தின் மீது ஸ்ரீலங்கா விமானப் படையின் பொம்மர்கள் நடத்திய கோரத் தாண்டவத்தில் 17 அப்பாவிகள் உயிரிழந்தனர். பதினைந்து பேர் வரை காயமுற்றனர் 12 கடைகள் நாசமாகின. 25 இற்கும் மேறபட்ட நடைபாதை வியாபார நிலையங்கள் முற்றாகச் சேதமுற்றன**

புதுக்குடியிருப்புச் சந்தியில்—ஒட்டு சுட்டான், மூல்லைத்தீவு, இரணைப்பாலை, பரந்தன் ஆகிய நான்கு இடங்களிலிருந்தும் வரும் வீதிகள் இணையும் சந்தியில்—இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. [illegible] இடங்களுக்குச் செல்வதற்காகவும், வியாபார நோக்கத்துடனும் மாலை நேரத்தில் மக்கள் நூற்றுக் கணக்கில் கூடியிருந்த வேளையில் அந்தக் கூட்டத்தை நோக்கியே தாக்குதல் நடத்தப்பட்டது

புதுக்குடியிருப்புச் சந்தியில் இணையும் நான்கு வீதிகளிலும்—வீதிக்கொரு குண்டாக நான்கு குண்டுகள் வீசப்பட்டன

மாலையில் அப்பகுதியை சுமார் 20 நிமிட நேரம் வட்டமிட்ட நான்கு பொம்மர்களும் குண்டுகளை அடுத்தடுத்து வீசின.

குண்டுகள் வீசப்பட்ட இடங்களுக்கு அருகே திருமலையிலிருந்து இடம்பெயர்ந்து வந்தோர் தங்கியிருந்த—முன்று அகதி முகாம்கள் இருந்தன. குண்டு வீச்சு இடம்பெற்ற சமயம் பெரும் எண்ணிக்கையான அகதிகள் சந்தியில் கூடி நின்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

BOMBARDMENT AT PUTHUKUDIYIRUPPU - 17 INNOCENTS KILLED THEIR BODY SCATTERED. ATROCITIES ON MASSES.

Jaffna February 1st. Day before yesterday evening by about 5.00 p.m. in the evening at Puthuiudiyiruppu junction, 17 innocents died due to the devilish dance of the Sri Lankan Air Force bombers. Nearly 15 wounded, 12 boutiques ruined. More than 25 pavement boutiques completely destroyed.

This bombardment took place at Puthukudiyiruppu junction, where all the roads of Uddusuddan,Mullaitivu,Eranaipavai and Paranthan joint.

This attack was carried out when there was a huge crowd in order to persuade travelling and business in that evening.

Four bombers were propelled to those 4 roads which connected the Puthukudiyiruppu junction. The 4 bombers which were circling that area in the evening for about 20 minutes activated the bombardment.

In the vicinity of bombardment there were 3 refugee camps containing people who came from Trincomalee.At the time of bombing countless refugees were at the junction, the information added.

The bodies of the victims were seen scattered every where, and only four of those bodies were identified by yesterday noon. Most of the victims possibly could be Trincomalee refugees was a doubt.

Two of the victims who were awaiting for a vehicle to go to their native place Trincomalee were identified as Sinnavan Kandasamy (40 years) and his daughter Kavitha (16 years)

One Kalaiselvan seriously wounded died on the way to Jaffna hospital.People of refugee camp were panicked seeing the bombardment and rushed towards jungle. Anyway there were no damages to thos refugee camps.

இந்தக் குண்டு வீச்சில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் சிதறிக் கிடக்கக் காணப்பட்டன. அவற்றில் மூன்று சடலங்களே நேற்று நண்பகல் வரை அடையாளம் காணப்பட்டிருந்தன. உயிரிழந்தோரில் அனேகமானோர் திருமலை அகதிகளாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்பட்டது.

தமது சொந்த இடமான திருகோணமலைக்குச் செல்வதற்காக வாகனத்துக்குக் காத்து நின்ற சின்னவன் கந்தசாமி [வயது 40], அவரது மகள் கவிதா [வயது 16] ஆகிய இருவரினதும் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

படுகாயமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்படும் வழியில் கலைச்செல்வன் என்பவர் உயிரிழந்தார்.

குண்டுவீச்சு நடந்த சமயம் அப்பகுதி அகதி முகாம்களில் இருந்தோர் பீதி காரணமாக அருகில் இருந்த காடுகளுக்கு ஓடிச்சென்றனர். எனினும் அகதி முகாம்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை.

[உ 15]

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

**People Front of Liberation Tigers**

Date... 01.02.1991 Name of Paper EELANAATHAM Cliping of News Papers

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# 25 தமிழர் மூழ்கி மரணம்; வீடுகள் பயிர்களுக்கு தீவைப்பு

(மட்டக்களப்பு)

வெல்லாவெளிக்கு அருகே ஆற்றை கடக்க முற்பட்ட பொதுமக்கள் இருபத்தைந்து பேர் வரையில் கரை புரண்டோடிய வெள்ளத்தால் அள்ளப்பட்டு இறந்துள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த 13 ஆம் திகதியன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

கன்னிச்சை, செங்கலடி, சித்தாண்டி, [illegible] இராணுவ முகாம்களிலிருந்து ஒரு காலத்தில் புறப்பட்ட [illegible] இராணுவத்தினரும், [illegible] வினரும் மகிழவெட்டுவான், பாலைமடுப் பகுதிகளைச் சுற்றிவளைத்தபோது அதிலிருந்து தப்புவதற்காக முந்தன்குமார வெளிப் பகுதியிலுள்ள வெட்டிவாய்க்கால் ஆற்றைக் கடக்க முற்பட்ட அப்பாவிப் பொதுமக்களே இவ்வாறு ஆற்று வெள்ளத்தால் அள்ளிச்செல்லப்பட்ட பரிதாபகரமான சம்பவம் நிகழ்ந்தது.

இச்சம்பவத்தில் அழகையா [illegible] (20) செங்கலடி, துரைராசா [illegible] (25) [illegible], [illegible] (16) [illegible] (35) ஆரையம்பதி, [illegible] ராசா (35) கல்லடி வீதி, [illegible] ஆகியோரும் மூழ்கி இறந்தவர்களில் அடங்குவர்.

அதேவேளை மகிழவெட்டுவான் கிராமத்தை அடைந்த இராணுவத்தினர் 37 குடிசைகளையும், 35 கடைகளையும் பொருள்களுடன் சேர்த்துத் தீயிட்டுக் கொளுத்தினர். அத்தோடு மகிழவெட்டுவான் பாடசாலையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வேண்டுதலின் பேரில் அமைக்கப்பட்ட வைத்தியசாலைக் கட்டடத்தையும் குண்டுவைத்துத் தகர்த்தனர். 50 சைக்கிள்களையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

மேலும் பாலைமடு வயல் வெளிக்குள் விதைப்பதற்காகச் சேமித்து வைக்கப்பட்ட நெல் மூடைகளோடு 10 வாடிகளையும் தீவைத்துக் கொளுத்தினர்.

அடுத்த நாள் 14 ஆம் திகதி புணாணை கன்னிச்சை முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மியான்குளத்தை சுற்றிவளைத்தனர். அங்கு சேனைப்பயிர்ச்செய்கையிலும் மாடு மேய்ப்பதிலும் ஈடுபட்டு வாழ்க்கை நடத்தும் தொழிலாளர்களின் குடிசைகள் 185 க்குத் தீயிட்டனர். இச்சம்பவத்தில் உடைமைகளோடு சேனைப் பயிர்களும் எரிந்து நாசமாகத் [illegible]

அதேவேளை மகிழவெட்டுவான், பாலைமடுப் பகுதியில் இருந்து ஈரலிக்குளம் வெளிக்கு ஹெலிகப்டர்கள் மூலம் இறக்கிய இராணுவத்தினர் பலத்த துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல் தாக்குதலும் மேற்கொண்டனர். பின்னர் 15 வீடுகள், ஒரு உழவு இயந்திரம், மோட்டார் சைக்கிள் ஒன்று, சைக்கிள்கள் இரண்டு, 15 நெல் மூடைகள் என்பவற்றிற்குத் தீவைத்துக் கொளுத்தினர்.

பின்னர் அங்கிருந்து 15 ஆம் திகதி இலுக்கு கிராமத்தை நோக்கி வந்த இராணுவத்தினர் இரண்டு வீடு, உடைமைகள், உணவுப் பொருள்களுக்கு தீயிட்டு, பயிர்களை நாசமாக்கியபடி வவுணதீவு ஊடாக மட்டக்களப்பு கோட்டை சென்றனர்.

மட்டக்களப்பு கிராமத்தில் இருந்து புலிபாய்ந்தகல் நோக்கி மூன்று பிரிவாகச் சென்ற இராணுவத்தினர் இறந்தைக் கல்லில் ஒரு பொதுமகனைச் சுட்டுக் காயப்படுத்தினர். தாவணப்பட்டியூற்று என்னுமிடத்தில் 50 வயது வயோதிபர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

IN BATTICALOA DISTRICT

25 TAMILS DROWNED AND DEAD
HOUSES AND CULTIVATIONS SET FIRED

It is reported that about 25 people were drowned in heavy flood, when they tried to cross the river Vedduvaikal.

This incident that took place on the 13th reveals -

Sri Lankan Army and the TELO groupe from Kallichchai, Sengaladi, Sithandi and Kiran Camps, simultaneously started to cordorn the respective areas and the people who tried to escape, croosed the river Vedduvaikal and got themselves drowned in a pitiable manner.

Alagaiah Buvaneswaran (20) of Sengaladi, Thurairajah Sivakumar (25) of Vantharumoolai, Balu (16) of Kiran, Shanmuganathan (35) from Ariyampathy and Irithayarajah (35) from Allai Road, Kantalai are among those who died.

At the same time 37 houses and 35 shops in Mahilavedduvan Village were set fired by the Army Personel who entered into the village. The Hospital Building that was erected on a request made by the ICRC too was blasted. About 50 bicycle were also set fired.

About 10 Vadies ( huts) along with the seed paddy, kept for sawing were also set fired in Pallamadhu area.

On the next day - 14th, the Army Personels from Kallichchi Camp in Poonanai, cordorned the Meyankulam area, set fired about 135 huts that belong to the poor Chenai Cultivators and Cattle rearers. On this, the Chenai Cultivations and their belongings got burnt.

The Army Personels who came to Eeralikulam, in Helicopters from Mahilavedduvan and Pallamadhu had heavy firing attacks and Heli attacks. Later 15 houses, a Tractor, one Motor Bike, two bicycles and 15 bags of paddy were burnt.

From here they went to Elukku Village on the 15th. and set fired to two houses, belongings and food stuffs. Later they left for Maddapulthoddam, through the paddy fields causing damages to the crops.

From here they dispersed in three differenct groupes and one Civilian was shot and injured at Siruthaikal. In Thavalaipad iyootu, an elderly person of 50 years was shot dead.

Date 01.02.1991 Name of Paper EELANAATHAM Clipping of News Papers

## பூந்தோட்ட இராணுவம்

# திடீர் ஷெல் தாக்குதல் பல பொதுமக்கள் காயம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம்பகுதியில் நிலை கொண்டுள்ளசிறிலங்கா இராணுவத்தினரால் திடீரென்று ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில்சிலர் காயமடைந்தனர்.

கடந்த 30 ஆம் திகதி குறித்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது அருகில் உள்ள கிராமமான பெரியார்குளம் என்னும் இடத்தில தமது வீட்டில் தங்கியிருந்த சிங்காரம் என்னும் வயோதிபருடன் மேலும் சிலர் காயம் அடைந்தனர்.

சில வீடுகளும் இதனால் பாதிப்படைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தின் திடீர் ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி பூந்தோட்டம் பகுதிக்கு அருகில் வாழும் மக்கள் இடம்பெயர்ந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

FORCES AT POONTHOTTAM

Sudden Shell attacks
Several civilians injured.

VAVUNIYA.

Some received injuries due to sudden shell attacks from Poonthottam occupied Sri Lankan Army.

This particular shell attacks which were activated last 30th injured one elderly person Singaram and several others at their residence in a neighbouring village called Periyakulam.

Some houses were also affected, the information revealed.

The inhabitants close to Poonthottam scared due to sudden shelling, were shifting away could be noted.

# நான்கு தமிழ் குடும்பஸ்தர்கள் விநாயகபுரத்தில் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள விநாயகபுரம் என்ற கிராமத்தில் நான்கு குடும்பஸ்தர்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக் கொலை செய்ததுடன் பல வீடுகளுக்கும் தீயிட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை திருக்கோவிலில் நிலைகொண்டிருக்கும் விசேட அதிரடிப் படையினர் மேற்படி கிராமத்தைச் சுற்றிவளைத்து ராஜா, கந்தசாமி, அரசரட்ணம், வடிவேல், விஜயன் ஆகியோருக்குச் சொந்தமான வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினர். தொடர்ந்து இப்பகுதியில்தேடுதல் நடாத்தி மூன்று பிள்ளைகளின் தந்தையான வரதன் குமார் (34), ஆறு பிள்ளைகளின் தந்தையான இராசா, ஐந்து பிள்ளைகளின் தந்தையான வடிவேல் ஆகியோரைக் கைது செய்து காஞ்சிக்குடா அதிரடிப்படை முகாமுக்குக் கொண்டு சென்றனர். அங்கு இவர்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டனர்.

FOUR TAMIL FAMILI S MURD R D AT VINAYAGAPURAM AMPARAI

Four families at Vinayagapuram village in the Amparai District were shot and killed bythe Sri Lankan Army, and several houses been burnt.

The occupied Thirukovil Spedial Task Forces seiged the above said village last Tuesday and burnt the houses of Rajah, Kandasamy Arasaratnam Vadivel and Vijayan. Continuing their search operation arrested Varathan Kumar(34 years) father of three children, Rasa father of 6 children and Vadivel father of five children and took them away to Kanjikkuda Task Force Camp. They were all murdered there.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

Date 01.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# மன்னார் பகுதியில் பொம்மர் குண்டு வீச்சு!

மன்னார் மாவட்டம், அடம்பன், பரப்புக்கடந்தான், குருவில் ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை 8-15 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை. (ஓ)

BOMBARDMENT IN MANNAR AREAS

2 Bombers motivated bombarding yesterday morning by about 8.15 at Adampan, Parapukkadanthan and Kuruvil in Mannar District.

Regarding the damages so far no information received.

Firing at Vavuniya. Travellers wounded.

Firing at Vavuniya - Jaffna February 1st.

Some of the travellers were subjected to injuries when a firing took place by the forces at Vavuniya Poonthottam area yesterday noon by about 12.00.

Ambigaipakar Thiagarajah (48 years)of Muthaiyankaddu critically wounded, admitted to Jaffna Hospital yesterday midnight.

# வவுனியாவில் சூடு! பயணிகள் காயம்!!

யாழ்ப்பாணம், பெப் 1 வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பயணிகள் சிலர் காயமடைந்தனர்.

காயமடைந்த முத்தையன்கட்டைச் சேர்ந்த அம்பிகைபாகர் தியாகராஜா (48 வயது) என்பவர் ஆபத்தான நிலையில் நேற்று நள்ளிரவு யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

வவுனியா நகருக்குள் பிரவேசிப்பதற்காக வரிசையில் சென்ற பயணிகள் மீது முதலில் படையினர் தாக்குதல் நடத்தினர் என்றும்

பின்னர் பயணிகளைத் திரும்பிச் செல்லுமாறு கூறி, அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பயணிகள் சிதறி ஓடிய போதே துப்பாக்கி வேட்டுக்களுக்கு இலக்கானதாகக் கூறப்பட்டது.

இதேவேளை, வவுனியாவில் இருந்து வடக்கே பயணிகளை வருவதற்கு படையினர் அனுமதி வழங்கினர் என்று அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். (ஓ-6)

It was stated that the forces first fired at the travellers who were in the queue to go to Vavuniya town and later fired at them ordering them to vacate the place.

When the travellers splitted everywhere and started running were trapped to the firing, it was said.

At the same time, travellers from Vavuniya to the North were permitted to travel, said some who came from there.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 02.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# முறிகண்டியில் குண்டு வீச்சு!

## மூவர் பலி; எண்மர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 2

நேற்று மாலை 5.15 மணியளவில் முறிகண்டி பிள்ளையார் கோயில் பகுதியில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலில் மூன்று பொதுமக்கள் உயிரிழந்தனர் என்றும் எட்டுப் பேர் வரை காயமுற்றதாகவும் முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

உயிரிழந்தவர்களில் ஒருவர் பயணி என்றும், மற்றைய இருவரும் முறிகண்டிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலினால் முறிகண்டிப் பிள்ளையார் கோவில் ஆலமரம் சேதமுற்றது. அருகில் இருந்த பல கடைகளும் சேதமுற்றன.

வீசப்பட்ட குண்டுகளில் ஒன்று வெடிக்கவில்லை.

ஆனையிறவு, பரந்தன் பகுதிகளிலும் நேற்று இரவு பொம்மர் தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

(உ-3)

BOMBER ATTACK AT MURIKANDY
3 DEAD: 8 INJURED.

Jaffna February 2nd.

Yesterday evening by about 5.15 p.m.bombardment activated on the areas of Murukandy Pillaiyar Temple.As per the earlier information three civilians subjected to death and nearly eight were wounded.

One person out of the dead ones being a traveller, the other two are from Murikandy areas.The banian tree of the Pillaiyar temple was damaged in this attack and also some boutiques in the vicinity were damaged.One bomb failed to explode out of the dropped ones.

Further,according to information,bomber attacks had been carried out at the areas of Elephant Pass and Paranthan.But these were not confirmed.

# செஞ். மருந்தகமும் குண்டு வீச்சில் சேதம்

யாழ்ப்பாணம், பெப். 2

புதுக்குடியிருப்பில் புதனன்று இடம்பெற்ற விமானத் தாக்குதலில் புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலய அகதி முகாமில் அமைக்கப்பட்டிருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மருந்தக நிலையமும் சேதமுற்றதாகத் தெரிய வருகிறது.

மேற்படி அகதி முகாம் சேதம் குறித்து ஆராய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் குழு ஒன்று நேற்று அங்கு விரைந்தது.

இதேவேளை இந்தத் தாக்குதலில் மொத்தம் 19 பேர் பலியானதாக யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் சுகாதார சேவை வைத்திய அதிகாரி எடுத்த புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

RED CROSS DISPENSARY ALSO DAMAGED BY BOMBING.

Jaffna February 2nd - The International group's dispensary for the refugees at the Puthukudiyiruppu Central Maha Vidyalaya refugee camp also damaged due to the bombarding which took place at Puthukudiyiruppu on Wednesday.

A group of Red Cross Officials hurried to the spot to check the damages in the refugee camp.

At the sametime a statis-
-tic taken by the Medical Officer of the Moving Health Service Red Cross

Date 02.02.1991 Name of Paper EELANAATHAM Clipping of News Papers

# யாத்திரிகர்கள் வாகனம் மீது ஹெலி தாக்கு; மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

சுவாமி தரிசனத்திற்காக சென்ற யாத்திரிகர்கள் மீது ஹெலி தாக்கியதால் மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்று நண்பகல் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அண்மையில் மேற்படி சம்பவம் இடம்பெற்றது,

அராலியிலிருந்து மிருசுவிலுக்கு கோயில் தரிசனத்திற்காக வாடகை வாகனத்தில் சென்றுகொண்டிருந்த யாத்திரிகர்கள் மீது இந்த ஹெலி தாக்குதல் இடம்பெற்றது

இத் தாக்குதலில் வாகன ஓட்டுநர் க. நித்தியானந்தனும் (வயது 48), அவரின் அருகில் இருந்த செ. தர்மகுலசிங்கம் மற்றொருவரும் காயமடைந்தனர். இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். (லோ, செ. தமை)

HELI ATTACK ON PILGRIMS VEHICLE.THREE WOUNDED.

Jaffna.

Helicopter attacked the pilgrim devotees injuring three. This incident took place yesterday noon close to Chavakachcheri hospital.This attack persuaded on to a hired vehicle in which the devotees travelled from Araly to Mirusuvil .

Driver of the vehicle K.Nithiyanandam (48 years) S.Tharmakulasingam who was by the side of him and another person subjected to injuries in the attack. They are under treatment at the Jaffna Teaching Hospital.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 02.02.1991 Name of Paper EELANAATHAM Clipping of News Papers

# வவுனியா ராணுவத்தின் மிலேச்சத்தனம்

# கொழும்புப் பயணிகள் மீது கண் மூடித்தனமான சூடு

## ஒருவர் ஸ்தலத்திலேயே பலி; மூவர் படுகாயம்

(வவுனியா)

கொழும்பு செல்வதற்காக காத்து நின்ற பொது மக்கள் மீது வவுனியா நகர காவலரணில் இருந்து இராணுவத்தினர் குறிபார்த்துச் சுட்டதில் ஒருவர் மரணமடைந்தார் மூவர் காயமடைந்தனர் காயமடைந்தவர்களில் ஒருவர் தலையில்குண்டடிபட்டு பாரிய காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வட பகுதியிலிருந்து வவுனியா ஊடாக கொழும்பு செல்வதற்காக நேற்று முன்தினம் நண்பகல் பெருந்தொகையான தமிழர் முண்டியடித்துக் கொண்டு நின்றனர். ஆனால் சிறிலங்கா இராணுவத்தினர் எவரையும் அனுமதிக்கவில்லை. பின்னர் திடீரென இராணுவத்தினரால் வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

ஒவ்வொரு வேட்டுக்களாகத் தீர்க்கப்பட்ட இந்த வேட்டுகளில் சிக்கிய ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். மூவர் காயமடைந்தனர். காயமடைந்த ஒருவருக்கு தலையில் சூடு பிடித்ததால் அவ்விடத்திலேயே வீழ்ந்தார். இதனைத் தொடர்ந்து மக்கள் பதறி அடித்துக் கொண்டு ஓடினர்.

மிகமோசமாக காயமடைந்தவரின் உடல் பலமணி நேரங்களின் பின் அங்கிருந்து அகற்றப்பட்டு வடபகுதி நோக்கி கொண்டுவர இராணுவத்தினர் அனுமதித்தனர். இவரது பெயர் அ. தியாகராசா (48) ஆகும். இவரது சகோதரன் அங்கு விரைந்து வந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சேர்த்தார்.

தலையில் காயமடைந்துள்ளதால் இவர் உயிர் தப்புவதற்கு உத்தரவாதம் தரமுடியாது என தமக்கு போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்து விட்டதாக அவர் நேற்று தெரிவித்தார்.

மேலும் வவுனியா தடைமுகாமினூடாக பொதுமக்கள் செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்காமையால் கொழும்பு செல்வதற்காகச் சென்ற நூற்றுக்கணக்கான பிரயாணிகள் நேற்றிரவு யாழ். நோக்கித் திரும்பியுள்ளனர்.

(லே) (மு)

BARBARISM OF VAVUNIYA ARMED FORCES. BLIND FIRING ON TO COLOMBO TRAVELLERS - ONE DIED ON THE SPOT, THREE WOUNDED.

VAVUNIYA.

One person died and three injured when the armed forces aimed and fired at the people from the guard point, who were waiting to go to Colombo. One of the wounded was very serious as the bullet strucked him on the head and was admitted to Jaffna Teaching Hospital.

A huge number of Tamils who wanted to go to Colombo through Vavuniya day before yesterday were hastily struggling but the Sri Lankan Army forces did not permit anyone. Later all of a sudden they initiated firing.

One person who was trapped to the intermittant firing died on the spot and three wounded. One of the wounded fell on the spot, as a bullt him him on the head. Consequent to this people scattered everywhere and started running.

After several hours of this incident, the forces permitted to remove the badly injured person to be taken towards north. He was known as one A.Thiagarajah (48 years). His brother hurried to the spot and took him away to Jaffna Teaching Hospital and admitted. His brother futher stated yesterday that the doctors of the Teaching Hospital informed him as the wounded is been hit on the head, they cannot guarantee his life.

Further, the hundreds of people who were to go to Colombo returned to Jaffna last night as the armed forces did not allow anyone going along the barrier camp.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

Date 03.02.1991 Name of Paper EELANAATHAM Clipping of News Papers

## பாடசாலை அகதிமுகாம் மீது விமானக் குண்டு வீச்சு

### மாணவி காலை இழந்தார்; மூவர் காயம்

(நல்லூர்)

கொக்குவில் கிழக்கு சிறீ இராமகிருஷ்ண மிஷன் சாரதா மகளிர் பாடசாலை நேற்றுப்பிற்பகல் 3.15 மணியளவில் சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சுக்கு இலக்காகியது. இந்தப்பாடசாலையில் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்திருந்த பல குடும்பங்கள் தங்கியிருந்தது தெரிந்ததே.

இரண்டு விமானங்கள் நான்கு குண்டுகளை வீசிச் சென்றன. இதனால் செல்வரத்தினம் கீதா (வயது 16 தையிட்டி) என்பவர் ஒருகால் சிதறிப் படுகாயம் அடைந்தார். மேலும் சின்னத்தம்பி அம்பிகாபதி (வயது 55) என்பவரும், அவரது மகள் பிரேமாவதி (வயது 27) கொக்குவில் கிழக்கு, சிறிஸ்கந்தராசா (49 வயது) ஆகியோரும் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதலில் பாடசாலைக்கட்டடமொன்று முற்றாகசேதமாக்கப்பட்டது அம்பிகாபதி என்பவரின் வீடும் பலத்த சேதமடைந்தது.

(85,க,மு)

BOMBARDMENT ON SCHOOL REFUGEE CAMP - Wife lost her leg. 3 wounded. Nallur

Kokuvil East, Sri Ramakrishna Mission Saratha Girls School subjected to Sri Lankan bomber attack, yesterday afternoon by about 3.15 p.m. It was well known that several families resided here, vacating their residences due to army operations.

2 Bombers went away propellin four bombs here. As such one Selvaratnam Geetha (16 years) had injured, her leg scattering to pieces. Further, Sinnathamby Ambigapathy (55 yrs) his daughter Premawathy (27 yrs) and Sriskandarajah (49 yrs) of Kokuvil East were wounded. A building of the school and the house of one Ambipathy were badly damaged due to the bombardment.

## வாதரவத்தையில் ஹெலிதாக்கு

## இரு சிறுவர் படுகாயம் வாகனங்கள், வீடுகள் சேதம்

(செ. த. மை)

வாதரவத்தைப்பகுதியில் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் உலங்கு வானூர்தி ஒன்று மும்முறை தாழப் பறந்து உக்கிரமான தாக்குதலை மேற்கொண்டது. இத்தாக்குதலின் போது வீதித் திருத்தத்தில் ஈடுபட்டிருந்த லொறியும் உழவு இயந்திரமும் 10 க்கு மேற்பட்ட வீடுகளும் விக்னேஸ்வரா சன சமூகநிலையமும் பலத்த சேதமடைந்தன.

விளையாடிக் கொண்டிருந்த இரு சிறுவர்களான வாதரவத்தையைச் சேர்ந்த த. பாரதிதாசன் (வயது 11), வி. சுதாகரன் (வயது 11) என்பவர்கள் படுகாயமடைந்தனர்.

HELI ATTACK ON VATHARAWATTE
TWO BOYS BADLY WOUNDED
VEHICLES, HOUSES DAMAGED.

A helicopter, thrice flying on a low altitude activated a notorious attack yesterday in the evening by about 4.00 p.m at Vatharavatte. A lorryand a tractor which were attending to road works along with more than ten houses and Vigneswara Public Social Centre resulted to damages.

The two boys from Vatharawattai namely T.Parathithasan (11 yrs) and V.Suthakaran (11 yrs) were badly wounded by the attack while playing.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 03.02.1991 Name of Paper EELANAATHAM Clipping of News Papers

# முழங்காவில், நாச்சிக்குடா சந்தி விமானக் குண்டு வீச்சு

## இருவர் காயம், கட்டடங்கள் சேதம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள முழங்காவில், நாச்சிக்குடாச்சந்தி ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்; வர்த்தக நிலையங்கள், பாடசாலைக்கட்டடங்கள், கமநல சேவை நிலையக் கட்டடம் என்பன பலத்த சேதமாக்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 8 45 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் மன்னாரிலுள்ள முழங்காவில், நாச்சிக்குடாச்சந்தி ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் முழங்காவிலைச்சேர்ந்த சிவகுரு (54), சந்திரன் (30) ஆகிய இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலினால் நாச்சிக்குடாச் சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம், கிராமமுன்னேற்றச்சங்கக் கட்டடம், நான்கு கடைகள் என்பனவும் முழங்காவிலில் பாடசாலைக் கட்டடங்கள் இரண்டும் கமநல சேவை நிலையக் கட்டடம் என்பன பலத்த சேதமடைந்தன.

(மு)

AIR BOMBING AT NATCHIKUDA JUNCTION AND MULANKAVIL.
2 INJURED. Buildings damaged.
(Mannar)

Two civilians received injuries by bo bardments at Mullankavil and Natchikuda junction in Mannar district. Business centres, Agrarian Service building and school buildings received severe damages.

Two Sri Lankan Air Force owned bombers yesterday morning by about 8.45 injure severely Sivaguru (54) and Chandran (30 yrs) of Mulankavil, when attacking Mulankavil and Natchikuda junction in the Mannar district.

The attack at Natchikuda junction damaged the fuel filling station, V.C. building and four boutiques, and at Mulankavil two buildings of the school and Agrarian building were badly damaged.

Date 03.02.1991 Name of Paper EELANAATHAM Clipping of News Papers

# மணலைக் கயிறாக்கும் முயற்சி

விடுதலைப் புலிகளைத் தவிர்த்து கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியாவும் - சிறிலங்கா அரசாங்கமும் முயற்சிப்பதாக சிறிலங்கா ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரான பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதனை உறுதிப்படுத்துவதுபோல் சிறிலங்கா ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின் பத்திரிகையாளருக்கு பேட்டி அளித்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் முஸ்சுந்துபே சிறிலங்காவிடம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறோ, அல்லது யுத்த நிறுத்தம் செய்யுமாறோ தாம் கோரவில்லை எனவும் தெரிவித்தார் மேலும் அந்தப் பேட்டியில் விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்த சிறிலங்கா அரசாங்கம் அதிகாரப்பரவலாக்கலை மேற்கொள்ள வேண்டும் என சிறிலங்காவிற்கு ஆலோசனையும் கூறியுள்ளார்.

அதாவது விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் சிறிலங்கா இராணுவத்தால் வெற்றிகொள்ளப்படவேண்டும் என இந்தியா எதிர்பார்க்கின்றது அத்தோடு கொழும்பில் வழும் ஏனைய தமிழ்க் குழுக்கள் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் இந்தியா எதிர்பார்க்கின்றது இதன் வெளிப்பாடே இந்தியவெளிவிவகார அமைச்சர் கொழும்பில் உள்ள ஏழு தமிழ்க்குழுக்களையும் சந்தித்துப்பேசியதாகும். இதனை பிரட்மன் வீரக்கோனும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்த நிகழ்ச்சிகளானது இலங்கைத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையில் இந்தியாவும் சிறிலங்காவும் இன்னமும் பழைய கொள்கைகளில் இருந்து மாறவில்லை என்பதையே தெளிவுபடுத்துகின்றது.

அதாவது தமிழ் மக்கள் மீது தாம் விரும்பிய ஒரு தீர்வைத் திணிப்பதும் தமிழ் மக்களின் பாதுகாவலர்களாகவுள்ள விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதும் என்பதே அவர்களது பழைய கொள்கைகளாகும்.

இதில் முதலாவதாக விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பது அவர்கள் இலக்காகவுள்ளது. ஏனெனில் தமிழர் மீது எந்தத் திணிப்பையோ அல்லது பிரச்சாரத்தையோ நிகழ்த்துவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்கப் போவதில்லை என்பதனாலாகும். இதற்கு கடந்தகால அனுபவங்களே போதுமானவையாகும்.

அடுத்ததாக சொந்தமண்ணிலும், மக்கள் மனத்திலும் நிலைத்துநிற்க முடியாது ஓடிப்போன தமிழ்க் குழுக்களின் மூலம் ஒரு பொம்மை அரசாங்கத்தை நிறுவுவதாகும். அதாவது கடந்தகால வடக்கு - கிழக்கு மாகாணசபை போன்றதொரு சபையை நிறுவுதலாகும்.

இவ்வாறு இந்தியாவை இந்தப் பிரச்சினையில் சிறிலங்காவுடன் இணைய வைத்தது தமிழீழ விடுதலைப் போராட்டமேயாகும். விடுதலைப் புலிகளின் கடந்தகால போராட்ட வரலாறு இலங்கையில் தமிழர் தேசிய இனப் போராட்டத்தை மட்டும் வளர்த்ததாகவில்லை. தென் ஆசியாவில் உள்ள பல தேசிய இனங்களுக்கு தங்கள் சுயநிர்ணய உரிமையைப் பற்றிச் சிந்திக்க வைத்ததோடு தேசிய இனப் போராட்டங்களை வெற்றிகரமாக எந்தப் பெரிய வல்லரசுகளுக்கும் எதிராக நடத்தலாம் என்ற உந்து சக்தியாகவும் அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக பல் தேசிய இன, மத மக்கள் வாழும் இந்தியாவில் தேசிய இனங்கள் தமது சுயநிர்ணயத்தைப் பற்றிச் சிந்திக்க வைத்துள்ளதெனலாம். இது இந்தியாவைப் பொறுத்து மிகவும் அச்சமூட்டுவதாகவுள்ளது.

ஏனெனில் இந்தியா பெயரளவில் மட்டும் சமஷ்டி அரசியலமைப்பைக் கொண்ட ஒரு நாடு ஆனால் உண்மையில் மத்திய அரசிடம் அதிகாரங்கள் முழுவதும் குவிந்து கிடக்கின்றன. அத்தோடு அரசியல்வாதிகள் யாவரும் குறுகிய நோக்கம் கொண்ட அதிகார ஆசை கொண்டவர்களாகவும் தேசிய நலனில் அக்கறையற்ற வகுப்புவாதப்போக்குடையவர்களாகவு உள்ளனர் இதனை இன்றைய இந்திய அரசியலில் பரவலாகக் காணலாம்.

இந்நிலையில் இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா அரசாங்கத்துடன் இந்திய அரசாங்கம் ஒத்துப் போவது தவிர்க்க முடியாததுதான் ஆனால், தேசிய இனப்போராட்டங்களை தாம் விரும்பியவாறு கையாளலாம் என இரு அரசுகளும் எண்ணுவதுதான் தவறானதாகும். அதிலு தமிழ்மக்களையும், அவர்களதுபோராட்டத்தையும். அதை வழிநடத்தும் புலிகளையும் அவ்வாறு எண்ணுதல் மிகவும் தப்பாகும்.

ஏனெனில் பிரச்சினையின் தீர்வு மண்ணுடனும் அதில் வாழும் மக்களுடன் தொடர்புடையது மண்ணிலிருந்து மக்களால் விரட்டப்பட்டவர்களுடன் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது அவ்வாறு தீர்வு காண்பதாக இருந்தால் அது சிலவேளை தமிழீழ மண்ணில் வாழாத தமிழருக்குரிய தீர்வாக இருக்கலாம்.

## ATTEMPT TO TWIST ROPE WITH SAND.

President's foreign affairs advisor Bradman Weerakone informed that the government with India is trying to solve Tamols problem through Tamil groups who are now at Colombo avoiding Liberation Tigers.

As if though to ascertain this, the Indian Foreing Affairs Secretary Musandubay said to the pressmen that the request did not anything regard to stopping the army activities in the North and East or about ceasefire from

Sri Lanka regime regarding stoppage of military activities in the North and East or about cease fire. He had also further adviced Sri Lanka inthe interview, to make the Tigers singleness, the government should adopt devolution of powers.

That means India expects the Sri Lankan Government to suppress the Liberation Tigers through military operations. Further she expects to strengthen the Colombo occupied Tamil groups. The output was the meeting xxxxTxxx between the Tamil groups and Indian Foreign Minister at Colombo. Bradman Weerakone too had admitted this.

This event very clearly reflects that India and Sri Lanka in Tamils ethnic problems have still not changed from their old policites.

Among this their first aim was to destroy the Liberation Tigers because, the Liberation Tigers will not permit anything to be inserted or to hold propagandas on Tamils.Previous experiences enough for all these.

Next to form a puppet regime through the abscond Tamil groups who were unable to unstable in the Tamil's minds and in their own soil.That is to form a Provincial Council like in the earlier stage of North and East.

As such the Liberation struggle of Tamil Eelam,only created the connection in the uprise between Sri Lanka and India.Not only the Liberation Tigers passed historical struggle maintained the Sri Lankan Tamils national uprising but also made to feel several nationalities in Asia to consider their self determination rights and made them to understand by its force that any national ethnic struggles could be successfully carried out even against the great powered countries. Particularly in India where several national ethnic and religious nationalities live, it had made them to feel their self determination rights could be mentioned. As far as India is concerned this is awful.

Because India although a federal formation government, but only in name sake and actually the powers are piled up with the Central Government.Further every politicians are narrow minded, quest of powers and are not in favour of national prosperities and communal minded.This may be sought broadly in today's Indian politics.

Surely as such the Indian Government co-operating with the genocide Sri Lankan regime cannot be prevented.But both these regimes imagining that they can handle national struggles as they wish is wrong.Among them,on such imagination their calculation on Tamils, their struggles and on the Liberation Tigers who direct the struggle is completely wrong.

Because a solution is completely left with the soil and with the people who are living init.Solution cannot be formed by anyone who were been chased away by the people from their soil. Supposing if a solution is made that may be to the Tamils who ever living out of Tamil Eelam.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

**Date** 03 - 02 - 91 **Name of Paper** U.T.H.A.Y.A.N **Clipping of News Papers**

# கல்வித் தடை

யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பாடசாலைகளில் இந்த வருடத்துக்கான முதலாம் தவணை இன்னும் இரண்டு நாட்களில் — புதன்கிழமை — ஆரம்பமாகிறது.

பாடசாலை மாணவருக்கு முதலாம் தவணை ஆரம்பமாகும் வாரமும் அதற்கடுத்த இரண்டு வாரங்களும் குதூகலமானவை. புதிய புத்தகங்களையும், புதிய கொப்பிகள் மற்றும் எழுதுகருவிகள், உபகரணங்களையும் அவர்கள் ஆசையோடு வாங்கும் காலம். புதியவற்றைப் படிக்க வேண்டும், புதியவற்றில் எழுத வேண்டும் என்ற ஆவலால் படிப்பில் ஆர்வம் கொள்ளும் விசேட காலம்.

ஆனால் தமிழ்ப் பகுதி மாணவர்களுக்கு இம்முறை அந்தக் குதூகலமும், ஆவலும், ஆர்வமும் இருக்க முடியாது. பாடநூல்கள் ஏதோ ஒரு விதத்தில் இரண்டாவது வாரத்திலாவது கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. அதனை உரியகாலத்தில் தருவித்தவர்கள் நன்றிக்குரியவர்கள்; ஆனால் கொப்பிகள், மற்றும் எழுதுகருவிகள் கிடைப்பது என்பது நினைக்க முடியாததையாகி விட்டன.

அரிசி, சீனி, மண்ணெண்ணெய் ஆகிய உணவுப் பொருள்களைப் போலவே கல்விக்குரிய எழுது சாதனங்களுக்கும் பெரும் தட்டுப்பாடு உருவாகியுள்ளது. காகிதாதிகளைக் கொழும்பில் இருந்து கொண்டு வருவதற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் தடை விதித்திருக்கிறது.

சாதாரண பிரசுரத்துக்குத் தேவையான காகிதாதிகளுக்கு மட்டுமன்றி, கல்வித் தேவைக்கான காகிதாதிகளும் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுமதிக்கப்படவில்லை.

காகிதாதிகளும் அதனோடு சம்பந்தப்பட்ட எழுது சாதனங்களும் கல்வியோடு, அறிவோடு சம்பந்தப்பட்டவை. அவற்றுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை, கல்வித்தடையாகும். அரசியல் ஒடுக்குமுறை, பொருளாதாரத் தடை ஆகியவற்றோடு கல்வித் தடையும் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறு எல்லாப் பக்கங்களாலும் — துறைகளிலும் — தமிழரை இறுக்கி, நெருக்கி அவர்களின் விடுதலை வேட்கையை சிதறடித்துவிட வேண்டும் என்ற சித்தாந்தத்தையே கொழும்பு அரசு தொடர்கிறது; தீவிரப்படுத்துகிறது.

இந்த இறுக்கமும், நெருக்குதலும் தமிழர்களுக்கு மேலும் சுதந்திர உணர்வினை ஊட்டுகின்றன என்ற உண்மையை கொழும்பில் உள்ளவர்கள் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறார்கள். அவர்களின் அந்தக் குறைபாடு, தமிழர்களைச் சுதந்திரத்துக்குச் சமீபமாக அழைத்துச் செல்கிறது என்பதே யதார்த்தம்.

நடப்பதெல்லாம் நன்மைக்கன்றி நானறியேன் பராபரமே — என்றவாறு, நிலைமையைச் சமாளித்து, மாற்று வழிகளையும், கடும் உழைப்பையும் தேடிக் கொள்வதை விட தமிழருக்கு வேறு மார்க்கம் இல்லை. இதனை அடிமைப் புத்தியுள்ள தமிழர்களில் சிலர் இப்போதாவது கிரகித்துக் கொள்ள வேண்டும்.

எமது மண்ணே எமது செல்வம்; எமது கையே எமக்கு உதவி, எமக்கு வாழ்வு என்பதை எல்லாத் தமிழர்களும் உணர்ந்து கொள்வோம்.

EDUCATION - OBSTRUCTIONS.

The first term to be curre year for the schools of Jaffna Peninsula will initiat after two days the Wednesday.

The first week of the first term test and the following two weeks are very interesting for the students These are days for them to buy new exercise books, new books and writing instruments along with furthe documents with eager to read new books and to write with new instruments, pupils get interesting these days.

But to the pupils of the Tamil region may not have those interest, eager and courage this time. There is a possibility of receiving text books by the second week The person who got these books in time had to be appreciated and thanked. But receiving exercise books and writing instruments cannot be imagined.

Like Rice, Sugar and Kerosene such as essential items now the educational instruments also out of stock. The Joint Forces Head Office had obstructed even to bring papers from Colombo into Tamil regions not only for ordinary publication even to educational level papers, they do not permit.

Stationeries and the writing instruments which are connected to it are combined with education and intellecutuality so the obstruction to this is a educational obstruction with political compress and economical blockades. This education obstruction too now been included.

As such the Colombo regime is having a nation of splitting the Tamils Liberation thirst by tightening and crushing in every sides and levels continuing its are increasing.

These tights and crushes are further more feeding the Tamils feelings of freedom, is a fact which the Colombo regime is unable to know using it's common sense.Their that defect is carrying the Tamils closer to freedom is natural.

In a conception of everything hap ens for good, the Tamils managing the situation had to seek for some alternative changes and hard work.As there is no other alternative for the Tamils at least now the few Tamils who are subjected to slavery mind shou d observe this.

This soil is our treasure.We will depend on our hands and let every Tamil feel as "our life".

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 03 - 02 - 91 Name of Paper U T H A Y A N Clipping of News Papers

# நாவற்குழியிலும் பொம்மர் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 3 நாவற்குழியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

குண்டுவீச்சில் ஒரு வீடு பலத்த சேதமடைந்தது. ஒருவர் காயமுற்றார். சீவல்தொழிலாளியான கைதடி நவபுரத்தைச் சேர்ந்த கந்தன் செல்லன் (41 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

காயமுற்றவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இப்பகுதியில் தென்னை மரங்கள் சில குண்டுவீச்சினால் நாசமாகின. (ஜ-15)

## BOMBER AT NAVATKULI TOO.

Jaffna February 3rd - Two bombers initiated bombing at Navatkuli yesterday morning by about 11 a.m. A house received severe damage and a person wounded. The injured was a tapping worker of Kaithady Navapuram known as Kandan Sellan (41 yrs) The injured was admitted to Jaffna Hospital. Several coconut trees were also affected in the bombardment.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 04..02...1991 Name of Paper E..E..L..A..N..D..U......... Clipping of News Papers

# சிறிலங்கா தேசியக் கொடி வாங்கிச்செல்ல வற்புறுத்து

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதி செல்வோர் சிறிலங்காவின் தேசியக் கொடியை வாங்கிச் செல்ல வேண்டுமென்று இராணுவத்தினரால் மிரட்டப்படுகின்றனர். சிறிலங்காவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இக் கொடியை வாங்கிச் செல்லவேண்டும் என்று இராணுவத்தினரால் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். வவுனியா யாழ் வீதி இராணுவ சோதனை முகாமைத் தாண்டிச் செல்வோர்கள் இராணுவத்தினரால் விற்பனை செய்யுதற்காக நியமிக்கப்பட்டுள்ளவர்களிடம் இதனை விலை கொடுத்து வாங்கிச் செல்ல வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வேளை சுதந்திரதின நிகழ்ச்சிகளை முன்னிட்டு, இராணுவம் வவுனியா நகரப் பகுதியில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக அறியப்படுகிறது (இ)

FORCED TO BUY SRI LANKAN NATIONAL FLAG. Vavuniya

Whoever intrude into Vavuniya Town ar as are been threatened to buy Sri Lankan national flag by the armed forces. "Regard to the Sri Lanka Independence day, these flags should bought", people are been forced this way by Army. The travellers who ever passes the checking point at the Vavuniya-Jaffna Road are been informed that they should by flags from the persons whom the army had appointed.

At the same, it is known that a strong defence protection had been arranged in the Vavuniya town areas by the army due to independence day.

# வீட்டிற்கு வராவிட்டால் வீடுகள் தகர்க்கப்படும்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து சென்ற குடும்பங்கள் மீண்டும் தங்களது வீடுகளில் குடியமர வேண்டும் என்றும் வீட்டு உரிமையாளர்கள் குடியிருக்காத வீடுகள் தகர்த்தெறியப்படும் என்றும் பூந்தோட்டம் இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூந்தோட்டம் பகுதியில் ஏற்கனவே பல வீடுகள் சிறிலங்கா இராணுவத்தினரால் தகர்த்து எறியப்பட்டும், தீ வைக்கப்பட்டும் உள்ளன.

தவிர, வவுனியா நகரப் பகுதியில் உள்ள பல கடைகள் மூடப்பட்டுஇருப்பதாகவும் அவை இயங்க வைக்கப்பட வேண்டும் அல்லாவிடில் முஸ்லிம்களுக்கு வழங்கி விடுவோம் என இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா இழமைச் சந்தையில் உள்ள பல கடைகள் கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் மூடப்பட்டு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது (இ)

HOUSES WILL BE BLASTED if NOT OCCUPIED (VAVUNIYA).

Inhabitants of Vavuniya Poonthottam areas, who had deserted must reoccupy their residences, if not, the unoccupied houses will be blasted" informed the Poonthottam occupied army.

Several houses of this Poonthottam area already been blasted and burnt. Apart from this the army had also announced that the closed boutiques at Vavuniya should be opened and functioned, failing which will be distributed among Muslims.

Several boutiques in the weekly market at Vavuniya are been closed since after last June, is to be mentioned.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

Date 04.02.1991 Name of Paper E E L A N D U Clipping of News Papers

## வவுனியா - பறநட்டகல் சந்தியில்

# ஹெலி எரிகுண்டுத் தாக்குதல் மூன்று மினிபஸ்கள் நாசம்!

(வவுனியா)

**வவுனியா மாவட்டத்தில் பறநட்டகல் சந்தியில் தரித்து நின்ற மூன்று மினிபஸ்கள் மீது சிறிலங்கா விமானப்படை ஹெலிகொப்டர்கள் எரிகுண்டுத் தாக்குதலை நடத்தியதில் மூன்று மினிபஸ்களும் முற்றாக எரிந்து நாசமாகின. அத்துடன் மினிபஸ்ஸில் இருந்த 22,000 ரூபா பணமும், வேறு பொருள்களும் எரிந்து போயின. நேற்றுக்காலை ஏழு மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.**

ஹெலிகொப்டர்கள் சுமார் ஒருமணிநேரம் இந்தத் தாக்குதலை நடத்தின.

நொச்சிமோட்டைக்கும், ஓமந்தைக்கும் இடையில் உள்ள குறிப்பிட்ட இந்தச் சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மினிபஸ்களே எரிந்து சாம்பராயின.

உடுப்பிட்டியைச் சேர்ந்த கதிரவேலு சர்வேஸ்வரன் என்பவரது (30ஸ்ரீ6822) மினிபஸ்ஸும், கொக்குவிலைச் சேர்ந்த நடராஜா யோகரட்ணம் என்பவரது (30ஸ்ரீ1750) மினிபஸ்ஸும், நீர்வேலியைச் சேர்ந்த காசிநாதர் குலசிங்கம் என்பவரது (29ஸ்ரீ6925) மினிபஸ்ஸுமே மேற்படி தாக்குதலுக்குஉள்ளாகி அழிந்தன.

குறிப்பிட்ட மினிபஸ்களுக்குள் வைக்கப்பட்டிருந்த பணமும், ஏனைய பொருள்களும், தீப்பிடித்து எரிந்து அழிந்தன.

இந்த மினிபஸ்களின் சாரதிகளும், நடத்துனர்களும் தாக்குதல் சமயத்தில் ஓடி பாதுகாப்பான இடத்தில் தங்கிக் கொண்டதனால் காயம் மற்றும் உயிரிழப்புகளிலிருந்து தப்பிக்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் மேலும் சிலவாகனங்களுக்குசிறிய சேதங்கள் ஏற்பட்டன. அருகில் உள்ள வீடொன்றும் சிறிது சேதமடைந்தது.

அரசபடையினரின் இந்த வான் தாக்குதலை அடுத்து பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களுக்கு ஓடிச் சென்றதை காணக்கூடியதாக இருந்தது. நொச்சிமோட்டை, பேயாடி, கூமாங்குளம், ஓமந்தை பகுதிகளில் தொடர்ந்து பீதி நிலவுவதை அவதானிக்க முடிந்தது. (தி)

AT• VAVUNIYA PARANATAKAL JUNCTION.

3 Minibuses DEVASTATED BY NEPALM BOMB FROM HELICOPTER.

-----

3 Mini buses completely burnt and devastated, which were halted at Paranatakal junction in Vavuniya district due to Nepalm bombing from helicopter. Further 22000 rupees in the bus and several other stuffs got burnt. This incident took place yesterday morning by about 7.00 A.M.

The helicopters atributed its attack for about one hour. The buses burnt, buses into ashes were been stopped inthe side junction in between Notchimottai and Omanthai. The mini bus owned to one Kadiravelu Sarveswaran of Udubiddy (numbering 30 Sri 6822) the mini bus owned to Nadarajah Yogaratnam of Kokuvil (numbering 30 Sri 1750) and the mini bus owned to Kasinathar Kulasingam of Neervely (numbering 29 Sri 6925) were the buses subjected to the attack and been destroyed.

Cash along with some other materials which were in the buses too got burnt with. The drivers and conductors of these buses escaped death and injuries as they fled to safety places when the attack initiated. Some vehicles and a house slightly damaged due to this attack.

It was visible to note several families de erting the area, aftdr the Sri Lankan Air raid. Further in Notchimottai, Payadi, Koolankal and in Omantai, civilians were seen in scaredness.

Date 04. 02. 1991 Name of Paper U T H A Y A N Clipping of News Papers

# விழிப்புணர்வு கனியட்டும்

பெப்ரவரி நான்காம் திகதி இன்று. பிரித்தானியாவிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற நாளாகக் கொள்ளப்படும் தினம்.

43 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் பெரும்பான்மையினரான சிங்களவர்களுக்கே உரியதாக்கப்பட்டது. தமிழர்களைப் பொறுத்த மட்டில் ஆளும் இனம் அவ்வளவு மாறியது: பிரிட்டிஷாரிடமிருந்து சிங்களவர்களுக்கு ஆட்சி அதிகாரம் கைமாறியது. வாளேந்திய சிங்கக் கொடியை தேசியக் கொடியாக நிர்ணயித்த போதே, சுதந்திரம் சிங்களவர்களுக்கு மட்டுமே; மற்றைய இனங்களுக்கல்ல என்பது மறைமுகமாக உணர்த்தப்பட்டது.

அன்றைய தமிழ் அரசியல்வாதிகள் எனப்பட்டோர் அதனைத் தெரிந்திருந்தனர்.

ஆனால் அந்தக் காலத்தில் பெருக்கும், புகழுக்கும், பொறுப்புக்கும் அரசியல் நடத்திய அவர்களால் தேசியக் கொடி என்ற ஆரம்பப் புள்ளி, தமிழர்களைப் பூரண அடிமையாக்கும் அளவுக்கு விரிந்து விஸ்தீரணம் அடையும் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. உண்மையான அரசியல் தீர்க்க தரிசனம் இருக்கவில்லை.

தமது சொந்தப் பதவி, அந்தஸ்து என்பன கருதி சிங்களவர்களோடு சேர்ந்து சுயலாபம் தேட விழைந்தார்கள்: சிங்கள அதிகாரபீடம் போடும் அற்ப சலுகைகளோடு திருப்திப்பட்டு, தமது வாழ்வை வளம்படுத்தினார்கள்.

அந்தப் பலவீனத்தைப் பசளையாக்கி, சிங்கள - பௌத்த பேரினவாதம் மெல்லமெல்ல வளரத்தொடங்கியது. அதன் அளவுக்கு மிஞ்சிய வளர்ச்சியால், தமிழர்கள் தமது சொந்த மண்ணுக்குக் கூட உரித்துடையவர் அல்லர்: அந்த உரிமையை அவர்களுக்கு வழங்கக்கூடாது என்று திட்டமிட்டுச் செயலாற்றும் அளவுக்கு இப்போதைய சிங்களச் சக்தி வளர்ந்துள்ளது.

1956 இல் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்தால் தமிழர் மத்தியில் அரசியல் விழிப்புணர்ச்சி அரும்பத் தொடங்கியது. அந்த அரும்பு பல்வேறு கட்டங்களையும், கஷ்டங்களையும் கடந்து இப்போது காயாகி முற்றிக் கொண்டிருக்கிறது.

தமிழரின் இந்த அரசியல் விழிப்புணர்ச்சியைக் கண்டு அஞ்சி, கொழும்பு அரசு அவர்களை அழித்தொழித்து விடுவதன் மூலமே உரிமைப் போராட்டத்தை ஒடுக்கலாம் எனக் கணக்குப் போட்டிருக்கிறது. இராணுவத் தாக்குதல், பொருளாதாரத் தடை, உளவியல் போர் என்றவாறும் அந்தக் கணக்கின் உத்திகளே.

இந்த உத்திகளைக் கண்டு மனம் சோராமல் தமிழர்கள் தமது உரிமைப் போராட்டத்தை மேலும் முன்னெடுத்தாக வேண்டும். சுயநலம், சுகபோகம், சந்தர்ப்பவாதம், அடிமைப் புத்தி, அவநம்பிக்கை ஆகியன களைந்து தன்னம்பிக்கையும், தளரா உறுதியும், மனவலிமையும் வளர்க்கப்பட வேண்டும்; அதன் மூலமே 43 வருட கால சிங்கள அடிமைத்துவத்தில் இருந்து மீண்டு, புத்தெழுச்சி காணமுடியும்.

இதே பெப்ரவரி 4 இல் உயிர் நீத்த தியாகி திருமலை நடராஜன், மாவீரன் சாள்ஸ் அன்ரனி முதற் கொண்டு இந்நாளில் களத்தில் மடியும் மாவீரன் வரையான இளம் நெஞ்சங்களுக்கு இருந்த மனஉறுதி, அடிமை விலங்கை உடைத்தெறிய வேண்டும் என்ற விழிப்புணர்வு எல்லாத் தமிழ் மனங்களிலும் மலர்வதாக!

## LET VIGILANCY BE RIPED.

Today is February 4th. A day said to be Independence received from British. The said Independence received about 43 years earlier is pertained by the Sinhalese only. As far as the Tamils are concerned only the ruling party had changed. From British, the regime and changed over to Sinhalese. When the flag consisting lion with the sword was determinated as national flag. Independence is only for Sinhalese was blind boldly pointed out as it was not for others but for Sinhalese only.

The then politicians were also knew this. But in those early periods, as they were only politicized for name, famous and wealth could not **realise** that the national flag is the initial point which with full galloo spread in a state to slavery of the Tamils. The actual conception of politics were not there.

Concentrating their own state and employment they involved with Sinhalese and tried to hunt for self profits with the triple facilities what the Sinhala powers offered they were satisfied and promoted their own life.

Converting that weakness into manure the Sinhala Buddha chauvanism, grow very fast due to the over extend of growth the Tamils are not entitled to their own soil. That right should not be given to Tamils. Up to such a level to scheme and activate the today's Sinhala generation had grown up.

When the Sinhalese only constitution was brought in 1956 political vigilancy in midst of the Tamils provoke. That bud had surpassed several stages and troubles and now a matured unriped fruit.

The Colombo regime admiring the Tamil political vigilancy scared and by anihilating them calculates to subdue their struggle for rights. Army attacks, economical blockades and phychological war were all attributed on that ground of tactics.

The Tamils without getting fed up with these tactics must further more carry on with the struggle. Selfishness, sensual delight, opportunism, slaveness and doubtfulness must be avoided and self determination, unhesitated firmness and mind of stillness must be increased. Only by this we may be able to once again become vigilanced from the 43 years of Sinhala slaverines.

# யாழ். பயணிகள் மீது கோட்டையில் தாக்கு!

யாழ்ப்பாணம், பெப் 4. கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்குச் சமீபமாக கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் வர நின்ற பயணிகள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்

பொல்லுகள், இரும்புக் கம்பிகளினால் இவர்கள் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தாக்கப்படும் சமயம் அப்பகுதியில் பொலிஸாரும் நின்றதாகத் தாக்குதலுக்கு இலக்காகி, நேற்று நள்ளிரவு யாழ்ப்பாணம் வந்த ஒருவர் தெரிவித்தார்.

கொழும்புநகரில் இப்போது திடீர், திடீரென இப்படியான சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருவதாக அந்தப் பயணி மேலும் கூறினார்.

(ஓ-3)

ATTACK ON JAFFNA TRAVELLEI
AT FORT.

Jaffna February 4th: Close to Colombo Fort Last Frid by about early morning 5.00 a.m. the passengers were waiting to travel towards Jaffna were severely attacked. It is said that they were hamme red with poles and iron bars.

A person who was subjected to this attack reached Jaffna last night and stated that there wer some Police Constables also in the area where the attack took place.

He further stated, now in Colombo events as such are very often taking place.

# சங்குப்பிட்டித் துறையில் நேற்று ஹெலித் தாக்கு!

யாழ்ப்பாணம், பெப். 4 சங்குப்பிட்டி துறைப் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று கடும் தாக்குதலை நடத்தியது. அதனால் அப்பகுதியில் நின்ற மினிபஸ் ஒன்று சேதமடைந்தது. இருவர் சிறு காயங்களுக்கு இலக்காகினர்.

ஹெலிகொப்டர் தாக்குதல் நடத்தத் தொடங்கியவுடன் அப்பகுதியில் நின்ற பயணிகள் சிதறி ஓடினர்.

பலர் தங்களது பொருள்களை அந்தந்த இடங்களிலேயே போட்டுவிட்டு நீரிணைப் பகுதிகளில் இறங்கி ஒளிக்க முற்பட்டனர்.

ஹெலி நீண்ட நேரம் வட்டமிட்டுத் தாக்குதல் நடத்திய போதும் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

HELI ATTACK AT SANGUPIDD
JETTY.

Jaffna February 4th

A helicopter at the Sangupiddy Jetty activat a severe attack yesterda evening by about 6.00 p. and a mini bus subjected to damaged while two persons received minor injuries.

Following this attack people scattered all ove and start running about. Some of the people leavi their goods aside trying to hide themselves in watercourse areas. Althou the Helicopter circled a fired for a long time no human damages involve

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 04 . 02 . 1991 Name of Paper U T H A Y A N Clipping of News Papers

# பெண்ணை தாக்கிய இராணுவம்

வவுனியா, பெப். 4
புளிச் சாக்குக்குள் கற்பூரத்தை மறைத்து வைத்துக் கொண்டு வந்த பெண் ஒருவர் வவுனியா இராணுவத்தினரால் பலமாகத் தாக்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கற்பூரத்தை பறித்தெடுத்த இராணுவத்தினர் அதைக் கொளுத்தி, வீதியில் விழுந்து கும்பிடுமாறு அந்தப் பெண்மணியைப் பணித்தனர்.

[ஓ 76]

THE ARMY WHICH ATTACKED A WOMAN.

Vavuniya Feb.4th: A woman was hammered by Vavuniya Army as she brought camphor concealed in a tamarind bag.This incident took place last Friday.

Pulling out the camphor from the woman the army personnel ordered her to lit them on the road and worship.

ARMY PLUNDE S PLASTIC CANS:

Vavuniya February 4th:- Plastic cans and empty manure bags which are brought by civilians been plundered at Vavuniya by the Army. Plastic cans containing coconut oil and kerosene oil which were ~~xxxxhx~~ brought by the travellers in the trains were plundered by the army day before yesterday.Even the plastic buckets and cans containing drinki g wa er too did not escape from them.

Now the public brings these items like coconut oil and kerosene oil in shopping bags, had to be mentioned.

# பிளாஸ்டிக் 'கான்'கள் படையினரால் பறிப்பு

வவுனியா, பெப். 4
வவுனியாவில் பொதுமக்கள் கொண்டு வரும் உரப் பைகளும், பிளாஸ்டிக் 'கான்'களும் படையினரால் பறிமுதல் செய்யப்படுகின்றன.

நேற்று முன்தினம் வவுனியாவுக்கு ரயிலில் வந்தவர்களால் பிளாஸ்டிக் 'கான்'களில் எடுத்துவரப்பட்டிருந்த தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய் 'கான்'களும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

பயணிகள் கொண்டுவந்திருந்த பிளாஸ்டிக் வாளிகள் மற்றும் தண்ணீர் 'கான்'களும் கூடத் தப்பவில்லை.

பொதுமக்கள் இப்பொழுது தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய் போன்றவற்றை "சொப்பிங்" பைகளிலேயே எடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [ஓ 76]

Date 04. 02. 1991 Name of Paper U T H A Y A N Clipping of News Papers

# பொருளாதார அடக்கு முறைகள் திருமலைத் தமிழர் மீது திணிப்பு

## ஜனசக்தி உதவிகளுக்கும் ஆப்பு

திருகோணமலை, பெப். 4

திருகோணமலையில் வாழும் தமிழர்கள் பல வழிகளிலும் ஸ்ரீலங்கா அரசின் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோருக்கான ஜனசக்திக் கொடுப்பனவுகளும் திருமலைத் தமிழர்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளன.

இராணுவ நடவடிக்கைகளால் ஏற்கனவே உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள இந்த மக்கள் தற்போது ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரப் பிடிக்குள் சிக்குண்டு வருகின்றனர்.

திருகோணமலை அரசாங்க அதிபர், கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்துக்கு வழங்க வேண்டிய கடந்த வருடக் கொடுப்பனவுகளை வழங்கவில்லை என்றும் — ஜனசக்தி திட்டத்தின் கீழான உணவுப் பொருள்களை வழங்குவது தடைப்படுவதற்கு இதுவே காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனசக்தி குடும்பங்களைச் சேர்ந்த குடும்ப அங்கத்தவர் இராணுவ முகாம்களுக்கு கட்டாயமாக அழைக்கப்பட்டு வேலை வாங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடமாட்டம் உள்ள பகுதிகளில் வாழும் அப்பாவித் தமிழ் விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடவும் படையினர் தடைவிதிக்கின்றனர். இப்படியான பகுதியில் இருந்து நாளாந்தம் கூலி வேலைக்குச் செல்லவும் தமிழ்த் தொழிலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ)

ECONOMICAL SUPRESS INSERTED ON TRINCOMALEE TAMILS

Fracture on "Janasakthi" Aids.

Trincomalee February 4th: The Trincomalee Tamil inhabitants on several ways affected by the Sri Lankan economical critic reveals an information received from there.

The Janasakthi programme which was formated for the people who are in the poverty circle, is been also obstructed for the Trincomalee Tamils. The people who were psychologically and bodily wise affected due to the Army's operation are now trapped into regime's economical hold. It was informed that the Government Agent of Trincomalee has not provided the last year dues to Co-operative Multi Purpose Societies and as such reasons foodstuff under Janasakthi scheme were not distributed.

Janasakthi involved family members are been forcibly taken to army camps for works, the information further revealed.

The innocent Tamil farmers are been obstructed in permitting permission in their inhabitant areas from cultivation, wherever the army move about independently, the report said.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 05 . 02 . 1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# கட்டாயப்படுத்தி சுதந்திரதினம் கொண்டாட வைத்தனர்

கொழும்பு செல்வதற்குச் சென்ற பயணிகள் நேற்றைய சுதந்திரதின விழாவைக் கட்டாயத்தின் பேரில் கொண்டாடியுள்ளனர்.

வவுனியா தடை முகாமினூடாக நேற்றும், நேற்று முன்தினமும் சென்ற பொதுமக்களை வவுனியா நகர்ப் பகுதியில் தடுத்துவைத்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்றைய சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் அவர்களைக் கட்டாயத்தின் பேரில் கலந்துகொள்ளச் செய்துள்ளார்கள். (மு)

FORCEFULLY MADE TO CELEBERATE INDEPENDENCE DAY.

Colombo travellers were made to celeberate the Independence day forcefully yesterday.

The Sri Lankan Armed Forces who detained the Colombo travellers yesterday as well as day before yesterday, who had to pass through Vavuniya barrier insisted them to participate in yesterday's Independence celebration.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 05 . 02 . 1991 Name of Paper EELANATHAM Clipping of News Papers

## சிறிலங்கா சுதந்திர தினத்தன்று

# உருத்திரபுரத்தில் பத்துப் பேர் விமானக் குண்டு வீச்சிற்கு பலி

## ஐந்துபேர் படுகாயம்; கடைகள், வாகனம் சேதம்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம் கூழாவடிச்சந்தியில் சிறிலங்கா விமானப்படை வீசிய குண்டொன்றில் சிக்கிய பத்துப் பேர் கொல்லப்பட்டனர். ஐந்துபேர் காயமடைந்தனர். சிறிலங்காவின் சுதந்திர தினமான நேற்று நடந்த இந்தக் குண்டுவீச்சில் பல கடைகளும் மினிபஸ்களும் சேதமடைந்தன.**

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் உருத்திரபுரம் பகுதியை வட்டமிட்ட இரண்டு சிறிலங்கா விமானப்படை விமானங்கள் திடீரென கூழாவடிச்சந்தியில் குண்டு ஒன்றை வீசியது.

குண்டுவீச்சு ஆரம்பத்தில் சந்தியில் நின்ற மக்களும், கடைகளில் பொருள்கள் வாங்கிக் கொண்டுநின்ற மக்களும் பாதுகாப்பைத்தேடி ஓடினர். இதில் பலர் மதகு ஒன்றின் கீழ் புகுந்து கொண்டனர்.

அதேவேளை விமானம் வீசிய குண்டொன்று மதகின் மேற்பகுதியில் விழுந்ததினால் மதகினுள் இருந்த பத்துப்பேர் பலியாயினர். ஐந்து பேர் படுகாயமடைந்தனர். இதில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அதேவேளை விமானங்கள் வீசிய ஏனைய குண்டுகள் கடைகளுக்கு அருகில் வயல் நிலப்பகுதியிலும் வீழ்ந்தன. அதனால் ஐந்து கடைகளும், சந்தியில் தரித்துநின்ற மூன்று வாகனங்களும் சேதமடைந்தன.

மதகின் அருகில் வீழ்ந்து வெடித்த குண்டினால் இந்திரா (வயது 35), குகன் (வயது 22), ரஜன் (வயது 14), சந்திரன் (வயது 14). காந்தன் (வயது

ON SRI LANKAN INDEPENDENCE DAY:

10 victimized to death at Urithirapuram by bombardment
Five seriously wounded - Shops vehicles damaged.

(Kilinochchi)

Bombardment carried out by the Sri Lankan Air Force at Urithirapuram Koolavadi junction in Kilinochchi district killed 10 persons, and injured five. The operation carried out on the Sri Lankan Independence day, yesterday also damaged several shops and mini buses.

Reports regarding this incident states: Two bombers which were circling above this particular area by about 1.00 p.m. at noon yesterday, suddenly dropped a bomb at Koolavadi junction.

At the initial stages of air bombardment, people at the junction, and people who were purchasing goods dashed in search of safety areas. Several took cover under a culvert. At this stage, a bomb from the bomber fell exactly at the entrance of the culvert and killed ten people who were under cover and injured five others. Among the injured one person was in a critical condition.

At the same time further dropped bombs fell on the shops and paddyfields. As such five shops and three vehicles at the junction received damages.

The bomb which fell close to the culvert killed Tharman (35 yrs) Kugan (22 yrs) Jegan (14 yrs) Chandran (14 yrs) Karathan (15 yrs) Rooban (21 yrs) Karunanithi (26 yrs) and further three on the spot.

Including K. Thavanesan (18 yrs) Rasan (13 yrs) and Rasendran (19 yrs) two received serious injuries. Among the injured, one was in critical position.

15), ரூபன் (வய: 21) கருணா
(வய. 26) ஆகியோருடன்
சேலும் மூவர் ஸ்தலத்தி
லேயே கொல்லப்பட்டனர்
கே தவநேசன் (வயது 18),
இராசன் (வயது 13). இராசேந்
திரம் (வயது 19) ஆகியோர்
உட்பட மேலும் இவர் படு
காயமடைந்தனர் அவர்களில்
ஒருவர் ஆபத்தான நிலையில்
உள்ளார். (க)

# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
# People's Front of Liberation Tigers

Date 5.02.1991 Name of Paper Uthayan Clipping of News Papers


### மதிய உணவுக்கான

## 7 மாத முத்திரைகளை மாணவர் இழந்தனர்

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் கடந்த ஏழு மாதங்களுக்குரிய மதிய உணவு முத்திரைகளை இழந்துவிட்டதாகத் தெரியவந்தது.

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு கடந்த மே மாதம் 18ஆம் திகதி தொடக்கம் மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பட்டு முத்திரை வழங்கும் திட்டம் அமுலானது.

இந்த முத்திரை வழங்கும் வேலைகள் அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

கடந்தவாரம் கொழும்பு சென்றிருந்த அரச அதிபரிடம் 1991 ஜனவரி மாதத்திற்குரிய முத்திரைகள் மட்டும் வழங்கப்பட்டன.

ஆறுமாத முந்திய மாதங்களுக்குரிய முத்திரைகள் முடிவடைந்துவிட்டன என்றும், அங்கு பாடசாலைகள் நடைபெறவில்லை என்றும் காரணம் கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

### FOR MID-DAY MEALS

### STUDENTS LOST FOOD STAMPS FOR SEVEN MONTHS.

Students in Jaffna District schools, have lost their Mid-day meal food Stamps for the past seven months.

Issue of Mid-day melas to Jaffna Schools were stopped in last May, 18th. and issue of food stamps were introduced.

The work of issuing food stamps was handed over to the Government Agent.

When the Government Agent was in Colombo last week, only food stamps for the month of January was handed over to him.

The reasons given ware that the Schools were not functioning prior to January and also that there is a shortage of Stamps.

## மட்டு. மாவட்டத்தில் தமிழர் பலர் கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களில் பல தமிழர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

40ஆம் கிராமத்தைச் சேர்ந்த இருவர் பெரியநீலாவணைக் கிராமத்தில் கடந்த 26ஆம் திகதியும்—

46ஆம் கிராமத்தைச் சேர்ந்த நால்வர் கடந்த 3ஆம் திகதி விறகு எடுக்கச் சென்ற போதும் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த 29ஆம் திகதி நண்பகல் மட்டக்களப்பு நகரில் டச் பாரைச் சுற்றி வளைத்த படையினர் கல்லடி உப்பு வெளியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மனோகரன் (வயது 20) என்ற இளைஞரைச் சுட்டுக் கொன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

### TAMILS SHOT DEAD IN BATTICALOA DISTRICT

Many tamils were shot dead in Batticaloa District for the past few days in various incidents.

Two from 40th Village at Periya-Neelavanai and four from 46th. Village on last 3rd, were shot dead by the forces.

On last 29th., the forces that cordorned the Dutch Bar area in Batticaloa District had shot one Antonipillai Manoharan(20yrs) from Kalldadi Uppodai.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

**Date** 06.02.1991 **Name of Paper** UTHAYAN **Clipping of News Papers**

# கிளாலி இறங்குதுறை குண்டு வீச்சால் சேதம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இரண்டு பொம்மர்கள் கிளாலி இறங்குதுறையை குறிவைத்து குண்டுகளை வீசித் தாக்குதலை நடாத்தின.

இத் தாக்குதலில் இறங்குதுறைப் பாலம் பலத்த சேதமடைந்தது. கரையில் கட்டி நின்ற பல வள்ளங்கள் உருக்குலைந்தன. தேவாலயம் ஒன்று பல வீடுகள் கடைகள் ஆகியனவும் சேதமடைந்தன.

வெடிக்காத நிலையில் இரண்டு குண்டுகள் மீட்கப்பட்டன. (உ-117)

## KILALI JETTY DAMAGED BY BOMBING

Two Bombers had their attakks on Kilali Jetty by about 5.30 p.m. on last Sunday.

The Jetty bridge got badly damaged on this attack.

Some boats which were on the Shores got damaged too. Houses,Shops and a Church got damaged.

Two un-exploded bombs were recovered.

# மணற்பிட்டியில் தாய், மகள் பலி!

யாழ்ப்பாணம், பெப். 6

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச் சோலை அருகே மணற்பிட்டியில் கடந்த சனியன்று இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு தாயும் மகளும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது (உ.)

## MOTHER AND DAUGHTER KILLED AT MANATPIDDY

In a gun firing attack launched by the Army at Manatpiddi area of Kokkadicholai in Batticaloa District,on last sunday, xxxxxxx a mother and her daughter got killed.

# மீனவர்கள் மீது படை தாக்குதல்

பருத்தித்துறைக் கடற் பகுதியில் சிறு படகுகளில் சென்று மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஸ்ரீலங்கா கடற் படையினரால் கடலில் வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## FORCES ATTACK THE FISHERMEN

Fishermen who were engaged in fishing at Pt-Pedro coastal area were subjected to severe attacks by the Sri Lankan Navy in the sea, by about 12.00 noon,yesterday.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

Date 06.02.1991 Name of Paper EELANATHAM Clipping of News Papers

# இரட்டை வேடம்போடும் சிறிலங்கா வெளியுறவு

வளைகுடாப் போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் போர் விமானங்களுக்கும் யுத்தக் கப்பல்கள் என்பனவற்றிற்கும் எரிபொருள் நிரப்புவதற்குரிய நிலை சிறிலங்காவில் ஏற்பட்டிருப்பதாக இந்திய வானொலி அறிவித்தது

அதேவேளை, வளைகுடாப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றைக்கான பெல்கிரேட்டில் நடைபெறவிருக்கும் அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ஹெரல்ட் ஹேரத் யூகோ செல்லாக்கியா செல்லவுள்ளார்.

இது சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கையில் உள்ள இரட்டை வேடத் தன்மையை தெளிவாகக் காட்டுகின்றது. சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கை தற்பொழுதுமட்டும் அல்ல எப்பொழுதும் இவ்வாறான இரட்டை வேடத் தன்மையைக் கொண்டதாகவே இருந்து வந்தது. அதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இவ்விரட்டை வேடத் தன்மை தெளிவானதாக இருந்து வருகின்றது.

இலங்கையில் இருந்து ஐரோப்பியர் வெளியேறினாலும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் ஐரோப்பாவின் சார்புக் கொள்கையையே கடைப்பிடித்து வந்தனர். 1956 ஆம் ஆண்டுவரை பிரிட்டனுக்கு விமானப்படை, கடற்படை என்பனவற்றிற்கு இலங்கையில் தளவசதிகளும் இருந்தன;

ஆனால், பின்னர் ஏற்பட்ட பிராந்திய சூழ்நிலை காரணமாக சிறிலங்கா அணிசேரா நாடுகளில் இணைய வேண்டிய நிலை ஒன்று ஏற்பட்டது தென் ஆசியப் பிராந்தியத்தில் இறைமையுள்ள அரசாக சிறிலங்கா இருக்க வேண்டியதாக இருப்பின் அணிசேரா இயக்கத்தில் சேரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஏனெனில் அன்று சிறிலங்காவின் மேற்குச்சார்ந்த போக்கு இந்தியாவிற்கு சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்தியா இலங்கையை ஒரு தனி அரசியல் அலகாக விடுவதா எனத் தீவிரமாக அன்று சிந்தித்தது இதனை அன்றைய சிறிலங்காவினது பிரதம மந்திரி எஸ் டபிள்யூ ஆர். டி பண்டாரநாயக்கா தெளிவாக உணர்ந்திருந்தார். இதனால் அணிசேரா இயக்கத்தில் இலங்கையும் இணைந்து நல்லுறவை வளர்த்துக் கொண்டது.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் எப்பொழுதும் மேற்குச் சார்ந்த போக்கே முதன்மைப்பட்டது.

இதேபோன்று அரபு நாடுகளின் விடயத்தில் சிறிலங்கா இரட்டைத்தன்மையான வெளியுறவுக் கொள்கையை கடைப்பிடித்து வந்தது. பொருளாதார நன்மைகளைப் பெறுவதற்காக அரபுலகம் சார்ந்த வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்த சிறிலங்கா அரசாங்கம் அதன் பிரகாரம் பாலஸ்தீனர்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்தது. அதேவேளை உள்நாட்டில் நெருக்கடிகள் தோன்றிய போது இஸ்ரேலிடம் நட்புப் பூண்டது. அதன் மூலம் உத்தியோகபூர்வமாக இஸ்ரேலின் உளவு ஸ்தாபனமான மொஸாட்டை நாட்டிற்குள் அழைத்ததோடு அமெரிக்க தூதுவராலயத்தில் இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவையும் அமைக்க அனுமதி கொடுத்தது.

இதேபோன்ற நிலைமையே வளைகுடாப்பிரச்சினையிலும் சிறிலங்கா கடைப்பிடிக்க முற்படுகின்றது. குவைத்திற்குள் ஈராக் ஊடுருவியபோது ஐ நா. ஈராக்கிற்கு எதிராகக் கொண்டுவந்த பொருளாதாரத் தடையை தான் கடைப்பிடிக்கப் போவதில்லை என அறிவித்தது தேயிலைக்கு சந்தை தேட முனைந்தது. ஆனால் இன்று அமெரிக்கப் போர்க் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்க சம்மதிக்கப் போவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன அதேவேளை அணிசேராக் கொள்கையின் கீழ் நடுநிலைமை வகிப்பதாக் கூறிக் கொண்டு பேச்சு வார்த்தை நடத்த பெல்கிரேட் செல்கின்றது.

இவ்வாறான கொள்கை மாற்றங்களும், இரட்டை வேடங்களும் சிறிலங்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் மட்டுமல்ல உள்நாட்டுக் கொள்கைகளிலும் பரவலாகக் காணலாம். அதாவது சமாதானத்தை நிலைநாட்ட கொலைகள் செய்கிறோம் என்பது சிறிலங்காவின் உள்நாட்டுக் கொள்கையாகும். இதிலிருந்து சிறிலங்காவின் தத்துவத்திற்கும் செயற்பாட்டிற்கும் உள்ள இடைவெளி தெரியவரும் இதனை இன்று இலங்கையில் உள்ள தமிழர்கள் தெளிவாக உணர்ந்துள்ளார்கள்,

தமது தேவைக்காக எந்தப் பேயுடனும் கூட்டுச்சேர நாம் தயார் என்பது முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர், ஜெயவர்த்தனாவின் கூற்றாகும். இதுவே அன்றும் இன்றும் சிறிலங்கா அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையுமாகும்,

இதனை இன்று முஸ்லிம்களுக்கும் சிறிலங்கா சிங்கள அரசாங்கம் மீண்டும் தெளிவாக உணர்த்தியுள்ளது முன்னரும் சில தடவைகள் சிறிலங்கா அரசாங்கம் உணர்த்தியதை முஸ்லிம்கள் உணரத் தவறிவிட்டார்கள் இன்று வளைகுடாப் போர் மீண்டும் அதை உணர்த்த போதுமானதாகும்.

## SRI LANKAN'S DOUBLE ACT ON EXTERNAL AFFAIRS

The All India Radio announced that Sri Lankan Government has agreed to fill fuel for the planes and ship of the Allied Countries under the leadership of America, that were engaged in Gulf War.

At the same time, Sri Lankan External Affairs Minister, Mr.Harold Herath is about to leave for the non-alligned Countries' Conference that is to be held in Belgrade to find a peaceful solution to the Gulf War.

This express the double act policy of the Sri Lankan Government on External

Affairs. This double act policy is not prevailing now only but always, especially when the United National Party is in power. This is very clear.

Even when the Europoeans got out of Sri Lanka, the Sri Lankan Government continued to adopt the westernized policy. They provided Base facilities for Britain up to 1956.

But due to territorial back grounds, a stage had arisen to Sri Lanka to to join the Non-Alligned Countries. If Sri Lanka wants to be a country of self soverignity in the South East Asia, it has to be a member in the Non-Alligned, because a suspision had ari e to India on its westernized policy. India was considering whether to allow Sri Lanka as a seperate Political wing or not. The then Prime Minister, S.W.R.D.Bandaranayake felt this and made Sri Lanka as a member in the Non-Alligned Countires.

But in U.N.P. regimes, westernized policy was in the forefront. Sri Lankan Government had adopted this double act policy with the Arabs Countries too. For the Economic benefits, Sri Lankan Government showed its pro-Arabs policy in External Affairs and recongnized P.L.O. At the same time, when the internal trouble took place in Sri Lanka, it got friendship with Istreal and thereby invited the Intelligent Squad MOSSAD into Sri Lanka and permission was granted to estabilish an Istrealian Welfare Centre in American Embassey.

Likewise, the same position was taken on Gulf War by Sri Lankan Government. When Iraque intruded into Quwait and United Nation imposed an Economic Barrier on Iraque, Sri Lanka opposed it, to find a market for their tea. But today, while fuelling the War Planes and Ships under the leadership of America, is taking part in the Belgrade Conference of the Non-Alligned. Such type of policy changes and double acts in both Sri Lanka's External and Internal Affairs are very common. That is 'Killings take place to maintain peace' is their Internal Policy. The interval between the policy and action will be elucidated by this. Sri Lankan Tamils are well experienced of it.

The former President, Mr.J.R.Jeyawardena, in a statement once told that he is prepared to join with any devil as far as it is favourable to him and it is the Sri Lankan Government's Internal and External policy.

The Sri Lankan Goverrment had explained this to the Muslims today. Earlier also the Sri Lankan Government made the Muslims to feel it. But they failed to realise it. Today the Gulf war is enough to make them to feel it.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

**Date** ....06.02..1991 **Name of Paper**......UTHAYAN.............. **Clipping of News Papers**

## வவுனியாவில் கொலைப்படை

வவுனியாவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் கொலைகாரக் கூலிப்படை ஒன்று இயங்குவதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது. கண்காணிப்புக் குழு என்ற பெயரில் இயங்கும் அந்த இனந்தெரியாத கோஷ்டியில், இராணுவத்தினரில் ஒரு சாரார் அங்கம் வகிக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளதாம்.

இந்த இனந்தெரியாத குழு மக்களைக் கண்டபடி கைது செய்கிறது. தங்கள் கண்ணிற்படும் எல்லோரையும் காரணம் எதுவுமின்றி, கேள்வி நியாயம் இல்லாமல் கைது செய்கிறது. அவ்வாறு கைதுசெய்யப்படுவோரில் 75 சதவீதமானோர் திரும்பி வரவில்லை. அவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள்!

இந்த அக்கிரமமான மனிதப் படுகொலைகள் குறித்து - அரக்கத்தனமான மனித உரிமை மீறலை - வவுனியாப் பிரசைகள் குழு அம்பலப்படுத்தி இருக்கிறது. அங்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் தூதுவரிடம் எடுத்துக்கூறி, அரச கூலிப் படையின் அராஜகமான மனிதக் கொலைகளை நிறுத்த உதவுமாறு விண்ணப்பித்துள்ளது.

இராணுவத்திலேயே ஒரு கூலிப்படையை — கொலைப்படையை — உருவாக்கி மக்களை அழித்தொழிப்பது இந்த அரசுக்கு ஒன்றும் புதியதல்ல. 1989ஆம் ஆண்டில் ஜே. வி. பி. கிளர்ச்சிவாதிகளை அழிப்பதாகக் கூறிக்கொண்டு அரசுக்கு ஆதரவளிக்காத 60 000க்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கொன்ற ''பச்சைப் புலிகள்'' புகழ் அரசல்லவா இது! அதே நடைமுறையைக் கைக்கொண்டு, தமிழர்களை அழிப்பது ஒரு பழக்கப்பட்ட ''கலை''யாக, தொழிலாகவே அதற்கு இருக்கும்.

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பது என்பது அவர்களை ஒழித்துக்கட்டுவதிலேயே உள்ளது என்ற கொள்கையுடன் அரசு செயற்பட்டு வருவது, தமிழ்ப் பகுதி நிலைமைகளைத் தெரிந்தவர்கள், புரிந்தவர்கள் அறிந்த விடயம். இராணுவ அக்கிரமங்கள், வான் தாக்குதல், பொருளாதாரத் தடை ஆகிய மார்க்கங்களுடன் கூலிப்படை மூலமான பேரளவு படுகொலையும் (Mass Murders) சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வளவு தான்!

இந்தத் திட்டமிட்ட இன அழிப்பை வெளி உலகம் இன்னும் அறிந்தும் தெரியாதது போல கண்களை மூடிக்கொண்டு இருப்பது மிகவும் வேதனைக்குரியது. மனிதாபிமானம், மனித உரிமை குறித்து அக்கறையுள்ளவை என்று பீற்றிக் கொள்ளும் பிரிட்டிஷ் மற்றும் வெளிநாடுகளின் பிரதிநிதிகள் தமிழ்ப் பகுதிக்கு வரவேண்டும்.

அவர்கள் தமிழ்ப் பகுதியில் பல நாட்கள் தங்கியிருக்க வேண்டுமென்றில்லை. இரண்டு மூன்று நாட்களிலேயே தமிழர்கள் எவ்வாறு இன அழிப்புச் செய்யப்படுகிறார்கள், அவர்களின் மனித உரிமைகள், மற்றும் அடிப்படை உரிமைகள், அடிப்படை வசதிகள் எப்படி மறுக்கப்படுகின்றன என்பதை மிக இலகுவில் தங்கள் நேரில் கண்டு கொள்ளலாம்.

வவுனியாவுக்கு வந்த பிரிட்டிஷ் தூதுவர் யாழ்ப்பாணத்துக்கும், மட்டக்களப்பிற்கும், திருமலைக்கும் வந்து தமிழர் அழிக்கப்படுவது குறித்து மேலும் விவரங்களை நேரில் கண்டும், கேட்டும், அறிந்தும் கொள்ளலாமே! அவர் மட்டுமன்றி ஏனைய நாட்டுத் தூதுவர்களும் அவ்வாறு செய்வார்களா? செய்தால் என்ன? செய்யின் அது ஒரு மனிதாபிமான, தார்மீக உதவியாக அமையும்.

MURDERING SQUAD IN VAVUNIYA

News had been reported that a murdering squad - mercenary is functioning in Army Controlled areas of Vavuniya. This un-identified groupe - a certain section of the Sri Lankan Army is functioning, under the disguise of Monitoring Groupe.

This unknown Groupe is arresting the people at random. They arrest all those who come accross without any reason, question and justice. Seventy five per cent of those arrested do not return back. They were killed.

The Vavuniya Citizen Committee has exposed these brutal killing and terrible violation of Human Rights to the British High Commissioner and sought his assistance to stop these atrocities.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 06.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

It is not a new thing, for the Sri Lankan Government to form a Mercenary - a Murdering Squad among the Army Personels to kill and massere thepublic. In 1989, under the name of Green Tigers, had destroyed more than 60,000 civilians, saying that they are supporters of J.V.V.uprisers. Following this, it is a habituated act to kill the Tamils and it is their profession too.

Government acting on the policy that 'Settlement of Tamils Issue is to kill the Tamils' is well known to those who know and understood the positions prevailing in Tamil areas. Military Excesses, Air Attacks,Economic Barriers are included along with the Mass Murders - that is all.

These planned Genocide is well known to the foreign countries but keeping their eyes closed is rather heartening. The Representatives from Eurapean and other Western Countries who boast their humanitarian and Human Rights should come to Tamil speaking areas.

They need not stay for several days,. A stay of two or three days would suffice to know about the Genocide and how the Human Rights and other Fundermental Rights are being violated and will be able to see them personally.

The British High Commissioner who had come to Vavuniya had failed to go for Jaffna,Trincomalee and Batticaloa. If he had, he would have seen,heard and experienced about the destruction of the Tamils. Not only the British High Commissioner but the representatives from other Ambassies too should follow. Why can't they? If they do, it will be a humanitarian,Dharmishta help.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date...06.02.1991 Name of Paper.........UTHAYAN........... Clipping of News Papers

## வவுனியாவில் தாக்குண்ட இளம் குடும்பஸ்தர்கள்

யாழ்ப்பாணம், பெப். 6

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த பல தமிழ் இளம் குடும்பஸ்தர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு ஆளாகிக் காயமடைந்தனர்.

இவர்களில் சிலர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

புளொட் மற்றும் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் இராணுவத்துடன் இராணுவமாக நின்றனர். அவர்கள் இளம் குடும்பஸ்தர்களை தமிழில் சில கேள்விகள் கேட்டனர். கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் மௌனம் சாதித்தவர்களையும், இல்லை என்று பதில் கூறியவர்களையும் இராணுவத்தினர் கடுமையாகத் தாக்கினர்.

இதுவரை இளைஞர்கள் மீது கவனம் செலுத்தி அவர்களை இம்சைப்படுத்திய இராணுவ — இயக்கப் பேர்வழிகள் இப்போது இளம் குடும்பத்தவர்கள் பக்கம் தமது கவனத்தைத் திருப்பி உள்ளனர்.

[அ-15]

### YOUNG COUPLES GOT ATTACKED IN VAVUNIYA

A Jaffna bound young couple from Colombo, were subject to the attack of the Army Personels at Vavuniya, last Sunday.

Some of them got treatment in Jaffna Hospital, soon they reached Jaffna.

Members of the PLOTE and other groupes were there with the Army. They question the couples in Tamilx and when they kept silent or give a negative reply, the Army assault them very badly.

The army and the tamil groupes which were torturing the youths earlier, had turned their attention towards young couples and harass them.

## பாதுகாப்பு வலயத்தில் நேற்று ஹெலித் தாக்கு!

யாழ். போதனா ஆஸ்பத்திரியின் பாதுகாப்பு வலயத்திற்குள் நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

யாழ். நகரப் பகுதியில் சுமார் பத்து நிமிட நேரம் வட்டமிட்ட ஹெலிக்கொப்டர் அப்பகுதியில் விட்டுவிட்டு வேட்டுக்களைத் தீர்த்தது. இதனால் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கடை, கட்டடங்களில் ரவைகள் விழுந்து தெறித்தன.

நாவாந்துறை, காக்கைதீவு ஆகிய பகுதிகளிலும் ஹெலித் தாக்குதல் இடம் பெற்றது.

[உ-15]

### HELI ATTACK IN SECURITY ZONE

The Security Zone area of Jaffna Teaching Hospital was subject to Heli attack yesterday by about 8.30 in the morning.

The Heli that was circling round the Security Zone for about 10 minutes, started its intermittant firings. The bullets came towards the shops and the buildings in Hospital Road.

There were Heli attacks in Navanthurai and Kakkaitivu areas too.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 07.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# இரவில் ஹெலி தாக்கு; ஷெல்லும் பயங்கரம்

யாழ்ப்பாணம், பெப்.7

நேற்று முன்தினம் இரவு மாவிட்டபுரம், தச்சன்காடு பகுதியில் கடும் சண்டை நடந்து கொண்டிருந்த சமயம், ஹெலி சுற்றிச் சுற்றி பல இடங்களிலும் - இலக்கு ஏதுமின்றி - கண்ட கண்ட இடங்களில் எல்லாம் தாக்குதலை நடத்தியது.

அதே வேளை பலாலி, கட்டுவன், காங்கேசன்துறை முகாம்களில் இருந்து குடியிருப்பு பகுதிகளை நோக்கி பயங்கர ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டது.

இரவு சுமார் 9 30 மணியளவில் ஆரம்பமான இந்தத் தாக்குதல் அதிகாலை வரை நீடித்தன. 50க்கு மேற்பட்ட 'பரா' வெளிச்சக் குண்டுகளும் ஏவிவிடப்பட்டன.

வலி. வடக்குப் பகுதி மற்றும் சுன்னாகம், மருதனார்மடம், உரும்பிராய், மானிப்பாய், கட்டுடை பகுதிகள் எங்கும் ஹெலி [illegible]வாக தாக்குதலை நடத்தியது.

மல்லாகம், தெல்லிப்பழை, ஏழாலை, அளவெட்டி, பன்னாலை, கீரிமலை, மானிப்பாய், கொல்லங்கலட்டி மற்றும் பல பகுதிகளிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

ஹெலி, ஷெல் தாக்குதல்களினால் வீடுகள், கட்டடங்கள், பயன்தரு மரங்கள், பயிர்கள் என்பன நாசமாகின. (ஓ 68-15-100)

## HELI ATTACK AT NIGHT - DANGEROUS SHELLING TOO

A Heli involved in its attack round and round blindfoldly without any targets while a confrontation took place in Maviddapuram, Thachchankadu areas at night day before yesterday.

At the same time there were terrible shell attacks towards the residential areas from Palali, Kadduvan and K.K.S. Camps.

The attacks started by about 9.30 p.m. and continued till dawn. More than 50 para-lights bombs were launched too.

Heli had its attack on Vali North areas, Chunnakam, Maruthanamadam, Urumpirai, Manipay and Kollankaladdi areas. Shells fell and exploded in Mallakam, Tellipallai, Earlalai Alaveddi, Pannalai, Ke rimalai and Manipay areas.

Houses, buildings, trees and crops got amaged.

# தாண்டிக்குளத்தில் கட்டடங்கள் சேதம்

வவுனியா, தாண்டிக்குளத்திலும் நேற்றுக் காலை 6 மணிக்கு அகோர குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நான்கு பொம்மர்கள் மாறி மாறி சுமார் இருபது குண்டுகள் வரை வீசியதாகவும்—

நான்கு வீடுகளும் மூன்று கடைகளும் முற்றாகச் சேதமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

## BUILDING GOT DAMAGED AT THANDIKULAM

There was a severe bomber attack at Thandikulam in Vavuniya yesterday by about 6.00 in the morning. Four bombers had thrown about 50 bombs repeatedly in turn. Four houses and three shops were razed to the ground.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

Date 07.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

## கொல்லங்கலட்டியில் பொம்மர் அனர்த்தம்:

# குண்டுவீச்சில் கோவில் சேதம்! அர்ச்சகரின் மனைவி மரணம்!!

### மடியில் இருந்த குழந்தை தப்பியது

யாழ்ப்பாணம், பெப். 7

மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி பகுதிகளில் நேற்று மாலை சுமார் 4மணி தொடக்கம் பொம்மர்கள் ஐந்து தடவைகள் குண்டு வீசுத் தாக்குதல்களை நடத்தின.

கொல்லங்கலட்டியில் வீரகத்திப் பிள்ளையார் கோவில் மீதும் குண்டு வீசப்பட்டது. கோவில் பெரும் சேதமடைந்தது. கோவிலில் நின்ற அர்ச்சகர் ஒருவரின் துணைவியாரான உருத்திரகோடீஸ்வரக் குருக்கள் இசைவாணி (39 வயது) என்பவர் உயிரிழந்தார்.

அவருடைய மடியில் இருந்த 36 நாள் வயதுக் குழந்தையும், அவரை அரவணைத்துக் கொண்டிருந்த மற்றும் இரு குழந்தைகளும் காயம் ஏதுமின்றித் தப்பிக்கொண்டன.

எனினும் அதே குடும்பத்தைச் சேர்ந்த எழுவர் காயமடைந்தனர். உயிரிழந்தவரின் கணவரான தியாகராசா உருத்திரகோடீஸ்வரக் குருக்கள் (48 வயது), தியாகராசா ஜெகதீஸ்வரன் (39 வயது), தியாகராசா வைத்தீஸ்வரன் (42 வயது), அவரது மனைவி இராசபூபதி (40 வயது), இரு கண்களும் பார்வை இல்லாதவரான தியாகராசா பிரபாகரன் (35 வயது), வரதராசன் ஜெகத்ஜெனனி (41 வயது) அவரது மகள் தேன்மொழி (6 வயது) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கோவில் கொடிஸ்தம்ப மண்டபம், வசந்த மண்டபம், நிருத்த மண்டபம், வடக்கு வீதி கொட்டகை ஆகியன பெரும் சேதமடைந்தன

(ஓ-15)

MEANINGLESS ATTACKS IN KOLLANKALADDI

TEMPLE DAMAGED - PRIEST'S WIFE DEAD

INFANT ON THE LAP ESCAPED

Jaffna, Feb.7

Five attacks were carried out by Bombers from 4.00 p.m. yesterday, in Maviddapuram - Kollankaladdi areas.

A Bomb was blown on Veeragathipillaiyar Kovil and the temple ogt damaged. The wife of the temple priest Mrs.Isaivani Uruthirakodeeswara Kurukkal got killed.

A 36 days old baby ~~xxx~~ on the lap and the other two children clustering her at that time, escaped without any injuries.

But the seven members of the same family got injured. The dead lady's husband, Thiyagarajah Uruthirakodeeswara Kurukkal(48yrs), Thiyagarajah Jegatheeswaran (39yrs), Thiyagarajah Vaideeswaran(42yrs), his wife Rasapoobathy(40yrs), Thiyagarajah Brabaharan(35yrs) a blind, Varatharajan Jegathgeni(41yrs) and her daughter Thenmoli(6yrs) are those injured.

Front portion of the temple got fully damaged.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

Date 08.02.1991 Name of Paper UTHAYAN **Clipping of News Papers**

# மீசாலை குண்டு வீச்சில் சிறுவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் பெப் 8

கொடிகாமம், மீசாலைப் பகுதிகளில் நேற்று மாலை சுமார் 5 மணி தொடக்கம் விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

மீசாலை ரயில் நிலையத்துக்கு அருகில் நடத்தப்பட்ட குண்டு வீச்சில் சுமார் 14 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். அச்சிறுவனின் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது.

உயிரிழந்த சிறுவனின் பெயர், விவரம் தெரியவரவில்லை.

குண்டு வீச்சில் ஏற்பட்ட முழு சேத விவரம் கிடைக்கவில்லை (ஓ 15)

BOY KILLED IN A BOMB ATTACK AT MEESALAI

Air attacks were carried out in Kodikamam - Meesalai areas, yesterday evening from 5.00.

A boy of 14 years, got killed in the attack that took place near the Meesalai Railway Station and the body was kept in the Hospital.

Particulars regarding the boy and the other damages caused in this incident are not known.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

Date 08.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

## தமிழருக்கு நிவாரணம்

இராணுவ முகாம்களின் உள்ள பகுதிகளில் இருந்து வெளியேறி, இடம் பெயர்ந்தவர்களுக்கு மேலதிக நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

குறிப்பாக பலாலி, காங்கேசன்துறை, மயிலிட்டிப் பகுதிகளில் இருந்தும் ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பகுதிகளில் இருந்தும் இடம் பெயர்ந்தவர்களுக்கு மேலதிக நிவாரணம் வழங்க வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்கள் கேட்கிறார்கள்.

வடக்கு கிழக்குப் பிரதேசமெங்கும், தமிழர்கள் வாழும் பகுதிகள் எங்கும், கடந்த எட்டு மாதங்களாக இராணுவத் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றால் தமிழர் தாயகம் முழுவதிலும் பரந்து வாழும் ஒவ்வொரு தமிழனும் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளான்; பாதிக்கப்படுகிறான். உறவினர் இழப்பு, உடைமை இழப்பு, வாழ்க்கை சீர்குலைவு, தாக்குதலுக்கு உள்ளாகிக் காயமுறுதல் என்று ஏதோ ஒரு பாதிப்பால் ஒவ்வொருவரும் அல்லற்படுகிறார்கள், அவலமுறுகிறார்கள். பாதிப்புகள், தாக்கங்கள் பொதுவாக எல்லாத் தமிழர்களுக்குமே உண்டு.

எனினும் கிழக்கு வாழ் தமிழ் மக்களின் அவலங்கள், துன்பங்கள், கஷ்டங்கள் கனமானவை. எழுத்தால் அளக்க முடியாதவை. வடபகுதித் தமிழர்களுக்கு நிவாரணமாவது கிடைக்கிறது. ஒதுங்கி இருக்க உறவினரின் வீடோ அகதி முகாமோ உண்டு. நிவாரணமும் பெற முடிகிறது. கிழக்குத் தமிழ் மக்களோ சொந்த வீடுகளிலும் இருக்க முடியாது; உறவினர் வீடும் இல்லை; அகதி முகாம்களிலும் தங்க முடியாது காடுகளில் தஞ்சமடைந்து உணவின்றி உயிர்மாள வேண்டியுள்ளது.

வடக்கில் ஏனைய பகுதி மக்களை விட இராணுவ முகாம்களை அண்டி வாழ்ந்தவர்கள் பலவகைகளாலும் பாதிக்கப்பட்டவர்கள். அதில் இரண்டு கருத்துகள் இருக்க முடியாது. அவர்கள் தங்களுக்கு ஏனையவர்களை விட மேலதிக நிவாரணம் கோருவது நியாயமானதே.

ஆனால் எட்டு மாதங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மூன்றரை மாதங்களுக்கு [14 வாரங்களுக்கு] மட்டுமே தமிழ்ப் பகுதிகளில் நிவாரணம் வழங்க இதுவரை அரசாங்கம் முடிவு செய்துள்ளது. [இதுவரை 8 வாரங்களுக்குரிய நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது]

எனவே அரசு பொதுவான நிவாரணம் அல்லது விசேட (மேலதிக) நிவாரணம் எதையும் வழங்குமா என்பது கேள்விக் குறியே. தமிழர்களைச் சொந்த நாட்டு மக்களாகக் கருதினால் அது அவர்கள் மீது குண்டு வீச்சு நடத்துமா? எனவே அரசு தமிழர்களுக்கு நிவாரணம் வழங்கும் என்று எதிர்பார்க்க இடமில்லை.

அரசு தான் செய்யும் பாவத்தைப் போக்குவதற்கான ஒரு தர்ம காரியமாகவேனும் தமிழருக்கு நிவாரணம் வழங்குமா என்பது சந்தேகமே.

இதனை எடுத்துக் கூறி, சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களிடம் இருந்து நிவாரணம் கேட்க வேண்டும். அதனைப் பெறக்கூடிய விதத்தில் தமிழர் நிலையை அவற்றுக்கு விளங்கப்படுத்த வேண்டும். இதற்கென விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியம்.

## RELIEFS FOR TAMILS

A request had arisen to issue additional reliefs for those who got out and displaced from the Army occupied areas.

Particularly for those who were displaced from Palaly, K.K.S., and Myiliddy areas and from Kayts and Karainagar areas. This request was made by those who were concerned.

Military Operation is going on in every nook and corner, where the Tamils are living in North and Eastern provinces for the past eight months. By this, all living in Tamil Homeland were - being affected

somehow or other and still are being affected. Every one is subject to clamity and sorrows by loss of persons, loss of properties, devastation of life, injuring by attacks and etc. Damages and attacks were common to all tamils.

But the sorrows, clamities and the agonies of Tamils in the East are terrible and is beyond describing in words. Tamils in the North are able to get reliefs and houses of relatives or refugees' Camps to stay. But the Tamils in East are dying without food and shelter. Neither relatives houses nor refugees' Camps are available for them.

In North, people in and adjoining Army occupied areas were affected in many ways. There is no doubt in it. A request for additional reliefs is reasonable.

But the Government had decided to distribute relief items for 14 weeks - that is for 3½ months. So far 8 weeks' reliefs were given for those who were affected for the last 8 months.

Hence it is a question whether the Government will issue any further or additional reliefs. If the Government conider the tamils as the citizen of Sri Lanka, will they have bomber attacks on Tamils? Therefore we cannot expect the Government will distribute any reliefs to the Tamils.

It is doubt that the Sri Lankan Government will give any further reliefs to compensate the sins committed by it to the Tamils.

This should be brought to the notice of the International Donor Agencies and reliefs should be requested. Special attempts should be taken to explain the plight of the Sri Lankan Tamils to the Donor Agencies and to get the reliefs direct.

தமிழர் தரப்பில் இருந்து இலங்கையின் வடக்கு கிழக்குப் பாகங்கள் தமிழர் தாயகம் என வைக்கப்படும் சகல வரலாற்றுச் சான்றுகளையும் ஒதுக்கித் தள்ளி விட்டாலும் பௌத்த சிங்கள அரசாங்கம் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் இல்லை என்பதற்காக வைக்கப்படும் காரணங்கள் எதுவும் நவீன அரசியற் கோட்பாடுகளினால் ஏற்க முடியாதவையாகும்.

வல்லிபுரப் பகுதியை சிங்கள மன்னனின் பிரதிநிதி ஆண்டான். அங்கொரு புத்தர் கோயில் கட்டப்பட்டது என்பது வல்லிபுரப் பகுதி தமிழர் தாயகம் இல்லை என்பதற்கோ, இலங்கையின் முழுமையாட்சி அமைப்பு வலுப்பட்டிருந்தது என்பதற்கோ போதுமான சான்றாகக் இல்லை. அவ்வாறு இருக்குமெனில் அவை தக்க சான்றாகக் கருதப்படுமானால் இலங்கை பூராகவும் எல்லாளன் ஆண்டான் என்பதற்காக இலங்கை பூராவும் தமிழர் தாயகம் என்ற வாதத்தையும் சிங்களவர் ஏற்கவேண்டி வரும்;

இதே போன்று இராஜ இராஜ சோழன் காலத்திலும், இராஜேந்திர சோழன் காலத்திலும் கூட இலங்கையின் பெரும் பாகம் தமிழர் ஆதிக்கத்தில் இருந்தது. இந்து ஆலயங்கள் அநுராதபுரத்திலும், பொலநறுவையிலும் கட்டப்பட்டன. இதனை வைத்துக் கொண்டு அப்பகுதிகளும் தமிழர் தாயகம் என வாதிட்டால் சிங்களவர் அதையும் ஏற்றுக் கொண்டு தான் ஆகவேண்டும்.

இதற்கு மேலாக இலங்கையை ஐரோப்பியர்கள் 442 வருடங்கள் ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் நாடு பூராவும் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து தேவாலயங்களைக் கட்டினார்கள் அந்த நாட்டு [illegible] ஆட்சி செய்தார்கள். ஆகையால் இதனைக் கொண்டு ஐரோப்பியர் இப்பூமி ஐரோப்பியருடையது என தென்னாபிரிக்காவில் வாதிடுவதைப் போல வாதிட்டால் அதையும் பௌத்த சிங்கள பேரினவாதிகள் ஏற்றுக் கொண்டு தான் ஆகவேண்டும்.

மறுவளமாக நேபாளத்தில் தோன்றிய பௌத்தம் இன்று ஜப்பான் வரையும் பரந்துள்ளது. இன்று கிழக்காசியாவிலேயே பெருமளவு பௌத்தர்கள் வாழ்கின்றார்கள். இந்நிலையில் பௌத்த மடாலயங்கள், விகாரைகள் இருக்கும் இடமெல்லாம் சிங்களவருடையது என பௌத்த சிங்கள பேரினவாதிகள் வாதிடலாமே? ஏன் அவ்வாறு அவர்கள் வாதிடுகிறதில்லை?

ஒரு மன்னனின் திறமையால் ஆட்சி படர்ந்து விரிவதும் பேரரசுகள் உருவாவதும், திறமையற்ற மன்னர்களால் பேரரசுகள் அழிந்ததும் தான் வரலாறு. இதே போன்றே மதங்களும் காலத்திற்கேற்ப உருவாவதும் பரவுவதும், அழிவதும் ஆகும்.

இதனால் இவற்றை வைத்துக் கொண்டு சிங்கள மன்னன் ஆண்டான் பௌத்த சமயம் பரவியது; இதனால் இது தமிழருடையது அல்ல எங்களுடையது என வாதிடுவது மடமைத்தனமாகும்;

மேலும் பௌத்தம் தனியாக ஓர் இனத்திற்கு உரியதும் அல்ல. வேற்று இன மன்னன் ஆண்டான் என்பதற்காக மண்ணின் மீதான மக்களின் ஆளுமை மாறிவிடுவதில்லை;

according to the modern political theory.

It is not a valid proof to say that the Vallipurakkovil area was ruled by a prepresentative of a Sinhalese king or a Buddhist temple was built there. Otherwise if it is sufficient, then the Sinhalese will have to accept that the whole of Sri Lanka was occupied by the Tamils for the reason that King Ellarlan ruled whole of Sri Lanka.

Then the Sinhala Buddhists willhave to accept that. Sri Lanka belongs to Europeans, like in South Africa on the ground that they ruled Sri Lanka for 442 years and built Catholic Churches throughout the Island.

On theotherhand, Buddhism has originate in Nepal and extended to Japan. Today most of the buddhists are confined to South East Asian. At this stage, the places where you find Buddhist temples and Vihares cannot be claimed as that of Sinhalese, by the Sinhala Buddhists Why can't they claim that too?

Extension of powers and the creation of powers depends on the ability of and the determination of the King concerned and the destruction is also of the same. Likewise, religion too has its orientation, extension and destruction to suit thetime.

Keeping this in mind, it is rather foolish to argue that the Sinhala King ruled and Buddhism got spreaded and hence it is not of the Tamils but ours.

Further, Buddhism is not confined to Sinhalese. The Soverignity of the peopl on land cannot be changed for the reason that it was ruled by another race.

# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
# People's Front of Liberation Tigers

PFLT

**Date** 08.02.1991 **Name of Paper** EELANATHAM **Clipping of News Papers**


தமிழர் சரித்திரத்திலிருந்து இலங்கையின் வடக்கு கிழக்குப் பாகங்கள் தமிழர் தாயகம் என வைக்கப்படும் சகல வரலாற்றுச் சான்றுகளையும் ஒதுக்கித் தள்ளி விட்டாலும் பௌத்த சிங்கள அரசாங்கம் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் இல்லை என்பதற்கு வைக்கும் காரணங்கள் எதுவும் நவீன அரசியற் கோட்பாடுகளினால் ஏற்க முடியாதவையாகும்.

வல்லிபுரப் பகுதியை சிங்கள மன்னனின் பிரதிநிதி ஆண்டான். ஒரு புத்தர் கோயில் கட்டப்பட்டது என்பது வல்லிபுரப் பகுதி தமிழர் தாயகம் இல்லை என்பதற்கோ, இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பு வலுப்பட்டிருந்தது என்பதற்கோ போதுமான சான்றாகாது. இவை அவ்வாறு இருக்குமெனில் அவை தக்க சான்றாகக் கருதப்படுமானால் இலங்கை பூராவும் எல்லாளன் ஆண்டான் என்பதற்காக இலங்கை பூராவும் தமிழர் தாயகம் என்ற வாதத்தையும் சிங்களவர் ஏற்கவேண்டி வரும்!

இதே போன்று இராஜ இராஜ சோழன் காலத்திலும், இராஜேந்திர சோழன் காலத்திலும் கூட இலங்கையின் பெரும் பாகம் தமிழர் ஆதிக்கத்தில் இருந்தது. இந்து ஆலயங்கள் அநுராதபுரத்திலும், பொலநறுவையிலும் கட்டப்பட்டன. இவற்றை வைத்துக் கொண்டு அப்பகுதிகளும் தமிழர் தாயகம் என வாதிட்டால் சிங்களவர் அதையும் ஏற்றுக் கொண்டு தான் ஆகவேண்டும்.

இதற்கு மேலாக இலங்கையை ஐரோப்பியர்கள் 442 வருடங்கள் ஆட்சி செய்துள்ளார்கள். இவர்கள் நாடு பூராவும் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து தேவாலயங்களைக் கட்டினார்கள். அந்த நாட்டு பிரதிநிதிகள் நேரடியாக ஆட்சி செய்தார்கள். ஆகையால் இதனைக் கொண்டு ஐரோப்பியர் இப் பூமி ஐரோப்பிய நடையது என தென்னாபிரிக்காவில் வாதிடுவது போல வாதிட்டால் அதையும் பௌத்த சிங்கள பேரினவாதிகள் ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும்.

மறுபுறமாக நேப்பாளத்தில் தோன்றிய பௌத்தம் இன்று ஜப்பான் வரையும் பரந்துள்ளது. இன்று கிழக்காசியாவிலேயே பெருமளவு பௌத்தர்கள் வாழ்கின்றார்கள். இந்நிலையில் பௌத்த மடாலயங்கள், விகாரைகள் இருக்கும் இடமெல்லாம் சிங்களவருடையது என பௌத்த சிங்கள பேரினவாதிகள் வாதிடலாமே? ஏன் அவ்வாறு அவர்கள் வாதிடுகிறதில்லை?

ஒரு மன்னனின் திறமையாக ஆட்சி பரந்து விரிவதும் பேரரசுகள் உருவாவதும், திறமையற்ற மன்னர்களால் பேரரசுகள் அழிந்ததும் தான் வரலாறு. இதே போன்றே மதங்களும் காலத்திற்கேற்ப உருவாவதும் பரவுவதும், அழிவதும் ஆகும்.

இதனைக் கருத்தில் வைத்துக் கொண்டு சிங்கள மன்னன் ஆண்டான் பௌத்த சமயம் பரவியது; ஆகவே இது தமிழருடையது அல்ல எங்களுடையது என வாதிடுவது மடைமைத்தனமாகும்!

மேலும் பௌத்தம் தனியாக ஓர் இனத்திற்கு உரியதும் அல்ல. வேற்று இன மன்னன் ஆண்டான் என்பதற்காக மண்ணின் மீதான மக்களின் இறைமை மாறி விடுவதில்லை!

according to the modern political theory.

It is not a valid proof to say that the Vallipurakkovil area was ruled by a prepresentative of a Sinhalese king or a Buddhist temple was built there. Otherwise if it is sufficient, then the Sinhalese will have to accept that the whole of Sri Lanka was occupied by the Tamils for the reason that King Ellarlan ruled whole of Sri Lanka.

Then the Sinhala Buddhists willhave to accept that Sri Lanka belongs to Europeans, like in South Africa on the ground that they ruled Sri Lanka for 442 years and built Catholic Churches throughout the Island.

On theotherhand, Buddhism has originated in Nepal and extended to Japan. Today most of the buddhists are confined to South East Asian. At this stage, the places where you find Buddhist temples and Vihares cannot be claimed as that of Sinhalese, by the Sinhala Buddhists. Why can't they claim that too?

Extension of powers and the creation of powers depends on the ability of and the determination of the King concerned and the destruction is also of the same. Likewise, religion too has its orientation, extension and destruction to suit thetime.

Keeping this ih mind, it is rather foolish to argue that the Sinhala King ruled and Buddhism got spreaded and hence it is not of the Tamils but ours.

Further, Buddhism is not confined to Sinhalese. The Soverignity of the people on land cannot be changed for the reason that it was ruled by another race.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

Date 08.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# நகரில் இருளும் வேளை ஹெலி கிரனேட் வீச்சு!

## அறுவர் காயம்; வீடு சேதம்

யாழ்ப்பாணம், பெப். 8

இருள் கவியும்நேரம்நேற்று மாலை 6.30 மணியளவில் வந்த ஹெலி ஒன்று, யாழ். நகரையும் அதனை அண்டிய பகுதிகளையும் வட்டமிட்டு, குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தாக்குதல்களை நடத்தியது

யாழ்., கோட்டை, அரியாலை, நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகளிலேயே தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நல்லூர் இராஜ வீதி, சட்டநாதர் கோவில் முன் ஒழுங்கை, திருநெல்வேலி கேணியடி ஆகிய பகுதிகளில் கிரனேட்டுக்கள் வீசப்பட்டன.

கிரனேட் வீச்சில் அறுவர் காயமடைந்தனர். இராஜ வீதியில் வீடு ஒன்றின் முற்றத்தில் கிரனேட் விழுந்து வெடித்ததில் வயோதிபத் தம்பதிகளான சின்னத்துரை [வயது 72], இராசம்மா சின்னத்துரை [வயது 62] ஆகியோரும்—

திருநெல்வேலி, கேணியடி அரசடி வீதியிலுள்ள வீடு ஒன்றின் மீது விழுந்த கிரனேட்டில், குசினிச் சுவர் இடிந்து விழுந்து கனகசபாபதி கஜேந்திரகுமார் [வயது 6], கனகசபாபதி குமுதினி [வயது 10], கனகசபாபதி கீதா [வயது 18] ஆகிய சகோதரர்களும்—

பக்கத்து வளவில் நின்ற சபாரத்தினம் ரவிசங்கர் [வயது 15] என்ற மாணவனும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-5-15)

GRENADE ATTACK AT DUSK IN TOWN
6 INJURED AND HOUSE DAMAGED

In dusk, by about 6.30 p.m. a heli circled around Jaffna Town and the suburbs,had its attacks in Jaffna Fort,Ariyalai, Nallur and Thirunelveli areas. Grenades were thrown in front of the lane of Sad anathar Kovil in Nallur Rajaveethi and Thirunelveli Kerniyadi.

Six were injured in this at ack. An old couple, Sinnadurai(72yrs),his wife Rasamma Sinnadurai(62 yrs) in Rajaveethis got injured. In the Grenade that fell in Thirunelveli Kerniyadi, Kanagasabapathy Gajendrakumar(6 yrs),Kanagasabapathy Kumuthini (10 yrs), Kanagasabapathy Geetha (18yrs) and Sabaratnam Ravisankar in the neighbouring house got injured.

The injured were admitted tothe Hospital.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 09.01.1991 , Name of Paper EELANATHAM ......... Clipping of News Papers

# குறிகாட்டுவான்துறை மீது ஷெல் தாக்குதல்

(புங்குடுதீவு)

நயினாதீவு கடற்படை முகாமில் இருந்து புங்குடுதீவு குறிகாட்டுவான் துறையை நோக்கி கடந்த மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை பலத்த ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் அரைமணி நேரமாக நடாத்தப்பட்ட இத்தாக்குதலினால் குறிகாட்டுவான் துறையில் உள்ள கடைகள் பல பலத்த சேதமடைந்துள்ளன. இதே வேளை அவ்விடத்தில் பொது மக்கள் பலர் நின்றனர். ஆயினும் எவரும் காயம் எதுவும் இன்றி தெய்வாதீனமாக தப்பினர். மேற்படி தாக்குதலின் போது ஏவப்பட்ட ஷெல்களில் கடைகளை சேதமாக்கிய ஷெல்களை விட மற்றயவை வளவுகளில் வீழ்ந்து வெடித்தன. தாக்குதல் நடந்த தினத்திற்கு அடுத்த நாளாகிய நான்காம் திகதி திங்கட்கிழமை காலை இரண்டு ஹெலிகொப்டர்கள் பிரஸ்தாப முகாமில் மாறி மாறி இறங்கிச் சென்றன என்பது குறிப்பிடத்தக்கது. (22)

## SHELL ATTACK ON KURIKADDUVAN

Heavy Shell attacks were launched from the Naval Base at Nainativu towrds Kurikadduvan Jetty in Pungudutivu, last Sunday evening. Many shops at Kurikadduvan Jetty got badly damaged. At the same time, many civilians who were there got escaped without any injuries. Bedides, the shells that damaged the shops, others fell into private compounds and exploded.

It is also noted that two helicopters landed in the base repeatedly, on the next day morning.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date.................... Name of Paper.............................. Clipping of News Papers

இராணுவத் தளபதி, அரச அதிபர் தலைமையில்

# திருமலையில் குடியேற்றங்கள் விரிவுபடுத்த விசேட குழு

## திருமலைக்கு பிரேமதாஸாவின் வருகையின் பின் ஏற்பாடு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் புனர்வாழ்வு என்ற போர்வையில் சிங்களவரைக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. இக் குடியேற்ற விரிவாக்கத்திற்கு திருமலை இராணுவத் தளபதி, அரச அதிபர் தலைமையிலான அரச நிறுவன உயர் அதிகாரிகளின் விசேட குழுவொன்றும் செயற்பட்டு வருகின்றது.

1990 ஆனி மாதத்தில் ஏற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையேயான யுத்தத்தைத் தொடர்ந்து திருமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிங்களவர்களை குடியமர்த்தும் பணியில் சிறிலங்கா அரசு ஈடுபட்டு வருகிறது. ஆனி மாதத்தில் ஏற்பட்ட யுத்தத்தை தொடர்ந்து சிங்கள மக்களை குடியமர்த்தும் பணியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகள் கூட பாவிக்கப்படுகிறது. மேலும் விரகத்திப் பிள்ளையார் ஆலயம், மாரியம்மன் ஆலயம் ஆகியவற்றிற்குச் சொந்தமான காணிகளில் கூட இக் குடியேற்றம் நடைபெற்று வருகிறது.

சிறிமாபுரம், பாலையூற்று, மட்கோ, கல்லிமடு, புல்மோட்டை, சீனன்குடா, அமே தங்கபுர, 5 ஆம் கட்டை, மகாதிவுல்வெவ போன்ற பகுதிகள் குறிப்பிடக்கூடிய அம்சமாகும். மேலும் இக் குடியேற்றவாசிகளுக்கு அரச உதவிகளுடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியும் போதியளவு கிடைத்து வருகின்றது.

மேலும் புனர்வாழ்வு என்ற போர்வையிலும் சிங்களவர்களை குடியமர்த்துவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1987 ஜூலை மாதத்தின் பின் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'வீடு அமைத்துக்கொடுத்து புனர்வாழ்வு மேற்கொள்வது' என்ற திட்டத்தின்படியே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இக் குடியேற்றங்களை மேற்கொள்வதில் திருமலை அரசாங்க அதிபர், திருமலை மாவட்டத்தின் இராணுவத் தளபதி ஆகியோரது தலைமையில் திருமலை மாவட்டத்திலுள்ள அரச நிறுவனங்களின் தலைமை உத்தியோகஸ்தர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். திருமலைக்கு அண்மையில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் வருகையைத் தொடர்ந்து இவை தொடர்பாக ஒரு விசேட குழு பிரேமதாசாவி

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

**Date** 09.01.1991 **Name of Paper** UTHAYAN **Clipping of News Papers**

னால் அமைக்கப்பட்டது. இக் குழு சமாதானம் என்ற போர்வையில் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இக் குழுவில் பெரும்பாலும் சிங்களவர்களே இடம்பெற்றுள்ளனர். அண்மையில் இக் குழுவின் கூட்டம் திருமலையில் நடைபெற்றபோது மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கை பற்றி ஒரு தமிழ் அங்கத்தவர் குறிப்பிட்டபோது இராணுவத் தளபதியால் மிரட்டப்பட்டுள்ளனர். மேலும் இக் குழுவே புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் கண்காணித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

UNDER THE HEAD OF GOVERNMENT AGENT AND THE ARMY COMMANDOR

SPECIAL COMMITTEE TO EXTEND THE COLONIZATIONS IN TRINCOMALEE

EFFECTS AFTER PREMADASA'S VISIT

Sri Lankan Government is engaged in Colonizing the Sinhalese in Trincomalee District, from the time, the war between the Sri Lankan Government and the Liberation Tigers started, in June, 1990. Even the private lands of the tamils are being used for this purpose. Further the lands belong to Veeragathipillaiyar temple and Mariamman Kovilare also being used for the Colonization.

Srimapura, Palaiyoothu, Mudcov, Kalliravu, Pulmoddai, China Bay, Sumethangapura, 5th. Mile Post, Mahativuluweva areas are noted for this. Both the Government and the Non Governmental Organizations are providng funds for the Colonists.

Further, arrangements are made to colonize the Sinhalese under the disguise of Re-habilitation. This is carried out on a planned scheme of 'Re-habilitation by providing Houses'. The Heads of various Departments in Trincomalee District are involved in this under the leadership of the Government Agent and the Army Commandor.

The President, Premadasa who visited Trincomalee, recently had appointed a Special Committee. This Committee is said to be a Peace Committee and engaged in anti-tamil activities there. Majority of the members are sinhalese. When a tamil member tried to expose the anti-tamil activities taken by the Committee, in a meeting held recently, was threatened by the Army Commandor.

Further this committee is monitoring the re-habilitation works also.

## ஆஸ்பத்திரி முன்னால் வெடிக்காத குண்டு!

மல்லாவி ஆஸ்பத்திரியின் வெளி நோயாளர் பிரிவுக்கு முன்னால் பீப்பாய்க் குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் காணப்பட்டது. அதைப் பார்வையிட்ட செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் படமும் எடுத்துக் கொண்டனர்.

ஆஸ்பத்திரி வளவுக்குள் அண்மையில் நடந்த குண்டு வீச்சின் போது நான்கு குண்டுகள் விழுந்து வெடித்த அடையாளங்கள் காணப்பட்டன என்றும், வெளி நோயாளர் பிரிவுக்கு முன்னால் விழுந்த குண்டு வெடித்திருந்தால், ஆஸ்பத்திரி தரைமட்டமாகி இருக்கும் என்றும் யாழ். செஞ்சிலுவை சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-3)

### UN-EXPLODED BOMB INFRONT OF HOSPITAL

An un-exploded Barrel Bomb was found infront of the O.P.D. section of the Mallavi Hospital. The ICRC who happened to see that had taken a photo of it.

There were marks to the effect, that four bombs had exploded in the vicinity of the Hospital and if the bomb that fell infront of the O.P.D. had exploded, the entir Hospital would have blastered.

## தமிழ்ப் பெண்கள் கைது!

கொழும்பு, பெப். 9

கொழும்பில் உள்ள சில விடுதிகளில் வைத்து கடந்த 3, 4 ஆம் திகதிகளில் கைது செய்யப்பட்ட 87 தமிழர்களில் 14 பேர் பெண்கள் என்று தெரியவருகிறது.

விசேட பொலிஸ் கோஷ்டி ஒன்றே இவர்களைக் கைது செய்தது.

இவர்களில் அனேகர் வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக கொழும்பில் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

### TAMIL LADIES WERE ARRESTED

Out of the 87 arrested at the Lodges in the Colombo City, 14 were ladies.

Special Police Force have arrested them and it is learnt that they were staying in Colombo to go abroad

## வவுனியாவில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், பெப். 9

வவுனியா, சாஸ்திரிகூழாங் குளம் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுக்களை நடத்தின.

இச்சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார்.

### BOMBING AT VAVUNIYA

Two bombers had their attack by about 11.00 a.m. at Sasthirikoolan-kulam in Vavuniya, yesterday.

One Civilian was subject to death on this incident.

# தென்மராட்சியில் வியாழன் ஹெலி, பொம்மர் அட்டகாசம்

நேற்று முன்தினம் மாலையில் நடத்த பொம்மர் குண்டு வீச்சில் புலோப்பளையைச் சேர்ந்த செல்வத்துரை சுரேந்திரன் (வயது 13) என்ற சிறுவனே உயிரிழந்தான். வீடு ஒன்றும் சேதமானது.

அதே தினம் மாலை 4 மணி தொடக்கம் சங்கத்தானையில் இருந்து கொடிகாமம் வரை ஹெலியும் ரொக்கட், கலிபர் தாக்குதல்களை நடத்தியது. கொடிகாமச் சந்தை, பஸ் நிலையம், தென்னந்தோட்டப் பகுதிகளிலும் அன்று பொம்மர் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

குண்டு வீச்சினால் கொடிகாமத்தில் சில கடைகளின் கண்ணாடி அலுமாரிகள் சிதறி சேதமடைந்தன.

இது குறித்த சுருக்கமான செய்தி ஒன்று நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

[ஒ-117-74]

## HELI AND BOMBER HAVOCKS AT TENMARADCHCHI

In a Bomber attack that took place day before yesterday, Tuesday, a boy of 13 years, Selvadurai Surendran from Pulopallai got killed. One house was damaged.

On the same day, a Heli too had its attack by Rocket and Calibre, by about 4.00 in the evening from Sangathanai to Kodikamam. Air attacks were there in Kodikamam Market, Bus Stand and in Coconut Estates too.

The Glass Almyrahs in Kodikamam shops got shattered and battered by bombing.

a briefed news item on this attack was published yesterday.



10.02.1991 அன்று கல்வியங்காட்டில் ஸ்ரீலங்கா விமானப் படையின் குண்டு வீச்சில் பலியான செல்லப்பா . பரமேஸ்வரி (60) உடல் சிதைந்த நிலையில் உள்ளது.
(1ஆவது படம்)

The first picture vivids, one Sellapah Parameswary's (60) body scattered in the bombing attack at Kalviyankadu by the Sri Lankan Air Force on 01-02-1991.

-------------



இக் குண்டு வீச்சில் சேதமாகிய வீடு (2ஆவது வீடு)

The house damaged by the Bombardment.

-----------

இக் குண்டு வீச்சு பற்றி 11.02.91 அன்று ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்த செய்தி கீழே தமிழ் ஆங்கிலத்தில் உள்ளது

BELOW - The news regardig the bombardment, which Eelanatham described on that particular day

---------

# கல்வியங்காடு பகுதியில் வயோதிப மாது பலி!

## சித்த வைத்தியசாலை சேதம்

திருநெல்வேலி கிழக்கு - கல்வியங்காடு - பழம் சந்திக்கு அருகில் நேற்று முற்பகல் 11. 40 மணியளவில் இரு பொம்மர்கள் நடத்திய குண்டு வீச்சில் வயோதிப மாது ஒருவர் உடல் சிதறிப் பலியானார்.

சித்த மருத்துவ வைத்தியசாலை, ஒரு வீடு, ஒரு கார் ஆகியன பலத்த சேதமடைந்தன.

இரு பொம்மர்களும் தாழப் பறந்து சுற்றியதால், மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

பல தடவைகள் வட்டமிட்ட பொம்மர்கள் கல்வியங்காடு - பழம் சந்திக்கு அருகிலுள்ள சித்த மருத்துவ நிலையத்தை இலக்கு வைத்து இரு குண்டுகளை வீசின.

இச்சம்பவத்தின் போதே வயோதிப மாது பலியானார். இவர் திருநெல்வேலி புதிய சிவன் வீதியைச் சேர்ந்த செல்லப்பா பரமேஸ்வரி (60 வயது) என்பவர் ஆவார்.

குண்டு வீச்சு நடந்த வேளை வைத்தியசாலைப் பகுதியில் பலர் நின்றிருந்த போதும் தெய்வாதீனமாக வேறு உயிர் இழப்புக்கள் ஏற்படவில்லை.

(ஓ-5-143-15)

## BOMBER RAID - AN ELDERLY VICTIMIZED TO DEATH AT KALVIYANKADU


Thirunelveli East - An Elderly woman died, her body scattered into fragments close to Palam junction at Kalviyankadu, yesterday by about 11.40 A.M. by the bombarding of two bombers.

Mental hospital, a house and a car received severe damages. The public were tottere seeing the bombers rounding at low altitude, circling several times the bombers propelled two bombs aiming the metal Hospital which was situated at Kalviyankadu old junction.

The Elderly woman died on this incident. She is known aa one Sellapah Parameswary (60) of Thirunelveli Sivan Street, although several people were in the hospital at the time of bomarding, by almighty God none received any injuries.

.....00000.....

# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
# People's Front of Liberation Tigers



இக் குண்டு வீச்சில் சேதமுற்ற
ஆயுள் வேத வைத்தியசாலை
(1ஆவது படம்)

The indigenous hospital subjcted to damage in the Bombardment (1st Picture)

----------



கட்டிட இடிபாடுகளுக்கிடையில் அகப்பட்டுக் கிடக்கும் செல்லப்பா பரமேஸ்வரியின் உடலை பொது மக்கள் மீட்கின்றனர்.
(2ஆவது படம்)

The dead body of Sellapah Parameshwary is being removed from the building debris by the public. (2nd Picture)

-----------



மீட்ட பின் சிதைந்த நிலையில் காணப்படும் செல்லப்பா.பரமேஸ்வரியின் உடல்.
(3ஆவது படம்)

Sellapah Parameswary's body in state of destruction after been removed (3rd Picture)

"புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்"

" TAMILEELA" MOTHERLAND
IS TIGERS THIRST

--000000---

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

**Date** 09.01.1991 **Name of Paper** UTHAYAN **Clipping of News Papers**

## கூட்டுச் சதியின் மற்றொரு கட்டம்

[illegible]

ANOTHER STAGE OF CONSPIRACY

News reveal, that Indiam is engaged in an attempt to send back the Sri Lankan Tamils who got refuges in Tamil Nadhu, South India. It is also beleeved that action is being taken on different ways on a joint diplomatic level.

The Tamil Eelam refugees in Tamil Nadhu, at present are those who were affected in the North-East war. They went to Tamil Nadhu, for safety, takinga risk of their lives, amidst the attacks launched by the Sri Lankan Navy.

Some of these refugees were recently arrested and tortured by the State Government of Tamil Nadhu, saying that they are Militants. Even the School children were not exempted from this act. They were housed in Detention Camps and subjected to torturings.

These incidents reveals that, every action taken by India on Sri Lanka have a background of their own political benefits. Sending back the Tamil Eelam refugees also of the same type.

Sending back the refugees, without any political Solution and especially at a time, when the war is on progress, is considered to be another stage of conspiracy taken jointly by theIndian Government and that of Sri Lanka.

The State Government of Tamil Nadhu had been already under dissolution immediately after the Indian External Affairs Minister, Sukkla's visit to Colombo.

Sri Lnakan Government is considering that the intervention of Indian Government would not be there, once the refugees were returned. Besides, the Ethnic Issue and other matters concerning the Sri Lankan Tamils will be an Internal matter. By this the Sri Lakan Government also thinks that the International attention will be pacified too.

To fulfill these aims, the Indian Government is aiding and abetting the Sri Lankan Government

(PRO)

But sending back the refugees by force, or to compel them tog get out of Tamil Nadhu is in violation to the International Laws that prevail. Indian Government should stop this.

Date 10.02.1991 Name of Paper......UTHAYAN............ Clipping of News Papers

# அகோர விமானக்குண்டுவீச்சில் கந்தர்மடத்தில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் மணற்றறைப் பகுதியில் நேற்றுக்காலைமேற் கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் குடும்பப்பெண் ஒருவர் பலியானார். இருவர் காயமடைந்தனர். ஏழுக்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்தன.

நேற்றுக்காலை ஒன்பதுமணியளவில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட அகோர தாக்குதலில் கந்தர்மடம் மணற்றறை வீதியைச் சேர்ந்த நான்குபிள்ளைகளின் தாயான திருமதி செல்வலட்சுமி செல்வரட்ணம் (36) என்பவர் தலை சிதறி மரணமானார்.

இவர் கட்டுவன் ஊறணியில் இருந்து அகதியாக இடம்பெயர்ந்து இங்கு தங்கியிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்குண்டுவீச்சுச் சம்பவத்தில் புஷ்பநாதன் சிவசாந்தி (35), திரு வேலுப்பிள்ளை (70) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். இப்பகுதியிலுள்ள ஏழுக்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன. வீசப்பட்ட குண்டுகளில் ஒன்று வெடிக்காத நிலையில் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளது. (85, மு)

ONE PERSON DIED IN FEROCIOUS AIR BOMBING AT KANDARMADAM
(Jaffna)

In an air raid at Manaltharai area of Kandarmadam yesterday morning, a familied woman subjected to death and two more wounded. More than seven houses received severe damages.

The Two Sri Lankan Air Force owned bombers which handled a ferocious attack yesterday morning by about 9.00 A.M. One Mrs.Selvaletchumy Selvaratnam (36 yrs) a mother of 4 children of Kandarmadam Manaltharai Street died her head being scattered into fragments. She came here fromKadduvan Uranai as refugee had to be stated here.

Puspanathan Sivashanthi (35 yrs) and Mr.Velupillai (70 yrs) were seriously wounded in this attack.More than seven houses of this area heavily damaged.One of the unblasted bomb was been redempted by the Liberation Tigers.

**Date** 10.02.1991 **Name of Paper** UTHAYAN **Clipping of News Papers**

# காரைநகர் ஷெல்லுக்கு நேற்று இளைஞர்காயம்!

யாழ்ப்பாணம், பெப். 10 காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்று மாலை ஏவப்பட்ட ஷெல் குண்டினால் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் காரைநகர் இடைப்பிட்டியில் வந்து விழுந்த ஷெல்லினால் எஸ். சந்திரதாஸ் (வயது 16) என்ற இளைஞர் காலில் காயமுற்றார். அவர் பின்னர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

A YOUTH SUBJECTED TO INJURIES BY KARAINAGAR SHELL.

Jaffna February 10th - One youth subjected to injuries by a shell which was propelled fromKarainagar Navy Camp.

The shell fell at Karainagar Edaipiddy yesterday morning by about 6.30 A.M. injured one S.Chandradas (16 years) on his leg. Later he was admitted to Jaffna Hospital.

Date 10 . 02 . 1991 Name of Paper EELANAATHAM Clipping of News Papers

# தாய், 3 பிள்ளைகள் பொற்பதியில் படுகாயம்

## பிள்ளையார் கோவிலும் சேதம்

யாழ்ப்பாணம், பெப் 10

கொக்குவில் பொற்பதி பிள்ளையார் கோவில் பகுதியிலும் நேற்று முற்பகல் 11 மணியளவில் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்தனர். பிள்ளையார் கோவில், மற்றும் வீடுகள், கடைகள் இடிந்து சேதமாகின.

பிள்ளையார் கோவிலுக்கு முன்பாகவும், தெற்கு வீதியிலும் குண்டுகள் விழுந்து வெடித்தன. பிள்ளையார் கோவில் தெற்கு வீதியில் வசிக்கும் விஸ்வநாத சர்மா லோகநாயகி (35 வயது), அவரது பிள்ளைகளான வி. கோகுலன் (9 வயது) வி. விஜிதா (14 வயது), வி. கௌரி (12 வயது) ஆகியோரே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தனர். இவர்கள் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நான்கு பேரும் பாதுகாப்புத் தேடி குளியல் அறைக்குள் ஒதுங்கிய சமயம் பொம்மர் குண்டு குளியல் அறையின் மேல் இருந்த தண்ணீர் தாங்கியின் மீது விழுந்து வெடித்தது. இதனால், தண்ணீர்த் தாங்கியுடன் சேர்ந்து குளியலறை இடிந்து வீழ்ந்தது.

இடிபாடுகளுக்கு இடையே சிக்கிக்கொண்ட இந்த நால்வரும் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர்.

குண்டுவீச்சில் பொற்பதிப் பிள்ளையார் கோவில் பலத்த சேதமடைந்தது. மடப்பள்ளி, அம்பமண்டபம் ஆகியன சேதமாகின. கோவிலுக்கு முன்பாக இருந்த சைக்கிள் கடை ஒன்று இருந்த இடம் தெரியாமல் அழிந்து போனது.

பொற்பதி வீதியில் உள்ள துர்க்கை அம்மன் கோவில் ஒழுங்கையினுள் — குடியிருப்புக்களுக்கு இடையே — ஒழுங்கையின் நடுவில் மற்றொரு குண்டு விழுந்து வெடித்தது. இதனால் இப்பகுதியில் 6 வீடுகள் சேதமுற்றன. (ஓ 5-15)

MOTHER - 3 CHILDREN INJURED
PTOPATHI.

Jaffna February 10th: Yester
morning by about 11.00 A;M.
bombardment handled at Kokuv
Potpathy Pillaiyar Temple ar

4 in one family were injur
in this incident.The Pillaiy
Tempbe and several houses
and boutiques collapsed due t
the bombing. Bombs fell in
front of Pillaiyar Temple
including south streets and
exploded.Visvanathan Sharma
Loganayagi(35 yrs) her child
namely V.Kogulan (9 yrs)V.Vi
tha (14 yrs) and V.Gowri(12 y
who were living in the South
street were the people severe
wounded in this incident.They
were been admitted to Jaffna
Hospital in a critical
condition.When all these four
rushed into the bath room for
cover the bomb from the bombe
fell on the water tank above
the bathroom and exploded.As
such with the water t ank the
bathroom collapsed.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 11.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# சங்குவேலியில் தாயும், மகளும் காயம்

மானிப்பாய் சங்குவேலிப் பகுதியில் உடுவில் டச் வீதியடியில் - மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று சிறிலங்கா விமானப் படை பொம்மர்கள் இரண்டு நடத்திய குண்டு வீச்சினால் நான்கு வீடுகள் இடிந்து விழுந்தன. இருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை 10 15 மணியளவில் இரண்டு பொம்மர்கள் மாறி மாறி இந்தாக்குதலை நடத்தின.

வீட்டில் நின்ற மோகனா முகுந்தன் இந்திராணி (வயது 25) என்னும் ஒரு பிள்ளையின் தாய் தலையில் காயமடைந்தார்.

இவர் காயமடைந்த நிலையில் பதுங்கு குழியினுள் பாதுகாப்புத் தேடியபோது அதிக இரத்தப் பெருக்கால் நினைவிழந்தார். பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு அவர் எடுத்து வரப்பட்டார்.

இவரது மகளான மோகன முகுந்தன் தாரணி (வயது9) சம்பவத்தில்காயமடைந்தார்.

இந்தத் தாக்குதலினால் அருகருகே இருந்த நான்கு வீடுகள்இடிந்து சேதமடைந்தன. (ஒ-5-90-15)

## MOTHER AND DAUGHTER INJURED AT SANGUVELI.

---

In Manipay Sanguveli area at Uduvil Dutch Road 4 houses collapsed when two Sri Lankan Air Force owned bombers initiated bombing in the inhabitant area yesterday. Further two more received injuries.

Two bombers alternatively handled this bombardment yesterday morning by about 10.15 a.m. One Mohana Mugundan Inthirani(25 yrs) mother of a child who was in the house received injury on her head. In the state of injury on the head which she was attempting to take cover in the bunker, she fainted due to over bleeding. Later she was taken to Jaffna Hospital.

Her daughter Mohana Mugundan Tharanie(9 yrs) too received injury in the incident. Four houses which were in the vicinity got collapsed and damaged.

# கொக்குவிலில் நேற்று வீடுகள் பல சேதமாகின

கொக்குவில், பெப். 11

கொக்குவில் கிழக்கு, நந்தாவில் ஒழுங்கையில் நேற்று நண்பகல் நடத்தப்பட்ட பொம்மர் குண்டு வீச்சில் மூன்று வீடுகள் இடிந்து சேதமடைந்தன. மற்றும் சில வீடுகள் சிறு சேதங்களுக்கு இலக்காகின.

ஒரு வீட்டின் மேல் விழுந்த குண்டினால், அந்த வீடு தரைமட்டமானது. வீட்டில் இருந்தவர்கள் அருகிலுள்ள ஒரு வீட்டுக்கு - வைபவம் ஒன்றிற்காகச் சென்றிருந்ததால், உயிர் தப்பிக் கொண்டனர்.

எனினும் அப்பகுதியில் நின்றிருந்த காங்கேசன்துறையைச் சேர்ந்த செல்லையா வரதராஜா (41 வயது) என்பவர் காயமடைந்தார். [ஒ-69-5-15]

## SEVERAL HOUSES DAMAGED YESTERDAY AT KOKUVIL.

---

Kokuvil Feb. 11th. Three houses collapsed yesterday in the Kokuvil East Nandavil lane by the bombing at noon and some houses received minor damages.

A house was ground levelled as a bomb fell right on the house. The inhabitants of the house escaped death as they have already left to another house close by for a function.

Anyway one Selliah Varatharajah (41 yrs) of K.K.S. who was loitering in that area received injuries.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 11.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# உணர்த்துங்கள், உணர்த்துங்கள்!

அரச விமானப் படையினர் கடந்த மூன்று வாரங்களாக, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மீது இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துகின்றனர்.

கடந்த வருடம் ஜூன் மாதம் போர் ஆரம்பமான காலம் தொடக்கம் குண்டு வீச்சு என்பது, பொது மக்களை அழிப்பதற்கும், அவர்களின் உடைமைகளை நாசமாக்குவதற்குமே என்ற நிலைப்பாடே இருந்து வருகிறது.

பொது மக்களும், அவர்களின் உடைமைகளும் தாக்கப்படுவது குறித்த கேள்வி எழுப்பப்படும் போதெல்லாம் விமானப் படையினர் அவ்வாறு செய்யவில்லை என்று அரசினரால் முழுப் பூசனிக்காய் சோற்றில் புதைக்கப்படுவது வழக்கமாகி விட்டது.

எனினும் சமீபத்தில், பொது மக்கள் கூட்டமாக உள்ள இடங்கள் மீதான தாக்குதல்களை மறைப்பது அரசுக்குச் சற்றுக் கஷ்டமாக மாறி வருகிறது. பல தொண்டர் நிறுவனங்கள் விமானக் குண்டு வீச்சினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டதும், குண்டு வீச்சு நடக்கும் இடங்களுக்கு அவற்றின் பிரதிநிதிகள் நேரில் சென்று பார்த்து, தங்கள் தலைமை அலுவலகங்களுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதுமே இதற்குக் காரணமாகும்.

எனினும் அரசு உண்மையைத் திரைபோட்டு மறைக்கும் தனது [illegible] முயற்சிகளைக் கைவிட்டு விடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

குவைத்தை ஈராக்கிடம் இருந்து விடுவிப்பதற்கு பலாத்காரத்தைப் பிரயோகிக்க வேண்டுமென்று ஐ.நா. சபை இயற்றிய தீர்மானத்தை சோவியத் யூனியன் ஆதரித்தது. ஆனால் இப்போது அமெரிக்காவும், அதன் நேச நாட்டுப் படைகளும் ஈராக்கையும், ஈராக்கிய மக்களையும் அழிப்பதை சகித்துக் கொண்டிருக்க முடியாது என்று கோர்பச்சேவ் குரல் கொடுத்திருக்கிறார்.

இத்தனைக்கும், ஈராக்கில் இதுவரை ஏற்பட்ட பொது மக்கள் உயிரிழப்பு, கடந்த எட்டு மாதங்களில் ஈழத் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்பட்ட தமிழர்களின் உயிரிழப்புடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவானதாகும்.

ஆனால் சரியான உண்மை நிலை உலகுக்குத் தெரியாததால் எந்த உலக நாடும் ஸ்ரீலங்கா அரசைத் தட்டிக் கேட்க முன்வரவில்லை. மனிதாபிமானத்தின் பொருட்டாவது, பொதுமக்களை அழிப்பதை நிறுத்துமாறு கொழும்பு அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கத் தவறிவிட்டனர். வெறும் உள்நாட்டுச் சண்டை என்று தப்புக் கணக்குப் போட்டுவிருக்கின்றனர்; உள்நாட்டு யுத்தம் என்பதால், கண்மூடித்தனமாகக் குண்டு வீச்சு நடத்திப் பொது மக்களைக் கொன்றொழிக்க எந்த அரசுக்கும் உரிமை உண்டா?

இது குறித்து இங்கு இயங்கும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் தத்தமது நாடுகளின் அரசுகளுக்கு உண்மை நிலைமை எடுத்துச் சொல்ல வேண்டும். தமது தலைமைக் காரியாலயங்களை அவ்வாறு செய்யத் தூண்ட வேண்டும். ஓர் இன மக்களை, ஓர் அரசு குண்டு வீசி அழித்தொழிப்பது சர்வதேச மட்டத்திலான தார்மீகத் தவறு என்பதையாவது உணர்த்தச் செய்ய வேண்டும்.

## MAKE FEEL ! MAKE FEEL.

The Air forces of the regime for the past three weeks have initiated bombarding where ever public get crowded. Since the war initiated last year in the month of June, there is a conscience that the bombardments are carried out to destroy the Tamils and their properties.

Wh never a question arised regarding attacks on civilians and their belongings the government's usual answer was that the air forces are not carrying out such activities resembles trying to hide a pumpkin in a plate of rice.

Anyway the recent attack on the public at crowded places caused the government a bit of difficult to conceal these. The reason for this was due to some voluntary establishments directly subjected to bombardments and also the visits by those establishments representatives to the bombarded places, and the reports to their head office. Any how there is no possibility for an expectation that the government will let down it's habit of covering the truth by curtain.

Soviet Union supported the constitution of the UNO Council in adopting force to release Kuwait from Iraqi. But now Koberchev had voiced out that he cannot tolerate America and her allies destroying Iraqi and the Iraqiers.

So far the civilians death in Iraq, when comparing with Eelo Tamils deaths for the past 8 months in the Tamil region is very

little.

But as the real situation is not known to the world none of the world xxxxxxxx countries attempted to come forward and querry Sri Lanka. At least on a humanitarian basis, they have failed to advice the Sri Lankan regime to stop killing the civilians, they have also completely mistaken that this as a xxxxxxxxxCivil war and keeping quite. As it is a civil war, is there are any rights for the regime to annihilate the public by bombardings ?

The foreign voluntary organisations which are functioning here should expel these facts to their individual governments, and also should enforce their head offices to do so. Atleast must make them feel that destroying a race through bombarding by a government is against international level.

Date 11.02.1991 Name of Paper EELANAATHAM Clipping of News Papers

## ஒளிந்திருந்த இராணுவம் சூடு

# மகனை வீதியில் போட்டுவிட்டு ஓடோடி வந்தாள் தாய்

(யாழ்ப்பாணம்)

நொச்சிமோட்டை பாலத்தைச் சூழவுள்ள காட்டுப் பகுதியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பொது மக்கள் மீது திடீரென இராணுவத்தினர் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர். இந்த துப்பாக்கி வேட்டில் சிக்கிய சிறுவன் ஸ்தலத்திலேயே துடிதுடித்து இறந்தான். மேலும் பலர் இராணுவத்தின் வேட்டுக்குள் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இக்கொடூர சம்பவம் பற்றி நேற்று இரவு வவுனியாவிலிருந்து திரும்பி யாழ் போதனா வைத்தியசாலைக்கு படுகாயமுற்ற நிலையில் வந்திருந்த கே. சிவஞானம் என்பவர் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் இராணுவம் திடீரென தம்மீது துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்ததால் பலர் சிதறி ஓடினர். எத்தனைபேர் குண்டுக்கிரையாகினர் என்று தெரியவில்லை என்றார்.

இதேபோல தனது தாயுடன் கொழும்பு சென்ற நெல்லியடியைச் சேர்ந்த சிறுமி ஜெ. அஜந்தா கூறும்பொழுது நாங்கள் நடந்து போய்க்கொண்டிருந்தபோது ஆமிக்காரர்கள் சுடுசுடுவென்று சுட்டார்கள். என்னுடைய அண்ணாவின் மூக்கினாலும், வாயினாலும் இரத்தம் பாய்ந்தது. அம்மா அண்ணாவையும் தூக்கிக்கொண்டு ஓடினார். இடையில் அண்ணா செத்துட்டார் என்று அம்மா ரோட்டுக் கரையில் அண்ணாவை கிடத்திப் போட்டு ஓடிவந்திட்டா என்ர அண்ணாவுக்கு என்ன நடந்ததோ தெரியாது என்று அழுதாள் அந்தச் சிறுமி. (வோ)

ARMY FIRING FROM COVER:
MOTHER DROPPED SON ON THE ROAD
CAME RUNNING (Jaffna)

A sudden continous firing raid handled on to the public when they were proceeding towards Colombo by the Army from the Notchimottai bridge of the jungle area. A boy who was trapped in the firing died on the spot. There is a possibility to believe as some more personals must have trapped in the firing.

One K. Sivagnanam who was involved in the atrocity and came to Jaffna Teaching Hospital with serious injuries yesterday night from Vavuniya revealed about this incident. Further he added: As the army all of a sudden fired at us, several of us scattered about and started running. I cannot express the amount of people who were trapped in the firing.

In the same manner, a child named J. Ajantha of Nelliady who went with her mother to Colombo while expressing said, the time when we were all walking the personals initiated a continous firing. Blood started bleeding through my brother's nose and mouth and my mother carried my brother and ran. On the way my mother saying that my brother had expired, dropped him on to the road side and continued running. Stating so the child started crying and added I do not know what happened to my brother.

## முல்லையில் ஹெலி சூடு ஒருவர் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணி ஒலுமடுப் பகுதியில் நேற்று முன்தினம் ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

HELICOPTER FIRING AT MULLAI
ONE PERSON DEAD
(Mullaitivu)

A civilian got killed when a helicopter activated firing at Nedunkerni Olumadu area in the Mullaitivu district day before yesterday.

Date 11.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

பொம்மர் குண்டுவீச்சு

# கல்வியங்காடு பகுதியில் வயோதிப மாது பலி!

## சித்த வைத்தியசாலை சேதம்

திருநெல்வேலி கிழக்கு - கல்வியங்காடு - பழம் சந்திக்கு அருகில் நேற்று முற்பகல் 11.40 மணியளவில் இரு பொம்மர்கள் நடத்திய குண்டுவீச்சில் வயோதிப மாது ஒருவர் உடல் சிதறிப் பலியானார்.

சித்த மருத்துவ வைத்தியசாலை, ஒரு வீடு, ஒரு கார் ஆகியன பலத்த சேதமடைந்தன.

இரு பொம்மர்களும் தாழப் பறந்து சுற்றியதால், மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

பல தடவைகள் வட்டமிட்ட பொம்மர்கள் கல்வியங்காடு - பழம் சந்திக்கு அருகிலுள்ள சித்த மருத்துவ நிலையத்தை இலக்கு வைத்து இரு குண்டுகளை வீசின.

இச்சம்பவத்தின் போதே வயோதிப மாது பலியானார். இவர் திருநெல்வேலி புதிய சிவன் வீதியைச் சேர்ந்த செல்லப்பா பரமேஸ்வரி (60 வயது) என்பவர் ஆவார்.

குண்டு வீச்சு நடந்த வேளை வைத்தியசாலைப் பகுதியில் பலர் நின்றிருந்த போதும் தெய்வாதீனமாக வேறு உயிர் இழப்புகள் ஏற்படவில்லை.

(ஞ-5-143-15)

BOMBARDMENT OF BOMBERS
AN ELDERLY WOMAN GOT KILLED IN KALVIANKADU AREA
MENTAL CLINIC DAMAGED.

An elderly woman died, her body scattered into pieces when two bombers handled bombing at Thirunelvely East-Kalvinakadu close to Palam junction yesterday morning by about 11.40 a.m.

Mental clinic, a house and a car were heavily damaged by this raid.As the bombers were flying on a low altitude people were puzzled.

Circling over several times both the bombers taking the task on to the mental clinic which was situated at Kalviankadu close to Palam junction dropped two bombs.

The elderly woman was subjected to death during this incident.She is known as Sellappah Parameswary (60 yrs) of Thirunelvely New Sivan Street.

Although several civilians were at the hospital area during this bombing operation nobody were hurt by the grace of God.

# குண்டுவீச்சில் நால்வர் காயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நொச்சிமோட்டைப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் குண்டுத்தாக்குதல் நடாத்தியதில் நால்வர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 7-30 மணியளவில் நடாத்தப்பட்ட இக் குண்டுத்தாக்குதலில் பெ. கிம்சன் (வயது 21) க. தவராசா (வயது 30) என்பவர்கள் உட்பட மேலும் இருவர் இரப்பைக்குளப்பகுதியை நோக்கிவந்த இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் சுப்பிரமணியம் சோதி (வயது 33) என்பவர் காயமடைந்தார். (க) (85)

4 WOUNDED IN BOMBING
(Vavuniya)

4 persons were subjected to injuries at Notchimottai area of Vavuniya district by the Sri Lankan Air Force owned bombers and admitted to Jaffna Hospital.

This bombardment which took place day before yesterday morning at 3.30 A.M. wounded P.Kimson(21 yrs and K.Thavarasah (30 yrs) including two more persons. In addition one Subramaniam Sothi (33 yrs)was subjected to injuries by shell attack from the Army who were advancing towards Erapperiakulam.

# அம்பாறையில் சுற்றிவளைப்பு
# 50 தமிழர் கைது; ஒருவர் கொலை

(அம்பாறை)

சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் அம்பாறைப் பகுதியில் ஐம்பது தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலையில் அம்பாறையில் உள்ள தாண்டியடி முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் சின்னத்தோட்டம் பகுதியைச் சுற்றிவளைத்து ஐம்பது தமிழ்ப் பொதுமக்களைக் கைதுசெய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை விபரம் எதுவும் தெரியவில்லை.

இதே வேளை கடந்த நாலாம் திகதி தாண்டியடி முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப்படையினர் சிவா என்பவரைக் கைது செய்து அவரைச் சுட்டுக் கொன்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

AMPARAI IN SIEGE:
50 TAMILS ARRESTED
ONE MURDERED (Amparai)

50 Tamils are been arrested by Sri Lankan Special Task Force at Amparai.

The Sri Lankan S.T.F. in Thandiyadi Camp at Amparai advancing from the camp.day before yesterday in the early morning arrested 50 Tamils and took them away to the camp by seiging Sinnathottam area. Up to now the happenings to these persons are not known.

At the same time the STF in Thandiyady Camp arrested one Siva on the last 4th have shot him and killed had to be mentioned here.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

Date 12.02.1991 Name of Paper EELANAATHAM Clipping of News Papers

தமிழ் அகதிகளுக்கு அனுப்பப்பட்ட பொருள்கள்

# சிங்கள குடியேற்றவாசிகளுக்கு சர்வோதயத்தால் விநியோகம்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அகதிகளுக்கென அண்மையில் தமிழ் அதிகாரிகளின் முயற்சியினால் கொழும்பு சர்வோதய தலைமையகம் மூலம் திருமலை சர்வோதய வடகிழக்கு மாகாணத் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியுடைய சமையல் அறை உபகரணங்கள் அனைத்தும் திருமலை சிறிமாபுர என்னுமிடத்தில் குடியேற்றப்பட்ட சிங்கள வாசிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இப்பொருள்கள் யாவும் சர்வோதயத்தின் தலைவர் ஏ.ரி. ஆரியரத்தினாவின் மனைவியினால் திசைதிருப்பப்பட்டு திருமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் சிறிமாபுரத்துக்கு நேரில் சென்று வழங்கப்பட்டது. இச்செயலுக்கு அண்மையில் திருமலை மாவட்ட சர்வோதய பதில் இணைப்பாளராக புதிதாக நியமிக்கப்பட்ட தமிழர் ஒருவரும் உடந்தையாக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

GOODS SENT TO TAMIL REFUGEES
DISTRIBUTED AMONG SINHALA COLONISTS BY SARVODAYA.
(Trincomalee).

By the attempt of Tamil officials, through Colombo Sarvodaya Head Office the goods worth of 1½ lakhs was sent to Trincomalee North and East head office ~~for~~ of Sarvodaya to be distributed among the Tamil refugees at Trincomalee district included kitchen utensils were all issued to the Sinhala colonists of Srimapura Trincomalee.

All those mentioned goods were diverted in a change of direction and personally by the wife of Ariyaratne, the Chairman of Sarvodaya in an idea of encouraging the Sinhala colonisation in the Trincomalee district. A Tamil who was recently appointed as a Deputy Co-ordination Officer at Sarvodaya was also said to be involved in this activity.

## அறுபதாயிரத்தில் ஒன்று றிச்சர்ட் டி சொய்சா

பத்திரிகையாளர் றிச்சர்ட் டி சொய்சா கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக விசாரிக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்க வேண்டும் என எதிர்க் கட்சிகள் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த பிரேரணை பலத்த விவாதத்தின் பின் 'வழமை போல்' தோற்கடிக்கப்பட்டுவிட்டது.

இவ்விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சியினர் பலரும் அரசாங்கத்தில் குற்றமில்லாவிடில், ஏன் ஆணைக்குழு நியமிக்க தயக்கம் வேண்டும். தயங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கும் கொலைக்கும் தொடர்புள்ளது என்ற தொனியில் பேசினர்.

அரசாங்கக் கட்சியினரோ றிச்சர்ட் டி சொய்சாவின் மரணம் தொடர்பாக பொலிஸ் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது இது தொடர்பான நீதி வழங்க நீதிமன்றம் இருக்கும்போது ஆணைக்குழு அவசியமற்றது என வாதிட்டதோடு பிரேரணைக்கு எதிராக வாக்களித்துப் பிரேரணையைத் தோற்கடித்தும் விட்டனர்.

றிச்சர்ட் டி சொய்சாவைப் போல் இலங்கையில் ஆயுதந் தாங்கிய சீருடையினரால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப் பட்டவர்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் இந்நிலையில் ஒருவருக்கு மட்டும் ஆணைக்குழு அமைக்க அரசாங்கம் மறுத்தது 'நியாயமானது' தான் ஏனெனில் இவ்வாறு காணாமற் போன பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் பழைய விடயங்கள் பற்றி அரசாங்கம் விசாரணை நடத்திக் கொண்டிருந்தால், புதிதான அவர்களின் 'செயற்பாடு'களுக்கு நேரம் அற்றதாகப் போய்விடுமல்லவா?

1978ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டமும் 1977இல் இருந்து நீடித்துக் கொண்டே வந்த அவசர காலச் சட்டமும் ஆரம்பத்தில் தமிழர் தரப்பில் இருந்தே காணாமற் போனவர்களையும் கொலை செய்யப்படுபவர்களை உருவாக்கி வந்தது அன்று தமிழர் தரப்பினரைத் தவிர வேறு எவரும் அதைக் கண்டு கொள்ளவில்லை. ஆனால், இவர்களின் கண்டுகொள்ளாமை அன்று இவர்களுக்கு ஒரு எச்சரிக்கை விடுக்கத் தமிழர் தரப்புத் தவறவில்லை. ஆனால் அவர்கள் அதனை அசட்டை செய்தனர்.

## RICHARD DE SOIZA-ONE IN SIXTY THOUSAND.

A proposal by the Opposition party regarding journalist Richard de Soiza brought in the Parliament to form up a Commission to investigate his kidnap and murder was as usual rejected after a complete debate.

Several members of the opposition party in the debate raised question as if the government is not guilty conscience why it is reluctant to appoint a commission. They spoke in a manner that the government had a connection with the murder.

The Police inquiry regarding Richard de Soiza is on progress and for a judgement the courts are there. As such there is no need to appoint a Commission. Not only the government party argued this way but also voted against the proposal and defeated -d.

Like Richard de Soiza there are several thousands of people who were been kidnapped and murdered by the Army. As such the refusal of the government for a Commission to a single person is reasonable. Because if the government continues inquiries regarding those several thousands of lost people it will have no time to deal with the new activities.

The prevention of Terrorism Act in the 1978 and the continued emergency law since 1977, both from the begining created lost and murdered Tamils. Other than Tamils this conception was not cared by any others. But the Tamils never failed to warn them regarding their not caring adoption but they rejected those.

During only in one event on the name of ethnic even when 50 to 100 Tamils were murdered, none of them raised voice in the parliament as they did now for single person Richard de Soyza. The Government failed to form an inuiry Commission even when 57 Tamils

youths were tortured and subjected to murder during the time when they were at Welikada Prison under the State protection. Even the opposition party did not take this serious. As such they did not bother about this.

Since after these events only in the midst of Sinhalese, several thousands of murders and kidnaps were undertaken by the uniformed personnels. Some of these events were attributed in the name of accidents. The Kalawana seat member Sarath Muttetuwegama who proclaimed that he will expose the connections between Mosad and State government in the next parliament meeting, subjected to an accident and died without coming to the parliament, the next time. Even regarding this none spoke highly.

At this stage human rights, inquiries and courts were not cared according to Sri Lankan Government's activities. On the other way the justice and law on behalf of the Tamils got ruined, is well aware to Tamils. For the Sinhalese to realise this is now a very late contemplation.

இனத்தின் பேரால் ஒரு சம்பவத்திலேயே ஐம்பது நூறு எனத் தமிழர் கொல்லப்பட்டபோதும், ஒரு றிச்சர்ட் டி சொய்சாவிற்கு இன்று பாராளுமன்றத்தில் குரல் எழுப்பப்பட்டது போன்று குரல் எழுப்பப்படவில்லை; அரச பாதுகாப்பில் வெலிக்கடைச் சிறையில் இருந்த போது சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்ட ஐம்பத்தியேழு தமிழ் இளைஞர்களுக்காவது ஒரு ஆணைக்குழு அமைக்க அரசாங்கம் முன்வரவில்லை; இவற்றை எதிர்க் கட்சியினரும் பெரிய விடயங்களாகக் கருதவில்லை. ஆகையினால் இவைபற்றி அவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை.

இவற்றின் பின்பே சிங்களவர் மத்தியில் பல்லாயிரக் கணக்கான கொலைகள், கடத்தல்கள், ஆயுதம் தாங்கிய சீருடையினரால் மேற் கொள்ளப்பட்டுள்ளன; இவற்றில் சில விபத்துக்களின் பேரிலும் நடத்தப்பட்டுள்ளன. சிறிலங்கா அரசாங்கத்திற்கும் மொஸாட்டிற்கும் உள்ள தொடர்புகளை அடுத்த பாராளுமன்ற கூட்டத்தில் தெரிவிப்பதாகக் கூறிச்சென்ற கலவான தொகுதி உறுப்பினர் சரத் முத்தெட்டுவேகம பாராளுமன்றத்திற்கு அடுத்த தடவை வராமலே 'விபத்தில்' சிக்கி மரணமானார். இது பற்றியும் பெரிதாக எவரும் பேசிக் கொள்ளவும் இல்லை.

இந்த நிலையில், மனித உரிமைகள், விசாரணைகள், நீதிமன்றங்கள் என்பன சிறிலங்கா அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பொறுத்து ஓர் பொருட்டாகத் தெரியாமல் போய் விட்டது. மறுபுறமாக சிறிலங்கா அரசாங்கத்திடம் தமிழருக்கான நீதியும் சட்டமும் அற்றுப் போய்விட்டது என்பதை தமிழரும் உணர்ந்துள்ளார்கள். இதனை தற்பொழுதுதான் சிங்களவர் உணரத் தொடங்கியிருப்பது ஒரு காலம் தாழ்த்திய புரிந்துணர்வுதான்.

# வீட்டில் மிதிவெடி; குடும்பமாது கால் இழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 12

வீட்டில் மீளக்குடியமர்ந்து இரண்டு மாதங்களின் பின்னர், வீட்டில் புதைத்து கிடந்த மிதிவெடியில் சிக்கி தனது இடது காலை இழந்தார் ஒரு குடும்பப் பெண்.

நேற்று ஊர்காவற்றுறை தம்பாட்டியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. குமாரவேல் இராசாம்பாள் (வயது 49) என்ற பெண்ணே காலை இழந்தவராவார்.

ஊர்காவற்றுறையில் இடம் பெற்ற இராணுவநடவடிக்கைகள் காரணமாக தமது வீட்டை விட்டு இடம் பெயர்ந்த இவரது குடும்பம் இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் மீண்டும் வீட்டில் மீளக்குடியமர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இந்தப் பெண் வீட்டுத் தாவாரத்தில் இறங்கி விட்டுத் திரும்பிய போது முற்றத்தில் புதைக்கப்பட்டிருந்த மிதி வெடியில் சிக்கினார் என்றும் கூறப்பட்டது.

(உ-15)

# தாண்டியடிப் பகுதியில் ஐம்பது தமிழர் கைது

நேற்று முன்தினம் அதிகாலையில் அம்பாறை மாவட்டம் தாண்டியடி முகாமில் இருந்து வந்த விசேட அதிரடிப் படையினர் சின்னத்தோட்டம் என்ற பகுதியைச் சுற்றிவளைத்து சுமார் ஐம்பது அப்பாவித் தமிழர்களைக் கைது செய்தனர்.

தாண்டியடி முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகக் கூறப்படும் இந்த ஐம்பது பேருக்கும் பின்னர் என்ன நடந்தது என்பது குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இதேவேளை கடந்த 4 ஆம் திகதி தாண்டியடி விசேட அதிரடிப் படையினர் சிவா என்ற இளைஞரைச் சுட்டுக் கொன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## LANDMINES IN THE HOUSE FAMILIED WOMAN LOST LEG.

Jaffna February 12th: Re-occupying the house after two months interval a familied woman lost her leg trapped in a landmine which was burried in.

This incident took place at Kayts Thambasiddy yesterday. One Kumaravel Rasambal(49 yrs) was the person who lost her leg

Her family had re-occupied the house after two months of interval because they vacated the house due to the army operation at Kayts, it was said.

She got trapped to this landmine yesterday while returning from the Verandah by a mine which had been burried in the compound.

## 40 TAMILS ARRESTED IN THANDIYADI AREA.

Day before yesterday in the early morning the Special Task Force, Thandiyady Camp in Amparai District sieged the area called Sinnathottam and arrested nearly 50 innocent Tamils.

As it was told that the arrested were taken to Thandiyady Camp, later nothing regard to these people were heard. Further it was informed that the Thandiyady STF shot and killed one youngster Siva on the last 4th.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 12.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers.

# பரந்த அளவில் விமானத் தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 12

வவுனியா நகரை அண்டிய பகுதியில் நேற்று முன்தினம் முதல் பெருத்த எடுப்பில் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. இதனால் இப்பகுதியில் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது.

வவுனியா விமானப் படை முகாம் ஓடுபாதையில் இருந்து மாறி மாறிப் புறப்படும் பொம்மர்கள் அயலில் உள்ள இடங்களில் குண்டுகளை வீசுவதும், மீண்டும் வந்து தரையிறங்கி குண்டுகளை ஏற்றிக் கொண்டு செல்வதுமாக இருந்தன.

நொச்சிமோட்டை, தாண்டிக்குளம், பேயாடிக்கூழாங்குளம், ஓலுமடு, பண்டிக்கெய்தகுளம், புதுக்குளம், சாஸ்திரிகூழாங்குளம், ஓமந்தை முதலிய பகுதிகளிலேயே கடும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. ஹெலிக்கொப்டர்களும் ஆங்காங்கே கலிபர், ரொக்கட் தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகரப் பகுதியிலிருந்து வடக்கு நோக்கி முன்னேற முயலும் படையினருக்கு உதவியாகவே வான் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

நேற்று முன்தினம் காலையில் பம்பைமடுப் பகுதியில் பொம்மர்கள் நடத்திய தாக்குதலில் அரசாங்கத் தமிழ் பாடசாலை முற்றாகச் சேதமடைந்தது. நரசிம்மன் கோயிலும் பலத்த சேதத்திற்குள்ளானது.

நெல்லுக்குளம் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் ஒரு வீடும் வீட்டிலிருந்த பெறுமதிமிக்க பொருள்களும் முற்றாக நாசமடைந்தன.

சாஸ்திரிகூழாங்குளத்தில் பொம்மர் தாக்குதலுக்கு இலக்காகி காயமுற்ற பெனடிக் ஜிம்சன் ஜோர்ஜ் (வயது 21 - கிளிநொச்சி) என்பவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டுள்ளார்.

(உ-15)

AIR RAIDS BROADLY.
Jaffna February 12th:

Since day before yesterday in the vicinity of Vavuniya town, air attacks are been handled in a nasty way. As such vast distruction had taken place in those areas From the runway of Vavuniya the bombers which taken off one after other propels the bombs in the vicinity, and seen very alternatively coming to load the bombs.

The nasty bombardment is been carried out in the areas of Notchimottai, Thandikulam, Peyadikoolankulam, Puthukulam, Shasthrikoolankulam and Omanthai. Further it is known as the helicopters too are continuing calibre rocket attacks here and there.

These air raids are been carried out as the armed forces are in attempt to proceed towards north from Vavuniya Town.

Bomber attacks in Pompaimadu areas day before yesterday damaged a government Tamil school completely and heavily damaged the Narasimman Temple.

In the air raid at Nellukkulam area a house with valuable goods completely damaged. One Benedict Jimson George (21 yrs) injured by bomber attack at Shasthrikoolankulam was removed to Jaffna Hospital.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 13.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# வீதியோரங்களில் கிடக்கும் சடலங்கள்

யாழ்ப்பாணம், பெப். 13

நேற்று முன்தினம் ஓமந்தைப் பகுதியில் நடந்த விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் உயிரிழந்த சிலரின் சடலங்கள் வீதியோரங்களில் கிடக்கக் காணப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வீச்சில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் ஒருவரின் தகவலின்படி-

நொச்சிமோட்டையில் இருந்து ஓமந்தை வரை ஆண்களும், பெண்களுமாக எட்டுக்கும் மேற்பட்டோரின் சடலங்கள் வீதியோரங்களில் காணப்படுகின்றன என்று தெரியவருகிறது.

அப்பகுதிகளில் நடந்த இராணுவ நடவடிக்கைகளின் போது பலர் காயமடைந்தனர் என்று அவர் கூறுகிறார்.

இவ்வேளை, மாணிக்கவளவு என்ற இடத்தில் ஒரு சடலமும், பரநாட்டாங்கல்லில் இரு சடலங்களும் காணப்பட்டன.

உயிரிழந்தவர்களில் அனேகர் பல இடங்களிலும் இருந்து சென்றவர்கள் என்றதால் எளிதில் அடையாளம் காண முடியாதிருப்பதாகவும் கூறப்படுகிறது. (உ-15)

## DEAD BODIES ON ROAD SIDES

Jaffna February 13th: It is informed that several dead bodies were been found on road sides in result of bombardment which took place day before yesterday in Omanthai area. As per statement of a person who was affected in this incident and at Jaffna Hospital - There are more than eight bodies including males and females on side of the roads from Notchimottai to Omanthai.

He further said that there are several injured in this army operation. At the same time in a place called Manickavalavu there was a dead body seen and further two more dead bodies were found in Paranatankal.

Almost of these victims were outsiders, identification was not easy.

# ஓமந்தை குண்டுவீச்சில் கட்டடங்கள் சேதம்

யாழ்ப்பாணம், பெப். 13

ஓமந்தைப் பகுதியில் கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் இடம்பெற்ற பொம்மர், ஹெலித் தாக்குதல்களில் பலர் படுகாயமடைந்தனர்.

திங்களன்று இடம்பெற்ற வான் தாக்குதலில் ஓமந்தை உபதபால் நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை, பேக்கரி, சைக்கிள் திருத்தும் கடை, கிராம சபை, பொது நூல் நிலையம் என்பன சேதமடைந்தன.

அப்பகுதியில் — வீதியால் சென்ற — இனந்தெரியாத நபர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் பேக்கரி உரிமையாளரான சின்னத்துரை (வயது 58 ஓமந்தை), வேலுப்பிள்ளை சின்னத்தம்பி (வயது 74 — நெல்வேலிக்குளம்), ஜெயபாலன், சின்னையா ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இவர்களில் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டுள்ளார்.

இதனிடையில் —

கடந்த ஞாயிறன்று சொத்தக்காரன்குளத்தில் இடம்பெற்ற ஆட்லறி ஷெல் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

## BUILDINGS COLLAPSED DUE TO BOMBARDMENT AT OMANTAI.

Jaffna February 13th: Several inserted to injuries at Omantai during last Sunday and Monday due to Heli and bomber attacks.

The bombardment which was carried out on Monday at Omantai damaged the sub Post Office, the branch of the Multi Purpose Co-operative Stores, Bakery, bicycle repairing shop, village council and the Public library.

An unknown pedestrian got killed on the spot. Bakery owner Sinnathurai (58 yrs) Velupillai Sinnathamby (74 yrs) Nelvelikkulam) and Jayapalan, Sinniah were

severely wounded in this incident. Among these injurds Velupillai Sinnathamby was removed to Jaffna Hospital. In the mean time 2 civilians received injuries last Sunday at Kuthukkarankulam by artillery shelling.

### கொக்குவிலில் ஹெலி ரொக்கட் வீச்சு:

# பலியான 7 பேரின் பூதவுடல்களும் ஒரே புதைகுழியில் நல்லடக்கம்

கொக்குவில், ஜூன் 28

கொக்குவில் ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற ஹெலி ரொக்கட் வீச்சில் இறந்தோர் எண்ணிக்கை ஏழாக அதிகரித்தது.

ஏழு பேரின் பூதவுடல்களும் ஆறு பிரேதப் பெட்டிகளில் வைக்கப்பட்டு, ஒரே புதை குழியில், கிறிஸ்தவ முறைப் படி நல்லடக்கம் செய்யப்பட்டன.

ஆறு பிரேதப் பெட்டிகளும் கைத்தாங்கலாக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. அந்தக் காட்சியைக் கண்ட அனைவரும் கண்ணீர் விட்டு அழுதனர்.

கோமர் (வயது 34), அவரின் இரு புதல்வர்களான டெலான் (வயது 7), டெனான் (வயது 4) ஆகியோரும் உயிரிழந்தனர். கோமரின் ஒரே மகளான டெலாயினியும் (வயது 5) திருமதி புவனேஸ்வரி

~~(4 ஆம் பக்கம் பார்க்க)~~

-கோமர் (வயது 28) காயமடைந்தவர்களாவர்.

புவனேஸ்வரியின் சகோதரியின் பிள்ளைகளான வசந்தகுமார் (வயது 14), அசோக்குமார் (வயது 13), சுரேஷ்குமார் (வயது 10), செல்வகுமார் (வயது 07) ஆகியோர் இறந்த மற்றப் பிள்ளைகளாவர்.

புவனேஸ்வரியின் சகோதரியின் பிள்ளைகள் நல்லூர் அரசடி புதுச்சிவன் வீதியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நேற்று முன்தினம் மாலை பாதுகாப்புக் கருதி சம்பவம் நடைபெற்ற வீட்டில் கொண்டுவந்து விடப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த உதயகுமார் (வயது 12) படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருமதி புவனேஸ்வரியின் சகோதரரான திரு. செல்வராசா மாணிக்கம் (வயது 26) அவரின் மனைவி வசந்தா (வயது 21) ஆகியோரும் படுகாயமடைந்துள்ளனர்.

(ஒ-69-51)

## ROCKET FIRING BY HELICOPTER AT KOKUVIL

### - The bodies of the 7 persons were interred in one grave -

The number of those died in the helicopter rocket firing opposite Kokkuvil railway station, has increased to seven. The seven bodies were placed in 6 coffins and interred in one grave according to Christian Custom. The six coffins were carried to Kokkuvil cementry and those who witnessed the scene cried. This incident took place day before yesterday.

Homer (34), his two sons, Delona (7) and Denon (4) also lost their lives Homer's only daughter Dayalini (5) and his wife Puvaneswary were those injured. The other children died are Vasanthakumar (14), Asokumar (13), sureshkumar (7) all of Puvaneswary's sisters children. These children lived at Nallur Arasady New Sivan Road. It was stated that these children were brought here to ensure their safty at the house which the incident took place. Uthayakumar (12) of the same family was admitted to hospital with serious injuries. The brother of Puvneswary, S.Manikan (26) and his wife Vasantha (21) were also seriously injured.



பலியான 7 பேரின் சடலங்களும் ஆறு பிரேதப் பெட்டிகளில் வரிசையாக வைக்கப்பட்டுள்ளது. (படம்-1)

7 victims dead bodies left in rows in coffins.

# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
# People's Front of Liberation Tigers



28.06.1991 அன்று ஸ்ரீலங்கா விமானப்படையின் ஹெலி நடத்திய றொக்கட் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் மூவரின் படம் மேலே உள்ளது.

Photographs of three victims who were subjacted to Sri Lankan Air Force helicopter Rocket attack on the 28 - 06 - 1990 is seen above.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
## People's Front of Liberation Tigers




28.06.1991 அன்று கொக்குவிலில் ஸ்ரீலங்கா விமானப் படையின் ஹெலி நடத்திய ரொக்கட் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் இரு சிறுவர்களின் உடல் பாயில் வைக்கப்பட்டுள்ளது.
(3ஆவது படம்)

In an air raid of a Sri Lankan Air Force by Heli Rocket attack on 28.11.1991 two children victimized to death and their bodies being laid on a mat.

இத் தாக்குதலில் பலியான சிறுவர்களில் மூவரை ஆஸ்பத்திரிக்கு வாகனத்தில் ஏற்றிக் கொண்டு போகும் போது
(4ஆவது படம்)

3 Victimised children in this attack being taken to hospital by a vehicle



# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

# People's Front of Liberation Tigers



03.02.91 அன்று கொக்குவில் கிழக்கு ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி அகதி முகாம் மீது ஸ்ரீலங்கா குண்டுவீச்சு விமானங்கள் போட்ட குண்டினால் பாடசாலையின் வகுப்பறை முற்றாக சேதமுற்றது. (1ஆவது படம்.)

Kokuvil East Sri Ramakrishna Saratha Girls College, which was converted to Refugees Camp was bombed on 03.02.1991, and class rooms of the College damaged completely (1st Picture

---



இக்குண்டு வீச்சில் பாடசாலையின் நூலகம் முற்றாக சேதமுற்றது. (2ஆவது படம்.)

The Liberary of the School also damaged due to the bombing (2nd Picture)

---

இக்குண்டு வீச்சு பற்றி 04.02.91 அன்று ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்த செய்தி கீழே தமிழ், ஆங்கிலத்தில் உள்ளது.

The news report of Eelanatham daily, in regard to this bombing on 04.02.91 appear below.

## பாடசாலைமீதான குண்டு வீச்சு; உயர் அதிகாரிகளுக்குக் கவலை

(யாழ்ப்பாணம்)

விமானக் குண்டு வீச்சால் ஒரு கல்விக்கூடம் முற்று முழுதாக சேதமடைந்து போனதையிட்டு யாழ். கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் தமது கவலையை தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் மகாவித்தியாலயத்தின் மீது குண்டு வீசப்பட்டதால் அந்த மகாவித்தியாலயம் தரைமட்டமாகப் போயுள்ளதுடன் தளபாடங்களும் முற்றாக அழிந்து போனதையிட்டு அங்கு கல்விபயின்று வந்த மாணவிகளை வேறு ஒரு பாடசாலைக்கு உடனடியாக மாற்றி வைப்பது பற்றி ஆலோசிக்க உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (லோ)

## BOMBARDMENTS ON SCHOOL

Jaffna Education Department high officials had proclaimed their anxities as a School completely damaged by bombardment. As there was a bombardment day before yesterday on to Kokuvil Ladies Mahavidlayam. The school was completely ground levelled and the furniture too were completly damaged. As such, for an immediate transfer to another School for the students are under consideration, the high officials said.

## பிரேமதாசாவின் வருகை ஒட்டி நீலாவணையில் 400 பேர் கைது

(மட்டக்களப்பு)

கோட்டைக்கல்லாறு நோக்கி பயணம் செய்து கொண்டிருந்த நானூறு பேர் வரையான பொதுமக்களை நீலவணை எனும் இடத்தில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டனர்.

கடந்த 12ஆம் திகதி காலை ஒன்பது மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது. நாளை 15ஆம் திகதி சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மட்டக்களப்புக்கு வர இருப்பதை ஒட்டியே இக்கைது இடம்பெற்றதாக தெரியவருகின்றது.

### 400 ARRESTED AT NEELAVANAI DUE TO PREMADASA'S VISIT
(Batticaloa)

About 400 civilians were been arrested by the Sri Lankan Army when they were on their way towards Kottaikkallaru at Neelavanai and took them to the army camp.

This incident took place on the last 12th by about 9.00A.M. in the morning. It is understood that this operation was carried out as President Premadasa is due here on the 15th tomorrow.

## முல்லையில் பரவலான விமானக் குண்டுவீச்சு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவத்தினரின் முன்னேறும் முயற்சிக்கு ஆதரவாக கடுமையான குண்டுவீச்சுத் தாக்குதலை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் மேற்கொண்டுள்ளன.

நேற்றுக் காலை ஆறு மணியளவில் மூன்று குண்டுவீச்சு விமானங்கள் மூன்றாம் கட்டைப் பகுதியில் குண்டுகளை வீசின. இதனைத் தொடர்ந்து ஹெலிகொப்டர்களின் தாக்குதலும் இடம்பெற்றது. இரண்டு ஹெலிகொப்டர்கள் கிரனைட் வீச்சும், கலிபர் வேட்டுகளையும் தீர்த்தன.

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதலும் இடம்பெற்றது. இந்த குண்டுகள் வற்றாப்பளை அம்மன் ஆலய பகுதியில் விழுந்து வெடித்தன. (85)

### BROAD BOMBARDMENT AT MULLAI
(Mullaitivu)

On an attempt of advancing the Sri Lankan Air Force planes favoured Mullaitivu Army by handling severe bombardments.

Yesterday morning by about 6.00 A.M. 3 bombers were in air raids at 3rd Mile Post. Following this helicopter straffing also initiated. Two helicopters acted in throwing granades and calibre attacks. Shell attacks were also carried out from Mullaitivu Army Camp. These fell at Vettapallai Amman Temple areas and exploded.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 13.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

## வடமராட்சி நோக்கி ஷெல்!

யாழ்ப்பாணம், பெப். 13

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று வடமராட்சிப் பகுதி நோக்கி ஷெல் குண்டுகள் ஏவி விடப்பட்டன.

இடைக்காடு பகுதியில் விழுந்ததாகக் கூறப்படும் ஷெல்லுக்கு ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

SHELLING TOWARDS VADAMARADCHY.

Jaffna February 13th:

Shelling carried out towards Vadamaradchy areas from Palaly Army Camp. One shell which fell at Idaikadu area caused death to a person the information said.

Date 15.02.1991 Name of Paper EELANAATHAM Clipping of News Papers

## ஊர்வலம் நடத்த அரசாங்கம் தடை

இம்மாதம் 19 ஆம் திகதி நுகேகொடையில் அன்னையர் முன்னணி நடத்தவுள்ள பொதுக்கூட்டத்தை ஒட்டி, ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்துவதற்கு அரசினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இத் தகவலை நேற்று வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

எனினும், நுகேகொடையில் பொதுக்கூட்டம் நடத்துவதற்கு அனுமதியளிக்கப்படும் என்று அமைச்சர் சொன்னார்.

எந்த அரசியல் கட்சியும் பொதுக்கூட்டங்கள் நடத்தவும் ஒலிபெருக்கிகளைப் பாவிக்கவும் ''பிக்கெட்டிங்'' நடத்தவும் அனுமதியளிப்பது என்று அரசு தீர்மானித்துள்ளது.

ஆனால் எக்காரணங்கொண்டும் ஊர்வலங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்த அனுமதியளிக்கப்படமாட்டாது—என்று அமைச்சர் மேலும் சொன்னார். (ஓ-எ)

GOVERNMENT DESTRUCTION FOR RALLY.

Due to a public meeting at Nugegoda this month 19th by the Mothers Front, the Government have obstructed for rallies and uproars.

Ranjan Wijeratne expressed this in the weekly reporters conference yesterday. Anyway permission will be granted to hold a meeting at Nugegoda he added.

The Government had decided to permit any political party to hold meetings, to use loudspeakers and picketing. But in any circumstances no permission will be granted to have rallies and uproars, said the Minister.

## நவக்கிரியில் மூவர் காயம்

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றிரவு 10 மணியளவில் ஏவிவிடப்பட்ட ஷெல் ஒன்று புத்தூர் மேற்கு நவக்கிரியில் வீடொன்றின் மீது விழுந்து வெடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

எஸ். தர்மரட்ணம் (வயது 29) அவரது மனைவி இ. பாக்கியம் (வயது 28), அவர்களது மகனான ரமேஷ் (வயது 10) ஆகியோரே காயமுற்றனர்.

இவர்களில் ரமேஷ் படுகாயமடைந்துள்ளார்.

மூவரும் நேற்று நள்ளிரவு யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர். (உ-3)

THREE INJURED AT NAVAKKIRI.

The shell propelled from Palaly Army Camp yesterday night by about 10.00 P.M. fell on to a house at Navakkiri, Puttur West injuring three in one family.

S.Tharmaratnam (29 yrs) his wife S.Packiam (28 yrs) and their son Ramesh (10 yrs) were the injured ones. Among these injured ones Ramesh is been seriously wounded. All of them were brought to Jaffna Hospital in the jid night yesterday.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

**Date** 14.02.1991 **Name of Paper** EELANAATHAM **Clipping of News Papers**

# ஷெல் தாக்கி இளைஞர் பலி

(செ. த லை.)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதலின்போது அச்சுவேலி - வலலாய்ப் பகுதியைச் சேர்ந்த வீரகத்திப் பிள்ளை கர்ணன் (26 வயது) என்பவர் படுகாயமடைந்த வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

YOUTH VICTIMIZED TO SHELL ATTACK.

Shell attack broadly continued day before yesterday from Palaly Army Camp. Veerakethipillai Karnan (26 years) of Atchuvely Valalai area died owing to this attack, after he was removed to Hospital with severe injuries.

Date 15.02.1991 Name of Paper EELANAATHAM Clipping of News Papers

# அமைதியை விட அழிவில் லாபம் தேடும் சிறிலங்கா

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சகஜ நிலை நிலவாத பகுதிகளில் ஜனசக்தி திட்டத்தைச் செயற்படுத்த வேண்டாம் என ஜனசக்தி ஆணையாளர் [illegible] அறிவித்து விட்டார். இதன் அடிப்படையில் வடக்கு கிழக்கில் தமிழருக்கான ஜனசக்தி உதவிகள் உடன் நிறுத்தப்பட்டு விடும் என்பதில் சந்தேகமில்லை.

முன்னரே ஜனசவியத் திட்டத்தில் தமிழர் புறக்கணிக்கப்பட்டு வந்தாலும் இந்த அறிவிப்பானது முற்று முழுதாக தமிழரைப் புறக்கணித்து விட்டது. இந்த நடவடிக்கையும் தமிழர் மீதான பொருளாதாரத் தடையின் ஒரு பகுதியே ஆகும்.

இராணுவ ரீதியாக தனது இலக்குகளை அடைய முடியாத சிறிலங்கா அரசாங்கத்தின் மாற்று நடவடிக்கையே இதுவாகும். கடந்த வருடம் யுத்தம் தொடங்கியதில் இருந்து தமிழரின் பொருளாதார நடவடிக்கைகளை முடக்கச் செய்யவும், அழித்து விடவும் சிறிலங்கா அரசாங்கம் முனைப்பாக செயற்படும் அதே வேளை தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள், நஷ்டஈடுகள் என்பவற்றையும் நிறுத்துவதில் மிகவும் கரிசனையாகவுள்ளது.

இதன் வெளிப்பாடே ஜனசவிய நிறுத்தமும் ஆகும். அத்தோடு அரசசார்பற்ற வெளிநாட்டு, உள்நாட்டு நிறுவனங்களின் உதவிகளும் சென்றடைவதைத் தடை செய்யும் நோக்கமாக இந்த நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த சிறிலங்கா அரசாங்கம் முனைகின்றது.

தமிழர் பிரதேசத்திற்கான அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்துதல், மானியங்களை வெட்டுதல் என்பது தனியாக தமிழரைப் பொருளாதார ரீதியாகப் பலவீனப்படுத்தும் அதேவேளை சிறிலங்கா அரசிற்கு இராணுவ ரீதியான நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு போதுமான நிதி உதவிகளையும் வழங்குவதாக உள்ளது.

அண்மையில் இம்மகாணத்தில் உள்ள சிறிலங்கா ஜனாதிபதியின் பிரதிநிதி வடக்கு கிழக்கில் யுத்தம் தொடர்வது என்பது சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து நட்டம் எதுவும் இல்லை. ஐ.தே. கட்சியைப் பொறுத்து சாதகமானதே என்று தெரிவித்தார்.

போர் தொடர்ந்து கொண்டிருக்கும் வடக்கு கிழக்கிற்கான அபிவிருத்தி நிதி எவையும் ஒதுக்கத் தேவையில்லை. இதே போன்று வடக்கு கிழக்குப் பகுதிக்கு வெளிநாட்டு நிதி உதவிகளையோ, நிவாரணங்களையோ அவர்களுக்கு வழங்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்கான பாதுகாப்பு நிதியை ஒதுக்குவதன் மூலம் இராணுவச் செலவீட்டிற்கான நிதி மூலத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்.

AVOIDING PEACE, SRI LANKA SEARCHING PROFIT BY DESTRUCTION.

------

Janasakthi Commissioner had declared not functuate the Janasakthi Scheme in the provinces of North and East where ever there is no normalism. According to his declaration, the Janasakthi helps for the Tamils of the North and East will be stopped immediately is no doubt

Although the Tamils were disdkaimed in earlier periods, this declaration had disdained the Tamils completely. This action also a part of the economical obstruction on Tamils.

Thisis an alternative operation of the Sri Lankan regime, as they were unable to reach their target by military operation. At a time of concentrating with full galp to restraint and destruct the Tamils economical activities since the war initiated last year, the Sri Lankan regime, is very particular of hindering the Tamil dues such as helps and compensations.

The outcome of this action is the stoppage of Janasakthi Scheme. Further it is attempting to control non governmental inland and foreign establishments in order to obstruct those organisation's helps reaching the Tamils.

Suspending the progressive schemes which are due to Tamil regions and cutting the compensations, when on way considered as economical blockades to emaciate the Tamils, it also becomes a financial aid to the Sri Lankan regime to persuade the military activities.

When recently a representative of the President spoke at

Trincomalee said, as far as Sri Lankan government is concerned, continuation of war in the North East is not a loss as far as United National Party is concerned, it is a profit. When war is continued there will be no necessity to reserve any money in shake of North and East progressive works. As this, there is no necessity to distribute them whatever the financial aids and relief fundhelps received to North and East. By preserving this, the defence funds for the army expenditures could be increased.

Further, the financial aids from the allies also could be diverted to the direction of the war. At this stage, the war is not going to affect U.N.P. government seriously although it is functioning with debts, said that official.

On the other side, the official further had stated The war is only going to extend the U.N.P's period of reigning and if the war is been excluded or if an attempt is been taken to settle the ethnic problem, the U.N.P. government will collapse.

As a proof to that officials declaration, the President of Asian Development Bank had increased the Sri Lankan aid to 20 billion dollars, could be mentioned. This increasement at a stage of these days, could be imagined as bribe or a hand cup in order to allow the ships which are involved in the Gulf War for a rest.

Up to a certain limit the official had spoken the fact with open heart, could be accepted. At this stage it is very clear that the Sri Lankan Government on any circumstances is not going to solve the ethnic problem. Consciencely the world also had to realise this. Tamil population also should understand. Having this in mind the Tamils should improve their struggle.

மேலும், நட்பு நாடுகளின் நிதி உதவிகளையும் போருக்குத் திசைதிருப்பிக் கொள்ளலாம். இந்நிலையில் கடனுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தைப் போர் பெரிதாகப் பாதித்து விடப் போவதில்லை என அவ்வதிகாரி தெரிவித்துள்ளார்.

மறுபுறமாக போரே ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிக்காலத்தை நீடிக்கும் எனவும், போர்ச் சூழல் தவிர்க்கப்பட்டால் அல்லது இனப்பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டால் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் கவிழ்ந்து விடும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

அந்த அதிகாரியின் கூற்றிற்கு ஆதாரமாக இந்த வாரம் சிறிலங்கா வந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் சிறிலங்காவிற்கான உதவியை 20 கோடி டாலராக உயர்த்தியதையே காட்டலாம். இந்த உயர்வானது இளைப்பாறும் காலகட்டத்தில் வளைகுடாப் போரில் ஈடுபடும் கப்பல்கள் இறங்கிச் செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டதற்காக உடன் கொடுக்கப்பட்ட லஞ்சம் அல்லது கையூட்டு என நாம் கொள்ளலாம்.

ஏறத்தாழ இந்த அதிகாரி மனந்திறந்து உண்மை நிலையை வெளியிட்டுள்ளார் என்றே சொல்லலாம். இந்த நிலையில் இலங்கையில் எழுந்துள்ள இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க சிறிலங்கா அரசாங்கம் ஒரு போதும் உள்ளார்ந்த ரீதியாக ஈடுபடமாட்டாது என்பதே உண்மை. இதனை உலகமும் உணரவேண்டும். தமிழ் மக்களும் உணர வேண்டும். இதனை மனதிற் கொண்டு தமிழர் தமது போராட்டத்தையும் விருத்தி செய்ய வேண்டும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

**Date** 16.02.1991 **Name of Paper** UTHAYAN **Clipping of News Papers**

# முல்லைத்தீவில் பொம்மர் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், பெப். 16
முல்லைத்தீவில் நேற்றும் பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.
மூன்றாம் வாய்க்கால் பகுதியில் குண்டு வீச்சினால் பெரும் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் சேதவிவரங்கள்பற்றி ஊர்ஜிதமான தகவல்கள் ஏதும் உடனடியாகக் கிடைக்கவில்லை. (ஓ-15)

BOMBARDMENT AT MULLAITIVU.

Jaffna February 16th:

Even yesterday bomber attacks were attribated at Mullaitivu. Hellish damages are been reported from that particular area the 3rd Unit. There were no confirmihg information regard to damages.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

Date 16.02.1991 Name of Paper EELANAATHAM Clipping of News Papers

**கடற் தொழிலாளர் மீது குண்டு வீச்சு; மூவர் காயம்**

(யாழ்ப்பாணம்)
மன்னார் மாவட்டத்தில் விடத்தல்தீவு பகுதியில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றவர்கள் மீது ஹெலியும் குண்டு வீச்சு விமானமும் தாக்கியதில் மூவர் காயமடைந்தனர்.
செ. செபஸ்தியன் (வயது 38) அ.செபஸ்தியன் (வயது 23) இம்மனுவல் மெசின் (வயது 28) ஆகியோரே இத் தாக்குதலில் காயமடைந்தோராவர். (லோ)

BOMBARDMENT ON FISHERMEN
THREE WOUNDED (Jaffna)

3 fishermen subjected to injuries at Vidathaltivu in the Mannar District when helicopter and bombers attacked them.

S.Sebestian (38 yrs) A.Sebestian (23 yrs) and Emmanuel masine (28 yrs) were the three injured in this incident.

**எறிகணையால் மூவர் காயம் வீடு சேதம்**

(செ. த. மை)
பலாலி முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு பொது மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின்போது ஐந்து எறிகணைகள் புத்தூர், நவற்கிரி பகுதியில் வீழ்ந்து வெடித்தன. ஓர் எறிகணை வீடொன்றின் மீது வீழ்ந்து வெடித்ததில் அவ் வீடு முற்றாகச் சேதமடைந்தது. அப்பொழுது ஆழ்ந்த நித்திரையிலிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த செ. தருமரத்தினம் (32 வயது) த. பாக்கியலட்சுமி (28 வயது) த. ரமேஸ்குமார் (10 வயது) ஆகியோர் படுகாயமடைந்தனர்.
மேலும் தோட்டங்கள், வீட்டு வெளிப்புறங்களிலும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. அப்பொழுது அவ்விடங்கள் பிரகாசமான வெளிச்சமாகத் தெரிந்ததாகவும் பின்னர் அப்பகுதி கருகிய நிறத்துடன் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

3 INJURED AND HOUSE DAMAGED BY LAUNCHER.

Launcher attacks were under taken from Palaly camp towards civilian inhabitants areas day before yesterday night. During this attack 5 launcher shells fell and exploded in the Puttur Navatkiri areas. Further one launcher shell fell on a house and destroyed it completely.

S.Tharmaratnam (32 yrs) T.Packialedchumy (28 yrs) and T.Rameshkumar (10 yrs) all of one family who were fast as sleep subjected to serious injuries.

Further the launcher shells fell on to garden and towards the fence exploding. It was informed that there was a bright illumination at the time of bombs exploded and later found chared.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

64

Date 16.02.1991 Name of Paper UYHAYAN Clipping of News Papers

## முன்வினைக்கு முற்காப்பா?

தென்னிலங்கையில் ஊர்வலங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தென்பகுதித் தாய்மார்கள் இம்மாதம் பத்தொன்பதாம் திகதி நுகேகொடையில் நடத்த உத்தேசித்துள்ள பொதுக் கூட்டத்தை முன்விட்டே அரசு இந்த முற்காப்பு நடவடிக்கை!

[illegible]

### PRE-CAUTIONS FOR PRE-ACTS

A ban was made to organize processions and rallies in the South. This pre-caution by the Government is in connection with the mass meeting that scheduled to held in Nugegoda on the 19th by the Mothers' Front.

The people have the right to organize processions, rallies and meetings if the Government and its allies had any excesses on its Official capacity and with a view to revenge the innocents. These are fundermental Rights under a Democratic Frame.

Obstructing these rights and imposing ban on public expressions, speeches, writings and on the freedom of assembling is an Anarchism. That too banning the processions and Rallies organized to expose the Human Rights violation shows the stiffness of those who are in power.

When the innocents and un-armed were inserted to lost and when they laid foundation for this without any reasons, purely for they are opposed to the ruling party, the Government have failed to understand that they will have to face this type of objections, condemns and upraisings. The truth that when intiquity, excesses and injustices were let loosened will sometimes fall on the same man who led them. It was not known to the Government at that time.

About 60,000 were killed (including missing persons) in 1989, in south for the reasons that they are opposed to the Government and this was confirmed.

The members in the Mothers' Front are the mothers, sisters and wives of those killed innocents. The Government is feared of the power of the Mothers' Front, before it is in action and is trembling.

Date: 16.02.1991. Name of Paper: UTHAYAN Cliping of News Papers

Several years prior to the Human Rights Violations in the South, the injustices in the North and East have started. It is continuing still. Heavy Bombing, Murderings, starvation due to ban on food stuffs, deaths due to shortage of drugs and prevention on Education and Employment facilities are the violations that takes place in North.

The Government will have to answer for all these mis-deeds and will have to reap for what had been sawn now.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 17.02.1991 Name of Paper EELANATHAM Clipping of News Papers

# அக்கறையற்றதன் விளைவே முன்நிபந்தனை

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினால் ஆயுதங்களைக் கைவிட்டு ஏனைய இயக்கங்களுடன் சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று முன்தினம் பொதுக் கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதியின் இந்த முன் நிபந்தனைகள் அரசாங்கம் தமிழர் தேசிய பிரச்சினைக்கு அமைதியான முறையில் அரசியல் தீர்வு காண எள்ளளவும் நோக்கம் கொண்டிருக்கவில்லை என்பதையே காட்டுகின்றது. அதாவது சிறிலங்கா ஜனாதிபதியின் இப்பேச்சில் "பேச்சுவார்த்தை நடத்த புலிகள் விரும்பினால்" என்பதில் இருந்து அரசிற்கு பேச்சுவார்த்தையில் எந்தவித அக்கறையும் இல்லை. விடுதலைப்புலிகள் தேவையானால் பேச்சுவார்த்தை நடத்த வரட்டும் என்ற தொனியே தென்படுகின்றது.

ஆனால் கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது ஆயுதத்தை கைவிட வேண்டும் என்றோ அன்றி, ஏனைய குழுக்களுடன் சேர்ந்தோ பேச்சிற்கு வரவேண்டும் என நிபந்தனை விதிக்கவில்லை. தமிழர்களையும், புலிகளையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த சிறிலங்கா எண்ணியது. ஆனால் புலிகள் அதற்கு இடம் கொடுக்கவில்லை. இந்த நிலையில் போர்மூண்டது.

ஆறுமாதப் போரின் பின்னர் விடுதலைப்புலிகள் அறிவித்த ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அத்தோடு பேச்சுவார்த்தைக்கும் முன் நிபந்தனைகளையும் விதித்துள்ளது. இவை பேச்சுவார்த்தைக்குரிய சூழ்நிலையை உருவாக்குவதாயில்லை.

கடந்த மாதம் விடுதலைப்புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பின் போதும் சரி, அதற்கு முன்னரும் சரி விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு விதிக்கப்படும் முன் நிபந்தனைகளை எப்பொழுதும் ஏற்றுக் கொண்டதில்லை. இவ்வாறான நிபந்தனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைக்கு சிறிலங்காவுடனோ, இந்தியாவுடனோ புலிகள் ஒரு போதும் சென்றதில்லை. இந்த நிலையில் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகளை விதிப்பது என்பது பேச்சுவார்த்தையைத் தட்டிக் கழித்து இராணுவ தீர்வை சிறிலங்கா அரசாங்கம் நாடி நிற்பதையே காட்டுகின்றது.

மேலும் முன் நிபந்தனைகளில் ஒன்றான ஆயுதங்களைக் கைவிடுதல் என்பதும் விடுதலைப்புலிகளினால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிபந்தனையாக இருக்கப் போவதில்லை. விடுதலைப்புலிகளையும், தமிழ் மக்களையும் வேறுபடுத்திப் பார்ப்பது இந்த ஆயுதங்களேயாகும். விடுதலைப்புலிகளும் கடந்த காலம் முழுவதும் ஆயுதங்கள் ஒப்படைப்பு, கையளிப்பு என்ற பேச்சிற்கே இடமில்லை [illegible] விடுதலைப் புலிகள் ஆயுதங்களை எந்த [illegible] பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் ஆயுதங்களைக் கைவிடும் என சிறிலங்கா ஜனாதிபதி கோருவது தமிழ் மக்களை தம்மிடம் மண்டியிடும்படி கேட்பதற்கு ஒப்பானதாகும். இதனை தமிழ் மக்களும் புலிகளும் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை; ஏற்கவும் கூடாது.

அடுத்த நிபந்தனையானது தொழிற்படும் ஏனைய தமிழ் குழுக்களுடன் சேர்ந்து பேச்சுவார்த்தைக்கு வருமாறு சிறிலங்கா ஜனாதிபதி அழைப்பதாகும். இதுவும் பேச்சுவார்த்தைக்கு சிறிலங்கா அரசாங்கம் போடுகின்ற முட்டுக்கட்டையாகும்.

ஏனைய தமிழ்க் குழுக்களுடன் சேர்ந்து ஏன் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்குப் போகவேண்டும்? தமிழ் மக்களின் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு தமிழரின் தாயக மண்ணில் பற்றுக் கொண்டவர்களுக்கும், மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்களுக்குமே உரிமை உண்டு. மண்ணில் இல்லாதவர்களுக்கு அதுபற்றிப் பேச உரிமையில்லை.

அந்நிய சக்திகளின் கைக் கூலிகளாகவும் தமிழர் மீதான இராணுவ நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுபவர்களாகவும், அந்நியர்களுடன் சேர்ந்து தமிழர் பெருநிலப்பரப்பையும், கலாசாரத்தையும் அழித்தவர்களுடனும் கூட்டுச்சேர்ந்து எவ்வாறு தமிழர் உரிமைகளைப் பற்றிப் பேச முடியும். அதற்கும் மேலாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் புலிகளுடனேயே பேச வேண்டும் என தொண்டமான் போன்ற அமைச்சரவையில் அங்கம் வகிப்பவரே தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், சிறிலங்கா ஜனாதிபதியின் பேச்சுவார்த்தை சம்பந்தமான பேச்சு அவர் எவ்விதத்திலும் பேச்சுவார்த்தை மூலம் தமிழர் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணத் தயாராக இல்லை என்பதையே காட்டுகின்றது. இன்றைய சிறிலங்கா ஜனாதிபதியின் நிலைமையும் கடந்த கால சிறிலங்கா ஆட்சித்தலைவர்களின் சமாதானம், அமைதி, ஜனநாயகம் என்பவையும் இவ்வாறானதே.

CONDITIONS AND CONCERNS

Sri Lankan President, Mr.Premadasa while addressing a meeting had informed that the Liberation Tigers, if they want to have any Negotiations with the Government, should lay down their arms and come with the other groupes.

The pre-conditions laid down by the President, Premadasa shows that they are not interested in settling the Tamils' National Issues. That is, in President's speech, the wordings ' if Tigers wants to have Negotiations' shows that the Government is not interested in any Negotiations and if

Tigers want, let them come. This shows their attitudes.

But earlier when Negotiations took place, these pre-conditions like lay down the arms - come with the other groupes were not there. Then Sri Lanka thought of using the Tamils and the Liberation Tigers to suit their side. But the Liberation Tigers did not give room for it. At this stage the war took place.

The one sided ceasefire made by theliberation Tigers after six months' battle with the Sri Lankan forces was rejected by the Government. Besides, they have laid laid down pre-conditions for negotiations too which does not create an enviorment for Negotiations.

When one sided Ceasefire proclamations was made or even earlier, the Liberation Tigers had never accepted the pre-conditions. The Liberation Tigers never had a talk with the Sri Lankan Government or with the Indian Government on this basis. At this stage, laying pre-conditions for Negotiations show that the Government is interested in Military Solution by evading Political settlement.

Further the pre-conditions to lay down the arms cannot be accepted and should not be at any atage, by the Liberation Tigers. These arms are giving protection to the Tamils and the Liberation Tigers today. Further in thepast, the Liberation Tigers never agreed to lay down their arms and this was informed clearly. Besides, the Liberation Tigers would not lay down the arms unless and untill the Tamils Issues for which they took arms are settled. Without settling these, Sri Lankan Government asking to lay down the arms is like that of tamils surrendering theselves. This cannot be accepted by the Liberation Tigers and they should not.

The other conditionis to come with the other groupes, staying in Colombo. This is another blockade for the Negotiations by the Sri Lankan Government.

Only those who have patriotism in their Homeland and those who have interest on the welfare of the tamils, can speak about their Issues and on their problems. Colombo residents have no right to speak about the Tamils in North or East.

Those who act as mercenaries to the foreign forces, those who pave way for Military Operation on tamils and their lands and those who destroy the Economy and the Culture of the Tamils with the connivance of the Sri Lanka Military, have no right to speak on thebehalf of tamils. Besides, Sri Lankan Cabinet Ministers like Mr. Thondaman had expressed that Negotiations should be taken with the Liberation Tigers only.

At this stage, the President(s speech shows that he is not interested in political solution by Negotiations. This is not that of the present Head, but also of the past leaders who uttered peace, harmoney and democracy.

Date 17 . 02.1991 Name of Paper eelanaatham Clipping of News Papers

# தாண்டிக்குளம் பகுதியில் ரயர்போட்டு எரித்த தடயங்கள்

(யாழ்ப்பாணம்)

தாண்டிக்குளம் பகுதியில் மனித உடல்கள் ரயர்போட்டு எரிக்கப்பட்ட தடயங்கள் காணப்படுவதாக நேற்று அங்கிருந்து வந்த பிரயாணிகள் ஈழநாதத்திற்குத் தெரிவித்துள்ளனர்.

சில இடங்களில் அரைகுறையாக எரியாத நிலையில் மனித எலும்புகள் அங்கு காணப்பட்டதாகவும், தாண்டிக்குளம் பகுதிகளில் உள்ள கடைகள், வீடுகள் முற்றாக எரிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (85)

BODIES BURNT WITH TYRES AT THANDIKULAM AREAS
(Jaffna)

Marks of human bodies burnt with tyres could be observed in Thandikulam areas said those passengers who come from that area to Eelanatham.

In certain places there are halfly burnt human bornes seen and the boutiques and houses of that area completely under destruction, they further added.

Date 18.03.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# அறுபது பெண்கள் உட்பட 200 தமிழர் கொழும்பில் கைது

கடந்த இரு தினங்களாக பம்பலப்பிட்டி, வெள்ள வத்தை, தெகிவளை பகுதிகளில் 60 பெண்கள் உட்பட 200 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானோர் அந்த அந்தப் பகுதி பொலீஸ்நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நேற்றைய கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. [உ-3]

## INCLUDING 60 WOMEN 200 TAMILS BEEN ARRESTED IN COLOMBO.

Including 60 women 200 Tamils were been arrested in the areas of Bambalapitiya,Wellawatte and Dehiwela for the past two days.

A Colombo daily stated that those arrested were detained at the Police Stati ns in those areas concerned.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

**Date** 18.02.1991 **Name of Paper** Uthayan **Clipping of News Papers**

# உணர்வது எப்போது?

இலங்கை அரசாங்கம் கேட்கும் கடன் உதவியை வழங்குவதற்கு, சர்வதேச நாணய சபை வழமைபோல பல நிபந்தனைகளை விதித்திருக்கிறது. இலவசக் கல்வித்திட்டத்தை ரத்துச்செய்துவிட வேண்டும் என்பதும் அதில் ஒன்றாகும்.

இலங்கை கடந்த வருடம் சர்வதேச நாணய சபையிடம் இருந்து சுமார் 20 கோடி டொலர்களைக் கடனாகப் பெற்றது. ஆனால் இவ்வருடம் 45 கோடி டொலர்களைக் கேட்டுள்ளது.

அரச திணைக்களங்களில் ஆட்குறைப்பு, உணவு, எரிபொருள் மற்றும் போக்குவரத்து வசதிகளுக்குரிய மான்யங்களை நீக்குதல் ஆகிய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டே அரசாங்கம் கடந்த வருடத்தில் கடனை வாங்கியது. அதற்கேற்ப அரச திணைக்களங்களில் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெறும் புதிய நடைமுறையைக் கையாண்டு ஆட்குறைப்புச் செய்தது. போக்குவரத்து எரிபொருள் மான்யங்கள் முற்றாக நீக்கப்படாவிட்டாலும் பெருமளவு குறைக்கப்பட்டன. உணவு மான்யத்தில் கைவைத்தால் மக்கள் புரட்சி வெடிக்கும் என்ற அச்சத்தில் இன்னும் அதனைத் தொடவில்லை.

இம் முறை கடன் பெறுவதானால், முன்னர் பூரணமாக நிறைவேற்றப்படாத நிபந்தனைகளுடன், இலவசக் கல்வியை நீக்குதல் போன்ற கடுமையான மேலதிக நிபந்தனைகளையும் ஏற்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் உருவாகி உள்ளது. இது பெரும் விபரீதமானது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட நிலையாகும்.

உலகவங்கி, சர்வதேச நாணய சபை, இலங்கைக்கு உதவும் நாடுகள் குழு ஆகிய நிதி வழங்கும் நிறுவனங்கள், அமைப்புகளிடமும் மற்றும் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜப்பான் போன்ற நாடுகளிடம் தனிப்பட்ட முறையிலும் இலங்கை இடைவெளி இல்லாது மாதாந்தம் கடனை வாங்கிக் கொண்டே இருக்கிறது.

1977ஆம் ஆண்டில் 496 கோடி ரூபாவாக இருந்த கடன் 1991இல் 44,000 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது! அப்பாடா! வேறு எந்த நாடாவது இப்படிக் கடனிலேயே "வாழ்க்கை" நடத்திக் கொண்டிருக்குமா என்பது சந்தேகமே!

அதாவது கடன் இல்லாமல் இயங்க முடியாது என்ற நிலையில், இலங்கையின் பொருளாதாரம் மிகவும் வெட்கத்துக்குரிய, சீரழிந்த கட்டத்தில் உள்ளது.

இந்த ஊசலாடும் நிலையிலும், தமிழருக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை கட்டவிழ்த்துவிட்டு, அவற்றுக்காக கோடிக்கணக்கான பணத்தை அரசாங்கம் செலவு செய்கிறது. கடன் வாங்கி யுத்தம் நடத்துகிறது.

இதனைத் தென்னிலங்கை மக்கள் உணர்வதாக இல்லை. கடன் கொடுக்கும் நிறுவனங்களும் காட்டிக்கொள்வதாக இல்லை. கடன் வழங்குவதானால் தமிழருக்கு எதிரான ஒடுக்கு முறைகளை நிறுத்த வேண்டும் என்று நிபந்தனை விதிக்க அவற்றுக்கு 'மனம்' வரவில்லை; 'மனம்' வராது. கடனுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகள் ஒன்றில் தமக்கு ஏதாவது வர்த்தக நலன்களைத் தருபவையாக அமைய வேண்டும் அல்லது அரசியல் நலன்களை மறைமுகமாக விளைவிப்பவையாக இருக்க வேண்டும் என்பதிலேயே அவற்றின் கவனம் எல்லாம்!

ஏற்கனவே, வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் 70 சதவீத மக்களைக் கொண்ட நாட்டில், உணவு மானியத்தை நிறுத்தினால் மக்கள் பஞ்சம், பட்டினியால் மடிவார்கள். இலவசக் கல்வியை நிறுத்தினால் படிப்பறிவில்லாத எதிர்காலச் சமுதாயம் உருவாகும்.

தமக்கு நிகழவுள்ள இந்தப் பேராபத்துக்களை சிங்கள மக்கள் உணராமல் இருட்டில் இருக்கிறார்கள். தமிழர்களின் உரிமைகளைக் கொடுத்து நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்று அவர்கள் எண்ணுவதாக இல்லை. தமது வாழ்க்கை சுருங்கி வருகிறது என்ற ஆபத்தான உண்மையை அவர்கள் எப்போது உணருவார்களோ!

WHEN TO CONTEMPLATE

The International Monetory Fund, to consider the request made by the Sri Lankan Government for a loan, has laid certain pre-conditions. Abolition of Free Education in Sri Lanka is one among them.

Sri Lanka got 20 million Dollars as loan from the IMF last year. But today, a request for 45 millions Dollars were requested.

Freezing of man-powers in Government Departments, removal of subsidies on food, fuel and transport facilities were the conditions laid earlier and they were accepted to a certain extent by the Sri Lankan Government and got the loan last year. Accordingly theman-power in Government Departments were reduced by introducing Self retirement Scheme. Subsidies on fuel and

transports were reduced to certain extent. But the food subsidy is not touched, as it will cfeate a trouble and subject to people's reactions.

If Sri Lanka wants the loan, it should fulfill the conditions that were laid earlier and some additionals including the abolition of Free Education. This must be and is both dangerous anddetrimental to the nation. This is something like,putting one who is already in difficulty into further difficulties.

The loan amounting to 496 millions of Rupees in 1977 had shot up to 44,000 millions of Rupees in 1991. Oh! no other country would have existed on loan like this.

Sri Lankan Government is obtaining loans from World Bank,IMF,Sri Lankan Loan Aiding Communes and from America,UK,Japan frequently without any interval.

That is the country's Economy had been destructed to a mean level so that it cannot exist without loans. At this stage too, the Government is taking Military Operation,against the Tamils, and spending millions of rupees on it. That is the Government is carrying out 'War on loan'.

The people in theSouth does not contemplate this. The loan giving Organizations too doesn't consider it. They does not have the grudge to ask the Government to stop the Oppressions made on the Tamils and they would not, because any commercial benefits won't be there by asking. Their interest is that the pre-conditions laid for loans are those of Commercial and Political benefits.

Hence in a country where 70 percent of the population live under the poverty line, if food subsidy is abolished, the people will have to die of starvation and if free education is abolished, an illiterate community will be formed in the future.

The Sinhalese in theSouth are not contemplating these detriments and are in the dark. They are not thought of building their economy by finding a political solution to the Tamils' Issues. Only God knows when they will c contemplate the truth that their life is entrangled day by day.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 19.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# வவுனியாவில் இராணுவத்தால் 10 பொதுமக்கள் கொலை

(வவுனியா)

வவுனியாவில் கடந்த வாரம் அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல்களில் சுமார் பத்துப் பொதுமக்கள் கொலைப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது

பலர் காயமடைந்துள்ளனர் ஏராளமான பொதுமக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

இராணுவத்தினர் பொதுமக்களின் பல வீடுகளை தீ வைத்து எரித்துள்ளனர்.

இராணுவத்தினரின் இத்தாக்குதலின்போது மாணிக்க வளவு பகுதியில் அடையாளம் காணப்படாத நிலையில் ஓர் ஆணினதும், பெண்ணினதும் சடலங்கள் காணப்பட்டன.

கடந்த 12-ஆம் திகதி நொச்சிமோட்டையில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட நெடுங்கேணி சேனைப்புலவு பகுதியைச் சேர்ந்த அம்பலவாணர் சிற்றம்பலம் என்ற இளைஞர் இராணுவத்தினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தவிர வவுனியா குழுமாட்டுச்சந்தி பகுதியில் உள்ள இரு அரிசி ஆலைகளைக் குண்டுவைத்துத் தகர்த்த இராணுவத்தினர் அங்கு நின்ற ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்து டயர் போட்டு எரித்துவிட்டுச் சென்றுள்ளனர். எரிந்து கருகிய நிலையில் காணப்படும் இச்சடலம் அடையாளம் காணப்பட முடியாத நிலையில் இருக்கின்றது.

நடேஸ் இராசதுரை (43) ஆனைக்கோட்டை, முத்தையா தனபாலசிங்கம் (40) ஒதியமலை, நெடுங்கேணி கே கண்ணன் (24) பேயாடி கூழாங்குளம் வவுனியா, ராமு (35) பேயாடி கூழாங்குளம் வவுனியா, சுந்தரம் (40) பேயாடி கூழாங்குளம் வவுனியா, தம்பிராசா (50) பேயாடி கூழாங்குளம் வவுனியா, பொன்னம்பலம் அருணகிரி (24) வீமன் காமம் ஆகியோர் இராணுவத்தினரால் கடந்தவார நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்படாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## 10 CIVILIANS KILLED AT VAVUNIYA BY ARMY.
(Vavuniya).

It is believed that in the army's blind attack last week at Vavuhiya might have killed at least ten civilians. Several injured. Vast quantity of civilians taken into custody and lost.

The Army had also set fire to several houses of the Tamils. During this attack of the army there were two unidentified bodies of male and a female at the compound of Manickam. ~~Sittampalam of Nedunkerni~~

An information revealed that a youth named Ambalavanar Sittampalam of Nedunkerni Senaippulavo was arrested by the army at Notchimottai on the last 12th was shot and murdered.

Further at Vavuniya Kulamottu junction the army had also blasted 2 Rice mills with bombs and shot a person who was working there and burnt him with tyres before leaving. The body which is in a chared state cannot be identified.

Nadesh Rasadurai (43) Anaicottai Muttiah Thanabalasingam (40) Othiyamalai Nedunkerni, K.Kannan (54) Peyadikoolamkulam, Vavuniya Sundaram (40) Peyadi Koolankulam Vavuniya, Thambirasa (50) Peyadikoolankulam Vavuniya, Ponnambalam Arunagiri (54) and Veeman

were all arrested by the Army during last week's operation and still not been released is to mentioned here.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 19.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

## நானாட்டானில் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், பெப். 19
மன்னார் மாவட்டத்தில் நானாட்டான், கட்டைக்காடு பகுதிகளில் நேற்றும் நேற்று முன்தினமும் பொம்மர் தாக்குதல்கள் இடம் பெற்றன.
நேற்று முன்தினம் மாலை [illegible] மணியளவில் நானாட்டான் பகுதியில் இரு பொம்மர்களின் [illegible] பொதுமகன் ஒருவர் பலியானார். வீடு ஒன்று சேதமடைந்தது.
கட்டைக்காடு பகுதியில் நேற்றுக்காலை 8 மணியளவில் விமானத் தாக்குதல் இடம் பெற்றது.
ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. [எ-5]

## BOMBARDMENT AT NANADDAN.

Jaffna February 19th: In the areas of Nanaddan and Kaddaikadu in the District of Mannar yesterday as well as day before yesterday bombarding took place.

In the bombardment at Nanad an areas by two bombers, a civilian got killed and a house received damages. Damages in the Kaddaikadu area by the bomber attack in the morning by about 8 A.M. yesterday were not received.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 19.02.1991 Name of Paper EELANAA THAN Clipping of News Papers

## பயணி மீது அசுத்த நீர் வீச்சு

கொழும்பிலிருந்து வந்த பயணி ஒருவர்மீது இராணுவம் அசுத்தநீர் அபிஷேகம் செய்துள்ளது.

வவுனியா நகரப்பகுதியில் மறைந்திருந்த இராணுவத்தினர் அந்த வழியே வந்த பயணி ஒருவர் மீது அசுத்த நீரை வீசியதாக தெரியவருகிறது. ஆடைகளை மாற்றும் அவகாசம் இல்லாமல் சில மைல்கள் வரை பயணித்த அந்தப் பயணி அதே கோலத்தில் தொடரவேண்டி ஏற்பட்டதாம்.

## 10 PARA LIGHTS DAILY.

There are more than ten para lights put on every day constantly at Elephant pass army camp. Consequent to this shelling on to the inhabitant areas intermittantly propelled as suc the tenements of the villages are quaked in midnights. Several of the people in the vicinity had also vacated their houses.

## தினமும் பத்து 'பரா' வெளிச்சம்

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து தினமும் பத்துக்கு மேற்பட்ட பரா வெளிச்சம் அடிக்கப்பட்டு வருகிறது.

இதே வேளை இடையிடையே ஷெல் வேட்டுக்களும் குடிமனைகளை நோக்கி தீர்க்கப்பட்டு வருவதால், குடிமனைகள் வெடி ஒலியால் நடு நிசியிலும் அதிர்ந்த வண்ணம உள்ளன அயற் கிராம மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியும் உள்ளனர். (லோ)

## 10 CIVILIANS KILLED AT VAVUNIYA BY ARMY.
(Vavuniya)

It is believed that in the Army's blind attack last week at Vavuniya might have killed at least ten civilians. Several injured. Vast quantity of civilians taken into custody and lost.

Date 2.02.1991 Name of Paper uthayan Clipping of News Papers

# சபலம் ஆகாது!

வடக்கு-கிழக்கில் மேலும் பல பகுதிகளை இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி திரு. பிரேமதாஸ படையினருக்குக் காலக்கெடு விதித்திருக்கிறாராம்.

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்து நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அறிவித்த ஜனவரியில், அரசு ஒரு வாரம் மட்டும் தாக்குதல்களை நிறுத்திவிட்டு, அதன்பின் யுத்த நிறுத்தத்தை ஏற்க மறுத்து இராணுவ நடவடிக்கைகளை மீண்டும் தீவிரப்படுத்தத் தொடங்கியது.

யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் ஜனாதிபதிக்கும் சில அமைச்சர்களுக்கும் இருந்தது என்பதும், யுத்த நிறுத்தத்தை முறித்துவிட வேண்டும் என்பதில் இராணுவமும், மகாசங்கமும் கூட்டாக இயங்கி அதற்கான பின்னணியை உருவாக்கின என்பதும் ஏற்கனவே தெரிந்த பழைய சங்கதிகள்.

யுத்த நிறுத்த முறிவுக்குச் சம்மதம் தெரிவித்த வேளை, வடக்கு - கிழக்கில் முன்னேறிக் காட்டுவதற்கு இராணுவத்தினருக்கு ஜனாதிபதி காலக்கெடு கொடுத்திருந்தார் என்ற தகவல் இப்போது வெளியாகி இருக்கிறது. எனினும் ஜனாதிபதி விதித்த காலக்கெடு எப்போது முடிவடைகிறது என்பது தெரியாத விடயமாக உள்ளது.

"யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதத்தை ஆறு மாத காலத்திற்குள் பூண்டோடு அழித்துவிட்டு வருக!" என்று அப்போதைய பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, தமது மருகரான பிரிகேடியர் வீரதுங்காவுக்கு வீராவேசத்துடன் உத்தரவு விதித்ததை, காலக்கெடு வழங்கியதை இலங்கை [illegible]

தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்குப் பயங்கரவாதம் என்று பட்டங்கட்டி, வீராவேசம் கொண்ட ஜே. ஆரினால், தமிழர்களின் எழுச்சியை அடக்க முடியாமற் போனது ஒரு புறமிருக்க, அவர்களின் சுதந்திர உணர்வை, உரிமை பெற்றிட வேண்டும் என்ற வைராக்கியத்தை மட்டுமே மேலும் வளர்க்க முடிந்தது.

இறுதியில் எதுவுமே செய்ய முடியாதவராக, தமிழர்களின் எழுச்சிக்கு முகம் கொடுக்க இயலாத பலவீனராகி, இந்தியாவின் காலில் விழுந்து, நாட்டின் இறைமையையே அடகு வைத்து, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய கேவல நிலையை அடைந்தார். "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்று இரத்தம் கொதியுண்டவர் பின்னர் அடங்கலானார்.

எனினும் இனப்பிரச்சினை தீரவும் இல்லை; தமிழர் உரிமைகள் வழங்கப்படவும் இல்லை; அவர்களின் உரிமை உணர்வும், எழுச்சியும் அடங்கி விடவும் இல்லை.

அவரின் சீடப்பிள்ளையான இன்றைய ஜனாதிபதி, தமது குரு இழைத்த அதே தவறான வழியை நாடுகிறார். தமக்கு மறுக்கப்பட்டிருக்கும் உரிமைகளைப் பெறவேண்டும் என்ற இலட்சியமே தமது உடலும் உணர்வுமாகிவிட்ட தமிழர்களின் பிரச்சினையை, இராணுவ பலத்தினால் தீர்த்துவிடலாம் என்று தப்புக்கணக்குப் போடுகிறார். தமக்கு முந்தியவர் தவறிழைத்த அனுபவம் தெரிந்துகொண்டும், அடிமை விலங்கை உடைத்தெறியும் தமிழர்களின் திடசங்கற்பத்தை இராணுவ பலத்தால் குலைத்துவிட முடியாதா என்ற சபலத்துக்கு ஆளாகிறார்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண விரும்புவதாகக் கூறிக்கொண்டு இராணுவத் தீர்வையும் பரீட்சித்துப் பார்த்தால் என்ன என்று மனம் அலமலக்கிறார். தமிழர் பிரச்சினையைத் தீர்த்தவர் என்ற சரித்திர நாயகனாக வரவிரும்பின், அவர் இராணுவத்துக்குக் காலக்கெடு கொடுத்து காலத்தை வீணாக்கக் கூடாது. அரசியல் தீர்வு ஒன்றை வகுத்து அதில் இருக்கக்கூடிய குறைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் களைந்து தமிழர்களின் உரிமைகளை வழங்க வேண்டும்.

TEN ERNESS IS BAD.

President Mr.Premadasa is said to be given further more time to the forces in order to bring some additional portions in the North and East under their control.
The liberation Tigers declared a ceasefire in January proclaiming that they are ready for a discussion without any demands, the Government which only stopped its attacks for a week refused to accept the ceasefire and increased the military operation later.

Although the President and few ministers had an opinion to initiate the talks following the ceasefire to break the ceasefire the army and the "Mahasanga" (Buddhist priests involved society) got together and functioned behind this. All these are well known and old stories.

In the time of consent to break the ceasefire the information of the President's timing for the forces to advance in the North and East had now emerged out.Anyway do not know when the President's timing expires.

The Sri Lankans must have not easily forgotten when then Prime Minister J.R. Jayawardene sent his son in law Brigadier Weeratuhge ordering with arrogance and timing " destruct the terrorism in Jaffna completely within 6 months"

J.R. Jeyawardene who conferred a title to the Tamils struggle for rights as terrorism. With arrogance could only was able to form perseverensce in the midst of Tamils to active the feelings of Independence and rights other than subduing their uprises.

At last unable to do anything and weakened to face the Tamils uprise, fell on to the feet of India, pawned the sovereignity and subjected to murders to solve the ethnic problem. The person who proclaimed with his blood boiling as War means War, Pleace means peace subdued.

Anyway the ethnical problem has not been solved. The Tamils rights were not offered their feelings in rights and uprising never sub dued.

His preceptor The Tamils in a state of obtaining their refusal rights when now soaked with this policy in their conscience and bodies the President calculates wrongly that he cojld solve the Tamils problems military power. Knowing his predecessors mistakes and the outcome of it he is attempting to damage the Tamils determinations by military power who are already in a resolution of breaking the slavery chain.
Expressing a solution could be made by negotiation he is attempting to solve the problem through military power. If he is actually interested in becoming a historical hero inthe name of Tamils problem, he should not unnecessarilty give time for the forces and waste the time. By forming a political solution and codifying the discontents he should offer the Tamils their rights.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 19.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

## பொம்மருக்கு தப்பியவர்கள் ஷெல் வீச்சில் சிக்கினர்!

பொம்மர் தாக்குதலில் மயிரிழையில் தப்பியவர்கள் ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்தனர்.

வல்வெட்டித்துறை திருவிலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி வல்வையில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலின் போது மூடப்பட்ட பதுங்கு குழிக்குள் சிக்கி, பின்னர் அயலவர்களினால் மீட்கப்பட்ட இரு பெண்கள், நேற்று பலாலி ஷெல்லினால் காயமுற்றனர்.

செந்திவடிவேல் சிவரூபராணி [வயது 51], அவரது மகளான யசோதை [வயது 17] ஆகிய இருவருமே இவ்வாறு காயமுற்றனர்.

இந்தச் சம்பவத்தில் சிவரூபராணியின் மகனான செந்திவடிவேல் மணிவண்ணன் [வயது 21] உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பெண்மணியின் மற்றும் இரண்டு மகன்கள் ஈழ விடுதலைப் போராட்டத்தில் 1986-ஆம் ஆண்டு தொண்டமானாறிலும், 1990 ஆம் ஆண்டு யாழ். கோட்டைத் தாக்குதல் சம்பவத்திலும் வீர மரணமடைந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-15]

THOSE ESCAPED FROM BOMBERS TRAPPED TO SHELL.

Those who narrowly escaped from bomber attack were inserted to severe injury by shell attack.

This happened at Valvettiturai Thiruvil on the last month of 20th.Two women trapped in a bunker when it collapsed due to bombing and were redeemed by neighbours were injured in yesterday's shelling.

Senthivadivel Sivaruparahi (51 yrs) and her daughter Yasotha (17 yrs) were the two who injured in such incident.Senthivadivel Manivanan (21 yrs) the son of Sivaruparani died in this incident had to be mentioned here.

Further her two sons in the Tamil Eela struggle embraced the heroic deaths in 1986 at Thondamannaru and in1990 in the Jaffna Fort attacks he to be mentioned.

## அச்சுவேலி பாடசாலையும் ஷெல்லினால் சேதமுற்றது

அச்சுவேலி. பெப். 19

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் அச்சுவேலியில் மகா வித்தியாலயம், தென்னிந்திய திருச்சபை தேவாலய மதகுருவின் விடுதி மற்றும் பல வீடுகள் சேதமடைந்தன. சிலர் காயமுற்றனர்.

பலாலி இராணுவமுகாமில் இருந்து நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் ஏவப்பட்ட ஏழு ஷெல்கள் அச்சுவேலியில் விழுந்து வெடித்தன.

அச்சுவேலி மகாவித்தியாலய வளவில் விழுந்த ஷெல்லினால் வகுப்பறைகள், நூல் நிலையம், கலையரங்கம், ஆய்வுகூடம், தொழிற்கூடம் என்பன பலத்த சேதமடைந்தன.

அச்சுவேலி வடக்கு, தெற்கு ஆகிய இடங்களிலும் சில வீடுகள் சேதமடைந்தன.

அச்சுவேலி தோட்டப்பகுதியிலும் இரு ஷெல்கள் விழுந்து வெடித்தன.

வளலாய், இடைக்காடு, தொண்டமனாறு ஆகிய பகுதிகளிலும் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

வளலாய்ப் பகுதியில் ஓர் ஓலைக்குடிசை எரிந்து சாம்பரானது. மற்றும் இரு வீடுகள் சேதமுற்றன.

தொண்டமானாறிலும் ஒரு வீடு சேதமுற்றது. [உ-11-15]

ATCHUVELY SCHOOL TOO DAMAGED BY SHELLS.

Atchuvely February 19th: Atchuvely Maha Vidyalayam,the Priest's residence of Church of South India and further some houses damaged and several injured as there was a shelling operation yesterday early morning from Palaly Army Camp.

Seven shells which were propelled from Palaly Army Camp at mid night 12.00 fell in Atchuvely and exploded.The shell which fell on at Atchuvely Maha Vidyalayam gave severe damages to class rooms,library laboratory,art gallery and the workshop.

Some houses at Atchuvely North and south also subjected to damages.In the garden areas of Atchuvely also two shells fell and exploded.Even in the areas of Valalai ,Idaikadu and Thondamannaru also shells fell and exploded.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

At Valalai area a cadjan hut ignited to ash and two houses received damages ,one house got damaged at Thondamannar too.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 19.02.1991   Name of Paper UTHAYAN   Clipping of News Papers

# ஒரே குடும்பத்தில் நால்வர் காரைநகரில் காயம்!

யாழ்ப்பாணம், பெப். 19

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்று நண்பகல் குடியிருப்பு பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வியாவில் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல் குண்டு ஒன்றினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்தனர். பாடசாலை ஒன்றும் ஐந்துக்கு மேற்பட்ட வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

ஷெல்லுக்குப் பயந்து, பாதுகாப்புத் தேடி, வியாவில் பாடசாலைக் கட்டடத்துக்குள் ஓடி ஒதுங்கிய ஒரு குடும்பமே பாடசாலையில் விழுந்து வெடித்த ஷெல்லுக்கு இலக்கானது.

அப்பகுதியைச் சேர்ந்த சின்னையா சீவரத்திலம் [வயது 40], அவரது பிள்ளைகளான சந்திரமோகன் [வயது 8], பிரதீபன் [வயது 7], விஜயகாந்த் [வயது 1] ஆகியோரே காயமடைந்தனர்.

இவர்களில் சந்திரமோகனின் வலது கால் துண்டிக்கப்பட்டுள்ளது.

நால்வரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[உ-15]

FOUR IN ONE FAMILY INJURED AT KARAINAGAR.

Jaffna February 19th: Continuation of shell attack activated from Karainagar Navy camp yesterday noon towards inhabitant areas. 4 persons in one family severely injured and a school along with more than five houses harshly damaged by shell explode at Viyavil.

The family scared and when they hurried for safety to the Viyavil school, the xxxxx fallen shell on the school exploded and victimised them.

Sinniah Jeevaratnam (40 yrs) of that area along with his children Chandramohan (8 yrs) Pradeepan (7yrs) and Vijayakanth (1 yr) were the victims of the shell.

Among these injureds Chandramohan's left leg is been aparted. All the four are been admitted in Jaffna Hospital.

# ஹெலி, பீரங்கித் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 19

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்று ஹெலித் தாக்குதல்களும் இடம்பெற்றன. கடற்படைப் படகுகளில் இருந்து பீரங்கித் தாக்குதலும் நடத்தப்பட்டது.

காலை 8-30 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று வல்வை ஊரிக்காடு, காட்டுப்புலம், தொண்டமானாறு, கெருடாவில் ஆகிய பகுதிகளை வட்டமிட்டு குடியிருப்புப் பகுதிகளை நோக்கி வேட்டுகளைத் தீர்த்தது.

ஹெலித் தாக்குதலின் பின்னர் காலை 9 மணியளவில் வல்வைக் கடலோரத்திற்கு வந்த கடற்படையினரின் மூன்று பீரங்கிப் படகுகள் கரையோரப் பகுதிகளை நோக்கி, குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

இதனால் வல்வைப் பகுதியில் ஏற்கனவே இடம்பெற்ற தாக்குதல்களினால் சேதமுற்ற வீடுகள் மீண்டும் சேதமடைந்தன.

[உ-15]

HELI CANNON ATTACKS.

Jaffna Feb. 19th: Heli attacks too took place yesterday at Valvettiturai area. Cannon attacks were also atributed from Cannon boats.

A helicopter which rounded the area of Valvai, Urukadu, Kaatupulam Thondamanaru and xxxxxxx Kerudavil in the morning by about 8.30 A.M. fired at the inhabitant areas.

After the heli attack by about 9.00 A.M. Navy who advanced towards the Valvai shore with three cannon boats bombarded towards the coastal areas. As such in Vallai area the damaged houses in earlier bombardments inserted to further more damages.

Date 20.02.1991 Name of Paper EELANATHAM Clipping of News Papers

## கடற்படை தாக்குதலால் மீனவர் காயம்; படகு சேதம்

நேற்றுக் காலை 6.15க்கு பொலிகண்டி கடற் பிரதேசத்தில் மீன் பிடித்துக்கொண்டு நின்ற மீனவர் மீது கடற்படையினர் தாக்கியதில் பலாலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வந்து சக்கோட்டையில் வசித்துவரும் திரு பா. தங்கன் (வயது 25) காயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதே சம்பவத்தில் வளலாய்ப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து அல்வாய் மேற்கில் வசித்துவரும் சி. இல்பேட் (வயது 52) மற்றும் ஆலடியைச் சேர்ந்த சித்தப்பா மாம்பழம் என அழைக்கப்படும் அமிர்தலிங்கம் (வயது 35) வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி சி. கதிரமலை (வயது 30) ஆகியோரின் வெளி இணைப்பு இயந்திரங்கள் கடற்படையினரால் கடலில் வீசி எறியப்பட்டன. இவற்றுடன் ஆலடியைச் சேர்ந்த நா. இராமச்சந்திரனின் படகும் சேதமாக்கப்பட்டுள்ளது. இதனால் மீனவர் பெரிதும் பீதியடைந்துள்ளனர். (செ. த: மை)

FISHERMEN INJURED AND BOAT DAMAGED

ATTACK BY NAVY

In an attack launched by the Navy on the fishermen engaged in fishing yesterday by about 6.15 in the morning at Polikandy Coastal areas, one P. Thangan(25yrs) who was displaced from Palaly North, got injured and admitted to Manthikai Hospital.

On the same incident, the out-boat Mortors attached to the boats of Messrs. S. Gilbert(52yrs), who was displaced from Valalai, Sithappa Mambalam(35yrs) of Aaladi and of Mr. S. Kathiramalai(30yrs) of Aathi-Koviladi, Valvettiturai were thrown into the sea by the Navy personles. The fishing boat of Mr. Ramachchandran, got damaged.

The fishermen got horrified by these actions.

## விமானக் குண்டு வீச்சால் உருத்திரபுரத்தில் பெண் காயம்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் பகுதியில் சிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்த இரு குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் மேற்கொண்டதில் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். வீடு ஒன்றும் முற்றாகச் சேதமடைந்தது.

நேற்றுக் காலை 9-30 மணியளவில் இச் சம்பவம் நிகழ்ந்தது. 8ஆம் வாய்க்கால் பகுதியில் விழுந்த நான்கு குண்டுகளில் ஒன்றிலேயே இந்தப் பெண் காயமடைந்தார் (மு)

BOMBING AT URUTHIRAPURAM

WOMEN INJURED

In an attack made by two Sri Lankan Air Force Bombers at Uruthirapuram in Kilinochchi District, a woman got badly injured. A house was damaged too.

This happened yesterday by about 9.30 in the morning and the woman got injured in one of the bombs that exploded at D.8, Uruthirapuram.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 20.02.1991 Name of Paper EELANATHAM Clipping of News Papers

# தாமதத்திற்காக வருந்த வேண்டி வரும்

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க சிறிலங்கா இராணுவத்தினருக்கு காலக்கெடு நீடித்துள்ளதாகவும் சில மாதங்களுக்குள் இராணுவ ரீதியாக திட்டவட்டமான முன்னேற்றத்தை இராணுவத்தினர் காட்டவேண்டும் எனப் பணிக்கப்பட்டிருப்பதாகவும் சிறிலங்காவிற்கான செய்தியாளர் கிறிஸ்தோபர் மோரிஸை ஆதாரம் காட்டி பி.பி.சி. செய்தி வெளியிட்டது.

மேலும், அச் செய்தியில், இராணுவத் தளபதிகளின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த காலக்கெடு பிரேமதாஸாவினால் இராணுவத் தளபதிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை அடக்குவதற்கு காலக்கெடு விதிக்கும் காலநீடிப்பு வழங்குவது புதுமையான விடயமல்ல. 1978இல் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆட்சித் தலைவராக இருந்தபோது இந்தக் காலக்கெடு படலம் ஆரம்பமாகியது. அது இன்றுவரை தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் போராட்டம் இன்றிலிருந்து விஸ்தரிக்கப்பட்டு வளர்ந்து கொண்டே போகின்றது. 1978இல் காலக்கெடு விதிக்கப்பட்ட போது இருந்த பத்து எண்ணிக்கையில் இருந்த போராளிகள் இன்று பலமடங்கு வளர்ச்சி அடைந்தது நாம் நிதர்சனமாக அறிந்ததே.

அரசியல்வாதிகள் சிறிலங்கா இராணுவத்தினருக்குக் காலக்கெடு கொடுத்து அதற்குள் நிலைமையை தலைகீழாக மாற்றி இராணுவத்தினரே காலக்கெடு விதிப்பவர்களாகவும், காலக்கெடு கொடுப்பவர்களாகவும் இருந்து வருகின்றார்கள்.

இரண்டாம் கட்ட யுத்தம் தொடங்கியதில் இருந்து சிறிலங்கா தேசிய பாதுகாப்பு இணை அமைச்சர் சில வாரங்களில் என காலக்கெடுவை தொடர்ச்சியாக விதித்து வந்தார். அதன் பின்னர் இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா ஆறுமாதத்திற்குள் என காலக்கெடு விதித்தார். அவ்விடத்துக்கு வந்த தளபதியும் அவ்வாறே இன்னும் மூன்று ஒரு மாதத்தில் என காலக்கெடு விதித்தார்.

சிறிலங்கா இராணுவத்தினர் காலக்கெடு நீடிப்பை விதிப்பதற்கு அண்மையில் அவர்களுக்கு சீனாவிடம் இருந்து வந்து சேர்ந்த புதிய ரக ஆயுதங்கள் தமக்கு பக்க பலமாக இருக்கும் என்று எண்ணுகின்றார்கள் போலும்.

ஆனால், புலிகளுக்கெதிரான காலக்கெடு விதித்து ஆரம்பிக்கப்பட்ட யுத்தங்கள் எவையும் வெற்றி பெறவில்லை என்பதை சிறிலங்கா அரசியல், இராணுவத் தலைவர்கள் இன்னும் மனம் கொள்ள முடியவிட்டால் அதையிட்டு நாம் கவலை அடைவதைத் தவிர வேறு வழியில்லை.

நீண்டகால வரலாறு வேண்டாம்; கடந்த ஆறுமாத காலத்தில் மூன்று மாதங்களுக்குள் புலிகளை அடக்கி விடுவோம் என மார்பு தட்டிக் கொண்டிருந்த வேளையில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் தாக்குதல்களுக்குப் பலியானதில் இருந்தே இராணுவ ரீதியான வெற்றியின் அவர்களது மதிப்பீடு தவறானவை என்பதை உணரலாம்.

இன்று சீனாவிடம் இருந்து பெற்ற ஆயுதங்களைக் கொண்டு விடுதலைப் புலிகளை குறிப்பிட்ட கால பகுதியில் முடிக்க விரும்பினால், அதன் பின்னர் தாம் விரும்பியபடி புலிகள் மீது இனி கோலோச்சலாம் என சிறிலங்கா அரசு நினைத்தால் அது பகல் கனவாகவே முடியும். ஏனெனில் விடுதலைப் புலிகள் எப்பொழுதுமே நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து எதிரிகளுக்கு விட்டுக்கொடுத்ததாக இல்லை. அவ்வாறு பணிவதாக இருந்தால் இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் தேசிய சக்தியாக வளர்ந்திருக்க முடியாது.

இப்பொழுது விடுதலைப் புலிகள் சீனா தயாரிப்பு ஆயுதங்களைக் கண்டு பயப்படுவார்கள் என்றும் சிறிலங்கா எண்ணிவிடக் கூடாது. ஏனெனில் உலகின் இன்று சிறந்தவை எனக் கருதப்படும் சோவியத் தயாரிப்பு டி-72 ரக டாங்கிகளுக்கும் எம்.ஐ. 25 ரக ஹெலிகொப்டர்களுக்கும் எதிராகப் போரிட்டவர்கள் புலிகள்.

இன்று வளைகுடாவில் அமெரிக்காவின் நவீன எம் 1 ஏ 1 ரக டாங்கிகளை எதிர்த்துப் போராடக் காத்திருப்பவை இவ் டி-72 டாங்கிகளும், எம்.ஐ. 25 ரக ஹெலிகொப்டர்களும் தான்.

இந்நிலையில் காலக்கெடுக்கள் மூலம் இராணுவ வெற்றியை எதிர்பார்த்து புலிகளை அழிக்கும் சந்தர்ப்பத்தை தவறவிட்டமைக்காக எதிர்காலத்தில் சிறிலங்கா ஜனாதிபதி கவலைப்படவேண்டி வரலாம்.

<u>MUST REGRET FOR THE DELAY</u>

B.B.C. quoting referenee to its Sri Lankan Reporter.Christopher Morris had informed that the Sri Lankan President,Mr.Premadasa had given an extension of time to the Army to destroy the Liberation Tigers and that they were asked to show a definite progress on it.

Further the News Report quotes, that this extension was given on a request made by the Army Commandors.

In the Sri Lankan Political History, it is not strange, that this type of actions are taken to oppress the Tamils' National Issues. In 1978, When Mr.J.R.Jeyawardena was the president, this epic of time extension

started. It is in continuation up to now. But the Militants activities have been extended and is growing up. In 1978, when an extension of time was given, there were only 10 in number and now, it had gone upto several thousands and this was the only change that took place.

At the start, politicians were given time extensions for the Sri Lnakan Army, but today the position is changed. The Army is in a position to determine and give the time extnesions.

Since the war started in June last year, continued extension of times were given by the Deputy Defence Minister, Mr. Ranjan Wijeyaratne. Later a six months period was given by the Major General Hamilton Vanasinghe. Even the Vavuniya Army Commandor, a few days ago, had declared one or two months time.

This extension of time request on the Military side, may be that of the arms and ammunitions, they received from China recently.

But there is no way other than to regret for the Government's inability to accept that they have not won a single war that took place with the Liberation Tigers by giving time extensions.

We need not go further deep, for the past six months, while the Government is boasting, that they have destroyed the Tigers in the East, daily a death of atleast ten soldiers takes place, is a proff for their so called victory and shows their mistake on estimation.

But today, if the Government thinks that they can destroy the Liberation Tigers with the arms purchased from China within a limited time, it is only a night-mare and nothing else. The Liberations Tigers have never subdued for any intimidations or enforcements. If it is so, the Libertation Tigers cannot be a National Force of the Tamil speaking people.

Secondly the Government should not think that the Liberation Tigers will be frightened to the Chinese Arms and Ammunitions, for they are used to the Russian made T.72 Tankers and M.I.25 Helicopters which are considered to be the best at present.

Today in Gulf War, Iraque is using thsse T.72 Tankers and M.I.25 Helicopters against the Americans' modernised M.1 A.1 type tankers.

At this stage, by expecting the Military Solution, inspite the opportunity given by the Liberation Tigers, declaring Ceasefire, the President will have to regret for it.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 20.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# இரட்டை வேடம் தெரிகிறது

இலங்கைக்கு நிதி உதவும் நாடுகளின் கூட்டம் இம்மாத ஆரம்பத்தில் நடைபெற்றிருக்கிறது. வெளிநாடுகள் மற்றும் சர்வதேச நிதி வழங்கும் நாடுகளிடம் கையேந்தி, அவை வழங்கும் பணத்தை, அரசு தமிழ்ப் பகுதிகளில் யுத்தத்துக்குப் பயன்படுத்துகிறது என்பது இப்போது நன்றாகத் தெரிந்த ஒன்று.

இந்த உண்மை இப்போது வெளி உலகுக்கு ஓரளவேனும் தெரிய வந்துகொண்டிருக்கிறது என்று சொல்லலாம். தாம் வழங்கும் பணத்தில் ஒரு பகுதியை, ஜனநாயகத்தையும் நாட்டின் இறைமையையும் காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு, அடக்குமுறைக்கு எதிராக எழுந்துள்ள தமிழினத்தை அழிப்பதற்கே ஸ்ரீலங்கா அரசு பயன்படுத்துகிறது என்பதை வெளிநாடுகள் மெதுமெதுவாக உணரத் தொடங்கியுள்ளன எனலாம்.

அந்த வகையில், கொழும்பில் நடந்த கூட்டத்தில், தமிழ்ப் பிரதேசங்களின் மீது விமானத் தாக்குதல் நடத்தி மக்களைக் கொல்வது குறித்து மேற்குலக நாடுகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. தங்கள் பணம் மக்களைக் கொல்வதற்குப் பயன்படுகிறதே என்று எண்ணி மனம் புழுங்கி வேதனை தெரிவித்திருக்கின்றன.

தமிழர் கொலைக்கு உடந்தையாகக் கூடாது என்ற குற்ற உணர்வு அவர்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும். அந்தக் குற்ற உணர்வு கடன் வழங்குவதை நிறுத்தவேண்டும் அல்லது தமிழர் கொலைகளை நிறுத்துமாறு கொழும்பு அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று தூண்டக்கூடும்.

சம்பந்தப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்ட இந்தியப் பிரதிநிதி விமானத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்கள் கொலை செய்யப்படுவது குறித்து வாயும் திறக்கவில்லை. 'தமக்கேன் வீண் சோலி'. நேருக்கு நேர் கண்டனம் அல்லது கவலை தெரி [illegible] உறவை ஏன் கெடுத்துக்கொள்ள வேண்டும் என்று 'கப்சிப்' என இருந்துவிட்டார்.

புதுடில்லி எப்போதும் கொழும்பு அரசின் பக்கம் தான். தமிழர் பக்கம் அல்ல. தமிழர்களை அரச படைகள் கொல்லும் போதெல்லாம் வெறும் கவலை- கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிடுவதோடு அதன் தமிழர் பற்று, மனிதப் பற்று முடிந்து விடுகிறது. அந்த அறிக்கைகள் கூட தமிழகத்தில் வாழும் தமிழர்களைத் திருப்திப்படுத்துவதற்காகத் தான்!

1987இல் திருகோணமலையில் வைத்த கண்ணை, இப்போதைக்கு மன்னாரில் எண்ணெய் அகழ்வு என்ற ஆரம்பப் புள்ளியாக்கி கொழும்பைத் தனது பக்கம் இழுக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டிருக்கிறது. எனவே கொழும்பின் மனம் நோக அது செயற்படும் என்று எப்படி எதிர்பார்ப்பது?

நான்கு நாட்களுக்கு முன்னர்கூட ஈழத் தமிழர் படுகொலை குறித்து கவலை தெரிவித்து புதுடில்லி அரசு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. இவ்வாறான அறிக்கைகள் ஈழத் தமிழர் மீதான அனுதாபத்தினாலோ அல்லது அவர்களுக்கு உதவவேண்டும் என்ற உளப்பூர்வமான விருப்பத்தினாலோ வெளியிடப்படுபவை அல்ல. அவை வெறும் வேடங்கள். தமிழகத்தில் உள்ள வாக்கு வங்கிப்பலம் தேய்ந்து போகக்கூடாதே என்பதற்காக எழுதப்படுபவை.

சம்பந்தப்பட்ட கொழும்புக் கூட்டத்தில் இந்தியா வாயும் திறக்காதது குறித்து இந்தியத்தூதுவர் திரு. ஜா — விமானத் தாக்குதல் நடத்துவது சட்டபூர்வமானதே என்று கூறியிருப்பது இந்தியாவின் உள்ளார்ந்த நிலையை எடுத்துக் காட்டுகிறது. அவரைக் குறை சொல்வது எப்படி?

இதற்கு மேலும் புதுடில்லி போடும் இரட்டை வேடம் குறித்து, அதன் சுயநலம் குறித்து நாம் என்ன கூறவேண்டி இருக்கிறது? தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவின் உதவி தேவை என்று இன்னமும் கருதிக்கொண்டிருப்பவர்களுக்கு இது ஒரு நல்ல 'பாடம்'!

## DOUBLE ACT IS EXPOSED

A meeting of the Fund Aiding Countries to Sri Lanka was held in Colombo on the first part of this month.

The money obtained as loant by begging from the foreign countries and International Organisations are used for the war taking place in the North and East. It is well known.

We can say that the foreign countries especially those who grant loans are aware of these to certain extent.

They have started to realise step by step that a portion of the monwy given by them are used to destroy the Tamils who were agitated by the Oppression of the Sri Lankan Government.

On principle the western countries had condemned the action of killing the innocents by bombing. They have expressed their sufferings caused by the worries, that their money is being used to kill the people. The Guilty consious that they shoold not be involved in the Killings would have arisen in their minds. This guilty consious should induce them to stop granting of loans or should force the Government of Sri Lanka to stop the murderings on Tamils.

But the Indian Representative who attended the meeting didn't utter a w word against the killings of public by bombing. Perhaps they would have thought that this would be in hinderance to their relationship between the two countries and kept silent.

New Delhi is always in favour of Colombo Government. Not in favour of the Tamils. whenever tamils were killed by the Sri Lankan Government, they expre sed their mere grievences and condemnations and thereby their affections on tamils and people end. These too are to satisfy the tamils in Tamil Nadhu.

The target they had in Trincomalee in 1987 had turned to Mannar at present for the oil exploration adventure and try to attract the Sri Lankan Government towards them. Hence, how can we expect tha t they will act against Colombo?

Even four days ago, New Delhi had issued a report expressing their grievences on the brutal killings on Eelam Tamils. This was not the actual symphathy towards the Sri Lankan Tamils or to help them wholeheartedly, but to please the tamils in Tamil Nadhu for themere fact that the voting strength in Tamil Nadhu should not deteriorated.

Indian High Commissioner, Mr. Jah, commenting on the silence at the Colombo meeting had expressed that the Bombing on Tamil areas as lawful. This shows their actual motives involved. How can we blame him?

There is nothing to add beyond this double act and the selfishness by the New Delhi Government. It is a good doze for those who still believe that India's assistance a must to settle the Sri Lankan Tamils' Issues.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

**Date** ....20.02.1991 **Name of Paper** ......UTHAYAN............. **Clipping of News Papers**

# வங்காலை முகாமில் 100 பேர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

மன்னாரிலுள்ள வங்காலை முகாம் இராணுவத்தினர், 100க்கும் மேற்பட்டவர்களை தடுத்து வைத்தனர்.

நேற்று முன்தினம் அடித்து வைக்கப்பட்டவர்களில் அனேகர் மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் அனைவரையும் படையினர் சித்திரவதைக்குட்படுத்தி, விசாரணை செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலைவரை ஐவர் மட்டுமே விடுவிக்கப்பட்டிருந்தனர் என்று அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன. [ஓ-15]

## 100 DET INED AT VANKALAI CAMP

Jaffna, Feb.20

More than 100 were detained at Vankalai Camp in Mannar District by the Army.

Most of those who were detained yesterday were from Mannar areas.

All were subjected to questionings and torturings.

The news coming from Mannar reveal that only five were released so far.

**Date** 20.02.1991 **Name of Paper** EELANATHAM **Clipping of News Papers**

### நீர்வேலியில் குண்டு வீச்சு வீடுகள் பல சேதமடைந்தன

(செ. த. மை.)

நீர்வேலிப் பகுதியில், இன்று முற்பகல் இரு தடவை கள் இரு போர் விமானங்கள் குண்டுவீசித் தாக்குதலை மேற்கொண்டன. இத் தாக்குதலின் போது 7 குண்டுகள் வீசப்பட்ட போதிலும் ஒரு குண்டு வெடிக்கவில்லை நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலையை நோக்கி 3 குண்டுகள் வீசப்பட்டன.

டாக்டர் ஆழ்வாப்பிள்ளை, சின்னத்துரை சிவலிங்கம், இளைப்பாறிய கிராமசேவை அலுவலர் செ. வரத்தினம் ஆகியோரது வீடுகள் சேதமடைந்தன. போர் விமானங்களின் இரைச்சல் சத்தம் கேட்டதும் இப் பகுதி மக்கள் பதுங்கு குழிகளுக்குள் பாதுகாப்பைத் தேடிக்கொண்டதால் உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை.

கண்ணாடித் தொழிற்சாலை மீது கடந்த 90 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம், 20 ஆம் திகதிகளிலும் 91 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதியும் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதும் இதனால் கட்டடங்கள் வாகனங்கள் சேதமடைந்ததும் தெரிந்ததே. (85)

BOMBING AT NEERVELY – HOUSES GOT DAMAGED

Bomb attacks were launched twine, by two war planes at Neervely in the marning today.

Of the seven blown, one was un-exploded. Three bombs were thrown on the Glass Factory.

The houses of Dr.Alvappillai, Sinnadurai Sivalingham and of Selvaratnam,retired Grama Sevaka got damaged. The people got refuged in the bunkers and escaped,when they heard the noise of thebombers.

Attacks were made on the Glass Factory earlier, on the 19th and 20th of December, 1990 and on 28th.January,1991. Factory buildings and vehic les got damaged by these attacks.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 21.02.1991 Name of Paper EELANATHAM Clipping of News Papers

## வங்காலை இராணுவத்தினரால்

# உப அதிபர் சுட்டுக் கொலை அதிபர், ஆசிரியர்கள் கைது

(மன்னார்)

வங்காலை என்னும் இடத்தில் முகாமிட்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அதிபர், உப அதிபர் உட்பட ஐந்து பாடசாலை ஆசிரியர்களை கைதுசெய்து இருவரை சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னாரிலிருந்து வந்து கொண்டிருந்த இவர்களை வழிமறித்த இராணுவத்தினர் கைது செய்தனர். இவர்களில் முருங்கன் ம. ம. வித்தியாலய உப அதிபரான எஸ். ரி. ஜோசப்பிள்ளை, திரு நவரட்ணம் ஆகியோரை இராணுவத்தினர் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

திரு. செபமாலை, திரு விம் போடியஸ் குளோஸ், புதுக்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபரான திரு. ஜஸ்டின் ஆகியோரை இராணுவத்தினர் கைதுசெய்து சென்றனர். இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி எதுவும் தெரியவில்லை.

BY VANKALAI ARMY

VICE PRINCIPAL WAS SHOT DEAD - TEACHERS ARRESTED

Sri Lankan Army camped at Vankalai in Mannar District, had arrested five School teachers including a principal and a vice- principal. They were waylaid by the Sri Lankan Army while coming from Mannar and arrested them. The Vice-Principal, Mr.S.T.Jespehpillai of Murunkan M.M.V. and Mr.Navaratnam were shot dead.

Messrs. Sebamalai, Vimbodiyas Closus and the principal of Puthukulam Roman Catholic School, Mr.Justin were arrested and taken. What happened to them were not known.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

Date 21.02.1991.. Name of Paper....EELANATHAM.......... Clipping of News Papers

திருமலையில் தமிழர் வயலுக்கு
சிறிலங்கா இராணுவத்தினர் தீ

(திருக்கோணமலை)
திருமலை மாவட்டத்தில் உள்ள பூமரத்தடி சேனை என்ற இடத்தில் தமிழ் விவசாயிகளின் நெல்வயல்களை சிறிலங்கா இராணுவத்தினர் தீயிட்டு எரித்துள்ளனர்.
கடந்த சனிக்கிழமை இப்பகுதியில் உள்ள சுமார் 10ஏக்கர் நெல்வயல்களை இராணுவத்தினர் தீயிட்டு எரித்துள்ளதுடன் வயலில் வேலைசெய்து கொண்டிருந்த 6 விவசாயிகளைக் கைதுசெய்து அடித்துச் சித்திரவதை செய்த பின்னர் விடுதலை செய்தனர்.
மேலும் நேற்று முன்தினம் அலிஒளுவ, கல்லாறு ஆகிய முகாம்களில் இருந்து வெளியேறிவந்த இராணுவத்தினர் வெருகல் இச்சிலம்பத்தை ஆகிய இரு இடங்களிலும் புதிய இராணுவ முகாம்களை அமைத்துள்ளதுடன் வெருகல் அணைக்கட்டிலும் காவலரணை அமைத்துள்ளனர்.

FORCES SET FIRE TO PADDY FIELDS
IN TRINCOMALEE

Paddy fields belong to Tamil Peasents were set fired by the Sri Lankan Army at Poomaraththadi in Trincomalee District.

About 10 acres of paddy crops were set fired by the Army on last Saturday and six peasents, working there were arrested and subjected to assaults and torturings.

Further the Army personles who got out from Ali-Oluwa and Kallaroo Army Camps advanced towards Verugal and Ichchilampathai and erected two camps there. A Sentry Point too was erected on Verugal Bund.

ஷெல்தாக்கு
தீவிரம்

நயினாதீவு கடற்படை முகாமில் இருந்து தற்போது புங்குடுதீவுப்பகுதியை நோக்கி அடிக்கடி நடாத்தப்படும் ஷெல் தாக்குதல் கடந்த சில நாட்களாக தீவிரமடைந்துள்ளது. குறிகாட்டுவான் துறையை நோக்கியே பெரும்பாலும் இத்தாக்குதல் நடாத்தப்படுகின்றது.
இதேவேளை இந்தப் பகுதியைச் சுற்றியுள்ள கடலில் ரோந்து சுற்றித்திரியும் கடற்படையின் விசைப்படகுகளில் இருந்தும் குறிகாட்டுவான், இருப்பிட்டி, கண்ணகை அம்மன் கோவிலடி, [illegible] ஆகிய கரையோரப்பகுதிகளை நோக்கி பலத்த பீரங்கித் தாக்குதல் நடாத்தப்படுவதும் அறிவிக்கப்பட்டுள்ளது (22)

FURY SHELL ATTACKS

The shell attacks launched from Nainativu Naval Base towards Pungudutivu got aggravated for the past few days. These attacks were mainly towards Kurikadduvan Jetty.

At the same time,Cannon attacks were also carried out by the patrolling Naval Boats in the Coastal areas with Kurikadduvan,Irupiddi, Kannakai Amman Kovildai areas as their targets.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

**Date** 22.02.1991 **Name of Paper** UTHAYAN **Clipping of News Papers**

# பாத்தியதை உண்டா?

அரசாங்கம் கடந்த வருடம் ஜூன் மாதத்தில் பிரகடனம் செய்த யுத்தம் தமிழ்ப் பிரதேசங்களில் தொடர்கிறது. அதன் விளைவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் இதுவரை நூறு கோடி ரூபா பெறுமதியான அரசாங்க உடைமைகள் சேதமடைந்திருக்கின்றன. இது ஒரு பூர்வாங்க மதிப்பீட்டிலிருந்து கிடைத்த தகவல்.

இந்தக் கணிதப்படி மக்கள் உடைமைகளின் நஷ்டம் அதனைப் போல் ஐந்து மடங்காகவே இருக்கும் என்று மனக்கணக்கால் சொல்லலாம்! யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்களின் உடைமைகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் 500 கோடியாக இருப்பின் வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும்...

தமிழ்க் கிராமங்கள் சம்பூரணமாக நிர்மூலமாக்கப்பட்டிருக்கும் கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும்...? தமிழர்களின் உடைமைகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஆகக் குறைந்தது 5,000 கோடியாக இருக்காதா?

ஒரு நாட்டின் அரசாங்கம் தனது சொந்த உடைமைகளையும்; தனது மக்களின் உடைமைகளையும் இராணுவ நடவடிக்கை மூலம் நாசம் செய்து நஷ்டம் விளைவிக்கிறது என்றால் ... சம்பந்தப்பட்ட பகுதியையும், அங்கு வாழும் மக்களையும் அது தன்னுடையவை என்று எவ்வாறு கூறமுடியும்? உரிமை கொண்டாட என்ன பாத்தியதை உண்டு?

ஓர் அரசு தனது மக்களையும், அவர்களின் உடைமைகளையும் காப்பாற்றுவது அதன் தலையாய கடமை; பொறுப்பு. அரசாங்கமே பணத்தைக் கோடி கோடியாகச் செலவிட்டு, எத்தனை கோடி கொடுத்தாலும் வாங்க முடியாத மனித உயிர்களையும்; கோடிக்கணக்கான பணம் பெறுமதியுள்ள அவர்களின் உடைமைகளையும் அழித்தால் அதன் தர்க்க ரீதியான அர்த்தம — வேறு நாட்டையும், வேறு மக்களையும் துவம்சம் செய்கிறது என்பதே.

இந்த யதார்த்த நிலைப்பாட்டிலிருந்து அரசு எந்தக் காரணத்தைக் கூறியும் தப்பித்துக் கொள்ள முடியாது.

தமிழர்களின் உரிமைகளை வழங்க மனம் கொள்ளாமல் எவ்வாறு கொழும்பு அரசுகள் அவர்களை ஆயுதம் ஏந்த வைத்த நிலையை உருவாக்கினவோ......

அதே போன்று......

இப்போது தமிழ்ப் பிரதேசங்கள் இலங்கையில் இருந்து வேறுபட்டவை, தனியானவை என்பதையும், தமிழ் மக்கள் வேறானவர்கள் என்பதையும் கொழும்பு அரசாங்கமே தனது செயலால் உருவாக்கி வருகிறது. தமிழர்கள் அதனைத் தடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எப்படி?

## IS THERE A RELATIONSHIP?

The war declared by the Government in last June, is still continuing in the tamil speaking areas. As a result, in Jaffna District alone, Government buildings and properties worth about 100 millions of rupees were damaged. This is only a preliminary estimate.

If it is so, according to Arithmatic, by mental calculation, the damages caused to the public and their properties will be five times of the Government.

If it is 500 million in Jaffna alone, the loss caused in the five districts in the North ....... .

In the three Districts of East, where the tamil villages are erased......? The damages caused to the properties of the Tamils would be at least 5,000 millions of rupees?

If a Government is destroying its own peoperties and of the public by Military Operations, How can it claim that this area and the people living there as theirs. What is the relationship for the claim?

It is the utmost duty of the Government to protect its people and their their properties. If the same Government tried to destroy thelives and properties worth more than millions and millions of rupees - there is no logical meaning in it. One has to consider that they are destroying thepeople and properties of another Country.

The Government cannot escape by saying any reasons for this logical situation.

By refusing the Rights of the Tamils, the Colombo Government had made them to rely on Arms.

Like wise ......

Now the Government by its action is making the Tamils and the Tamil speaking areas as a Sepperate land from them. How can they expect the tamils to prevent this?

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 22.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# ஏறாவூரில் தமிழர்கள் உயிருடன் எரிப்பு!

கொழும்பு, பெப். 22

ஏறாவூரில் தமிழ்ப் பயணிகள் பலர் முஸ்லிம் காடையர் கும்பலினால் நேற்று உயிருடன் எரிக்கப்பட்டதாக அஞ்சப்படுகிறது.

மட்டக்களப்பு நோக்கி தமிழ்ப் பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றை முஸ்லிம் காடையர் கும்பல் வழிமறித்துத் தாக்கி பயணிகளை உயிருடன் எரித்தது.

முதலில் சாரதியையும் சில பயணிகளையும் வெளியே இழுத்துப் போட்டு வெட்டிய காடையர்கள் பின்னர் அவர்களை பஸ்ஸுக்குள் போட்டு எரித்தனர்.

இந்தச் சம்பவத்தில் இரண்டு பயணிகள் உயிருடன் எரிக்கப்பட்டனர் என்பது கொழும்பில் உறுதிப்படுத்தப்பட்டது. மேலும் பத்து, பன்னிரண்டு தமிழர்கள் எரிகாயங்களுடன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர்.

இருபத்தாறு தமிழ்ப் பயணிகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்று கிழக்கு மாகாண எம்.பி. ஒருவரை மேற்கோள் காட்டி பி.பி.சி. அறிவித்தது.

இதேவேளை—

தமிழ்ப் பயணிகள் பயணம் செய்த மற்றொரு பஸ் காடையர் கும்பலினால் எரிக்கப்பட்டதாகவும், சாரதி சாதுரியமாக பஸ்ஸை கும்பலினூடே வெட்டிச் செலுத்தி பாதுகாப்பாக பஸ்ஸைக் கொண்டு வந்து சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## TAMILS BURNT ALIVE AT ERAVUR

Colombo, Feb.22

Tamil passengers were burnt alive at Eravur by a gang of Muslim thugs.

A privafe bus that was bound to Batticaloa with tamil passengers was waylaid by a gang of Muslim thugs and thepassengers in it were burnt alive.

First the Driver and some passengers were pulled out and hacked. Later, they were put into the same bus and burnt.

In this two passengers were burnt alive and wasconfirmed in Colombo. Further about 12 were taken to Batticaloa Hospital with burnt injuries.

What happened to the 26 passengers not known. This was announced by BBC quoting reference to a Member of Parliament from theEast. At the same time another bus with tamil passengers was set fired. But the Driver somehow or othermanaged to take the bus from the gang and got eascaped.

# அப்பாவித் தமிழர் பலர் மன்னாரில் பலியாகினர்?

யாழ்ப்பாணம், பெப். 22

மன்னார் பகுதியில் வங்காலை, தள்ளாடி இராணுவத்தினரால் கடந்த ஞாயிறு மாலை கைது செய்யப்பட்ட பலர் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

பேசாலை அகதி முகாம் மற்றும் சிறுத்தீவு, தலைமன்னார் கிராமம் ஆகிய இடங்களில் வைத்து தள்ளாடி இராணுவத்தினராலும் முஸ்லிம் ஊர்காவலரினாலும் கைது செய்யப்பட்டவர்களுக்கு இக்கதி ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

வங்காலை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்களை படையினர் நடத்திக் கூட்டிச் சென்றதாகவும்—

வங்காலையிலிருந்து நானாட்டான் பக்கமாக மூன்று மைல் தொலைவில் உள்ள இடத்தில் மிதிவெடிகள் நிறைந்த பகுதியூடாக கைதானவர்களை நடந்து போகும்படி பணித்ததாகவும்—

மிதிவெடிகளில் சிக்கி பலர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

பின்னர் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையினாலும், மிதிவெடியில் சிக்கியும் காயமடைந்த அல்லது உயிரிழந்த சுமார் இருபதுக்கும் அதிகமானோரை, படையினர் ஒன்றாகப் போட்டு எரித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-15]

## INNOCENT TAMILS WERE VICTIMS

Many were arrested by the Army Personles attached to Vankalai and Thallaiyadi Camps in Mannar District and killed.

This fate had happened to those who were arrested from Pesalai Refugees' Camp, Siruthivu and Talaimannar areas by the Sri Lankan Army and the Muslim Home Guards.

It is reported that those who were detained at Vankalai Camp were taken on foot and they were asked to go through a place where land mines were planted, which is three miles away from Vankalai towards Nanaddan and many got injured.

Then the Army put those twenty killed both by Army attacks and Land Mines and burnt them.

**Date** 23.02.1991.. **Name of Paper** ....UTHAYAN.......... **Clipping of News Papers**

# அன்னையர் கூட்டத்துக்கு தமிழ்த் தாய் தலைமை

கொழும்பு, பெப். 23

கொழும்பில் கடந்த 19 ஆம் திகதி அங்குராப்பணம் செய்யப்பட்ட அன்னையர் முன்னணி அமைப்புக்கு பெரு வரவேற்பு கிடைத்துள்ளது.

முன்னணியின் அங்குராப்பணக் கூட்டத்திற்கு மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி சுஜிவர்தனம், டாக்டர் திருமதி மனோராணி சரவணமுத்து, தென் மாகாணத்தைச் சேர்ந்த திருமதி சீலாவதி ஆகியோர் தலைமை வகித்தனர்.

மாநாட்டில் கலந்து கொண்ட தாய்மார்கள் தமது அன்புக்குரியவர்களை இழந்ததுயரை விவரித்தனர். மாநாட்டில் சமுகமளித்திருந்த மேற்கத்தைய நாடுகளின் தூதரக அதிகாரிகள், பல வெளிநாட்டுச் செய்தியாளர்கள், சர்வதேச தொலைக்காட்சிப் பிரதிநிதிகள் இவற்றைக்கேட்டு அதிர்ச்சி அடைந்தனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி சுஜிவர்தனம் வந்தாறுமூலையில் தமது மகனுக்கு ஏற்பட்ட நிலையை அழுதழுது விவரித்தார்.

அவரது தமிழ் உரை சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. அதனைக் கேட்டு கூடியிருந்த பெண்கள் பலர் விசித்து, விசித்து அழுதனர்.

[உ-3]

<u>TAMIL MOTHER PRESIDED THE MOTHERS' FRONT MEETING</u>

<u>Colombo,Feb.23</u>

A Great welcome had arisen to the Mothers' Front inaugerated in Colombo, last 19th.

For the inaugeration meeting, Mrs.Susiwarthanam from Batticaloa, Dr.(Mrs). Manorani Saravanamuthu and Mrs.Seelawathi from the South got presided.

The Mothers who participated, expressed their sorrows felt by loosing their beloved ones. The Representatives from Western Embasseies, foreign Paper Reporters and International Telivision Representatives were shocked, when they heard these news.

Mrs.Susiwarthanam expressed her son's fate amidst tears.

Her speech in tamil was interpreted in Sinhala and many Sinhala ladies there shed their tears too when they heard of it.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

**People's Front of Liberation Tigers**

**Date** 23.02.1991 **Name of Paper** UTHAYAN **Clipping of News Papers**

## முல்லை மாவட்டத்திலும்

யாழ்ப்பாணம், பெப். 23 முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல், தண்ணீரூற்று, முள்ளியவளை ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் 8.40 மணிவரை கடும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இந்தத் தாக்குதல்களில் விக்னேஸ்வரன் புஷ்பன் என்பவர் படுகாயமடைந்தார். ஐந்து வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. [உ]

IN MULLAI DISTRICT TOO

Jaffna, Feb. 23.

Air attacks took place in Vadduvaikal, Thaniyoothu and Mulliyawalai areas, between 8.00 to 8.40 a,m., day before yesterday.

One Wigneswaran Pushban got badly injured on this and five houses were fully damaged.

## கச்சாய் வீதியில் ஹெலி சூடு

தென்மராட்சி, பெப். 23 சாவகச்சேரி — கச்சாய் வீதியை நோக்கி நேற்று மாலை 4.45 மணியளவில் ஹெலி ஒன்று தாக்குதல் நடத்தியது.

இவ் வீதியிலுள்ள சங்கக் கடை ஒன்றில் பொருள்களை வாங்க நின்ற மக்கள் சிதறி ஓடித் தப்பிக்கொண்டனர். [இ-117]

HELI FIRINGS AT KACHCHARI ROAD

A Heli had its attack on Chavakachcheri - Kachchai Road by about 4.45 p.m. yesterday.

Those who ere in a queue to buy their provisions in a Co-operative shop got escaped by running away.

## அலம்பிலில் குண்டு வீச்சில் 4 பேர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 23 மணலாறுப் பகுதி அலம்பிலில் நேற்று முன்தினம் காலை 8-30 மணியளவில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் 4 பொதுமக்கள் படுகாயமடைந்தனர். [உ]

4 INJURED IN ALAMPIL BOMBING

4 Civilians were injured in an Air Attack, that took place at Alampil in Manalaru Area yesterday by about 8.30 a.m.

**Date** 23.02.1991 **Name of Paper** EELANATHAM **Clipping of News Papers**

# உருத்திரபுரத்தில் பாடசாலை மீது விமானக் குண்டு வீச்சு

**8 மாணவர் காயம்; ஒருவர் காலை இழந்தார்**

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உருத்திரபுரம் ஏழாம் வாய்க்கால் என்ற இடத்தில் பாடசாலை மற்றும் பொது மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தியதில் எட்டுப் பாடசாலை மாணவர்கள் காயமடைந்துள்ளதுடன் பாடசாலைக் கட்டடமும், அருகேயுள்ள ஐந்து வீடுகளும் பகுதி சேதமடைந்துள்ளன. [illegible]

உள்ள இந்து மகா வித்தியாலயத்தில் நேற்றுக்காலை 7.45 மணியளவில் பாடசாலைக்கு மாணவர்கள் வந்து குழுமிய சமயம் அந்தப் பாடசாலை மீது மூன்று குண்டு வீச்சு விமானங்கள் மாறிமாறி குண்டுகளை வீசித் தாக்குதல் நடாத்தின.

இந்தத் தாக்குதலில் இப் பாடசாலையின் ஆண்டு ஆறு மாணவன் இ. துஷ்யந்தன் (வயது 11 கணேசபுரம்) என்பவர் கால் ஒன்றை இழந்தார். இவரின் தங்கையான ஆண்டு நான்கு மாணவி இ. துஷ்யந்தி (வயது 9) என்பவரும் ஆண்டு பதினொன்று மாணவியான தி. நந்தினி (வயது 15), வே. நிலானி ஆகியோர் படுகாயமடைந்ததுடன் மேலும் நான்கு பாடசாலை மாணவர்கள் சிறுகாயங்களுக்குட்பட்டனர்.

பாடசாலைக் கட்டடமும் இப் பகுதியில் இருந்த வர்த்தக நிலையம் ஒன்றும் ஐந்து வீடுகளும் இத் தாக்குதலில் சேதமடைந்தன. உருத்திரபுரம் பகுதியில் நாலாவது தடவையாக இந்தக் குண்டு வீச்சு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(49, 85), (க), (மு)

## BOMBING AT SCHOOL - 8 STUDENTS INJURED ONE LOST HIS LEG

A School and other residentail houses at D.7, Uruthirpuram in Kilinochchi District were subjected to Air Attack by the Sri Lnakan Army Air Force. 8 students got injured and the School buildings and five houses got damaged.

Three Bombers had their attacks repeatedly, yesterday by about 7.45 in themorning when studnts assembled at D.7 Hindu Maha Vidiyalayam.

**மன்னாரில் பொதுமக்கள் கைது துன்புறுத்தல்**

(மன்னார்)

மன்னார் போக்குவரத்துச் சபை எரிபொருள் நிலையத்தில் முகாமிட்டுள்ள இராணுவத்தினரும் சில தேசவிரோதக் கும்பல்களும் அப் பகுதியில் தேடுதல் நடாத்தி அப்பாவிப் பொதுமக்களை கைதுசெய்து துன்புறுத்தி வருகின்றனர்.

On this, a student, I.Thushyanthan, 11 years attached to year 6, lost his leg. His sister, I.Thushyanthi, 9years in year 4, T.Nanthini, 15 years in Year11 and V.Nilani got badly injured. Further 4 were subjected to Minor injuries.

School buildings, a Business Centre and five houses got damaged. It is also noted that this was the fourth attack made in Uruthirapuram area.

## ARRESTINGS AND TORTURINGS IN MANNAR

The Army and the Anti-Social Elements stationed in the Fuelling station of the Mannar Transport Board are arresting and torturing the innocent civilians on that area.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

**People's Front of Liberation Tigers**

**Date** 23.02.1991. **Name of Paper** EELANATHAM .......... **Clipping of News Papers**

# மன்னாரில் கைதாகியவர்கள் கதி என்னவெனத் தெரியவில்லை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பொதுமக்கள் தொடர்ந்தும் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது பற்றி சரியான தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. கடந்த மாதம் கைது செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருவதாகவும் கடந்த டிசம்பர் மாதம் கைது செய்யப்பட்ட பி.மோகனசுந்தரம் (வயது 25) என்பவரை தாம் கைது செய்ததாக ஆரம்பத்தில் ஒப்புக்கொண்ட இராணுவத்தினர் தற்போது அவரைப் பற்றி எமக்கு எதுவும் தெரியாது என்று கூறிவிட்டதாகவும் அவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

ஏனையவர்களுக்கு தற்போது என்ன கதி நேர்ந்தது என்பது பற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை. (85)

## THE FATE OF THOSE ARRESTED IN MANNAR NOT KNOWN

Those who arrested by the Army in Mannar are being deatined still.

The whhreabouts of the arrested were not known. A Government Officer arrested last month had been attacked by the Army and said to be admitted in the Hospital for treatment and one P.Mohanasunderam's arrest on last December was accepted by the Army earlier, is now denied.

What happened to those who were arrested is not known so far.

**Date** 24.02.1991 **Name of Paper** UTAYAN **Clipping of News Papers**

## பஸ் மீது ஹெலித் தாக்கு: பயணி பலி! 8 பேர் காயம்!!

### நுணாவில் சந்தியில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் இருந்து கெரதீவு நோக்கிப் புறப்பட்ட பயணிகள் பஸ் மீது நேற்று மாலை 5-30 மணியளவில் நுணாவில் சந்தியில் வைத்து ஹெலி கண்மூடித்தனமாக தாக்குதலை நடத்தியது.

நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள் சென்ற பஸ் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ஒரு பயணி உயிரிழந்தார். 8 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் மூவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டனர். ஏனை [illegible] திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டோர் வருமாறு:

எஸ். ரட்னராணி [வயது 30] கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம், டி. ராஜேஸ்வரியம்மா [வயது 54] கொக்குவில், அன்ரனி நிக்கிலஸ் [வயது 36] யாழ்ப்பாணம்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது. அவரது பெயர் விவரம் தெரியவரவில்லை.

[illegible]

HELI ATTACK ON BUS
PASSENGER KILLED AND 8 INJURED

INCIDENT AT NUNAVIL JUCTION

A blind-fold attack was made on a bus that carried passengers from Jaffna to Kerativu at Ninavil Junction by about 5.30 p.m., yesterday.

One died and 8 injured in the bus, where there were more than hundred passengers. 3 of the 8 injured were taken to Jaffna Hospital and the rest were admitted to Chavakachcheri Hospital.

Those who were admitted in Jaffna Hospital are - S.Ratnarani, 30 years, Kachcheri - Nallur Road, Jaffna, T.Rajeswariamma, 54 years, Kokkuvil and Antoney Nicholes, 36 years, Jaffna.

The body of the youth killed was kept in Chavakachcheri Hospital as his name and other particulars not known.

## ஹெலி பரவலாக தாக்கு

யாழ்ப்பாணம், பெப். 24

குடாநாட்டின் பல இடங்களிலும் நேற்று ஹெலி பரவலாக தாக்குதல்களை நடத்தியது.

அநேக இடங்களில் பிரசுரங்களை வீசியவாறு வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

யாழ். கோட்டை, கச்சேரியடி, அரியாலை, பாசையூர், குருநகர், தபால்கட்டைச் சந்தி ஆகிய பகுதிகளுக்கு மேலாகப் பறந்தபடி ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது.

வலி. வடக்குப் பகுதியிலும் ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றன. அங்கும் பல இடங்களில் பிரசுரங்கள் வீசப்பட்டன.

சுன்னாகம், மல்லாகம் பகுதிகளில் வேட்டுக்களும் [illegible]

HELI ATTACKS ALL OVER

Jaffna, Feb. 24

Heli had its attacks in many places in the Peninsula yesterday.

In many places, it had its firings while dropping leaf-lets.

Heli attacks were carried out while while flewing in Jaffna Fort, Kachcheriyadi, Ariyalai, Pasaiyoor, Kurunagar and Post Box Junction areas.

Heli attacks and dropping notices took place in Vali-North also. Besides, straffing took place in Chunnakam and Mallakam areas too.

Date 24.02.1991. Name of Paper ......UTHAYAN.............. Clipping of News Papers

# அந்த வர்த்தகர்கள் இருவரும் எங்கே?

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் வழியில் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் கூட்டிச்செல்லப்பட்ட இரண்டு வர்த்தகர்களுக்கு என்ன நடந்தது?

கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வவுனியாவில் இராணுவக் காவல் அரணில் படையினர் இந்த இரண்டு வர்த்தகர்களையும் தடுத்துப் பின்னர் கூட்டிச் சென்றனர் என்று கூறப்படுகிறது.

அவர்களுடன் இங்கிருந்து கூடச் சென்ற உறவினர் ஒருவர் தாம் இதனை நேரில் கண்டதாகச் சொன்னார்.

புளியங்கூடலைச் சேர்ந்த குடும்பஸ்தர்களான அவர்கள் இருவரையும் பற்றி அவரது உறவினர்கள் வவுனியா இராணுவ அதிகாரிகளிடம் விசாரித்தனர்.

சம்பந்தப்பட்டவர்களின் பெயரில் எவரும் இராணுவ முகாமுக்குக் கைது செய்யப்பட்டோ அல்லது கூட்டியோ கொண்டுவரப்படவில்லை என்று அதிகாரிகள் கையை விரித்துவிட்டனர்.

உறவினர்களால் தேடப்படும் இரண்டு வர்த்தகர்களும் வியாபாரத்தின் பொருட்டு ரொக்கப் பணமும், வங்கி டிராப்டும் எடுத்துச்சென்றனர் என்று மேலும் அறிய வந்தது. [அ-113]

## WHERE ARE THOSE TWO BUSINESSMEN

Jaffna, Feb.24

What happened to the two businessmen who were taken by the Sri Lankan Army at Vavuniya, on their way to Colombo.

They were deatined at the Checking Point at Vavuniya and later taken to the Camp on the last January, 31st.

A relative, who went along with them, had told that he witnessed it personally.

Both are from Puliyankoodal in Jaffna and their relatives inquired from the Army Officers at Vavuniya.

But the Army Officers had denied their arrest.

These two who were searched by their relatives, are said to in possession of Cash and Bank Drafts, for their business dealings.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 24.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# கிளிநொச்சி திருநகரில் நேற்றுக் குண்டு வீச்சு!

## தாய், 3 பிள்ளைகள் காயம்

யாழ்ப்பாணம், பெப். 24

கிளிநொச்சி, பாற்பண்ணை — உதவி அரச அதிபர், காரியாலயம் [பழைய டி.ஆர்.ஓ. கந்தோர்] அமைந்துள்ள பகுதியில்—திருநகரில் நேற்று முற்பகல் 10 மணியளவிலும் 11·30 மணியளவிலும் பொம்மர்கள் குண்டுகளை வீசித் தாக்கின.

குண்டு வீச்சில் 4 வீடுகள் பெரும் சேதமடைந்தன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் காயமடைந்தனர்.

புஷ்பராஜா யோகேஸ்வரி [26 வயது] அவரது பிள்ளைகளான நேமிநாதன் [5 வயது], தர்ஷிகா [2 வயது], செல்வி [6 வயது] யோகேஸ்வரியின் தாயாரான நாகலிங்கம் செல்லம்மா [44 வயது] ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

காயம் அடைந்தவர்களில் செல்வியைத் தவிர, ஏனைய நால்வரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குண்டு வீச்சினால் அப்பகுதியில் வேறு சில வீடுகளும் சேதமடைந்தன. [ஓ-5-15]

BOMBING AT KILINOCHCHI - THIRUNAGAR
MOTHER AND THREE CHILDREN INJURED

Jaffna,Feb.24

Bombers had their attacks at Thirunagar,yesterday by about 11.00 a.m. and 11.30 a.m. where the A.G.A's Office and the Milk Board are situated.

4 houses got damaged and 5 members of the same family got injured.

One Pusbarajah Yogeswary,26 years and her children, Chelvi,6 years, Neminathan,5 years,Tharsika,2 years and her mother Nagalingham Sellamma, 44 years, are those who were injured.

Injurdes were admitted to Jaffna Teaching Hospital,except Chelvi.

Some other houses also got damaged.

# மாங்குளத்திலும் இருவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், பெப். 24

மாங்குளம், கொல்லர் புளியங்குளம் பகுதியிலும் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பொம்மர் குண்டுவீச்சு இடம்பெற்றது.

மாங்குளம் பழைய இராணுவ முகாம் பகுதியை வட்டமிட்ட பொம்மர் வவுனியா பக்கமாகச் சென்று - சுமார் 2 மைல் தூரத்தில் திடீரென குண்டு வீச்சை நடத்தியது.

வீட்டின் முற்றத்தில் விழுந்த குண்டினால் ஆரோக்கியநாதன் [64 வயது] அவரது மருமகளான சில்லாலையைச் சேர்ந்த ஜசிந்தா [45 வயது] ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குண்டுவீச்சில் வீடு பலத்த சேதமடைந்தது. [ஓ-5]

TWO INJURED AT MANKULAM TOO

Air Attack took place at Kollar-Puliyankulam in Mankulam,yesterday by about 11.30 a.m.

Bomber that was circling around the former Army Camp at Mankulam,went about 2 miles towards Vavuniya and had its sudden attack.

The Bomb that fell infront of the house had injured one Arokiyanathan aged 64 years and his Daughter in law, Jasintha 45 years.

Both were admitted in Jaffna Hospital.

The house got damaged badly.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

**People's Front of Liberation Tigers**

**Date** 25.02.1991 **Name of Paper** UTHAYAN **Clipping of News Papers**

## உருத்திரபுரம் பகுதியிலும் பொம்மர் தாக்கு

கிளிநொச்சி, பெப்.25

கிளிநொச்சி, பரவிப்பாஞ்சானில் குண்டு வீச்சு நடந்த அதே சமயம் இன்னும் ஒரு பொம்மர் உருத்திரபுரம், 10 ஆம் வாய்க்கால் பகுதியில் குண்டுகளை வீசித் தாக்கியது.

குண்டு வீச்சில் வீடுகள் சில சேதமடைந்தன.

மீண்டும் பகல் 11.30 மணியளவில் வந்த இரண்டு பொம்மர்கள் பரவிப்பாஞ்சான் குடியிருப்பு பகுதியிலும் 10 ஆம் வாய்க்கால் குடியிருப்புக்கள் மீதும் குண்டுகளை வீசின.

அப்போதும் வீடுகள் சில சேதமடைந்தன. கால்நடைகளும் கொல்லப்பட்டன.

## BOMBING AT URUTHIRAPURAM TOO

Kilinochchi, Feb.25

While Bombing was carried out at Paravipanchan, Kilinochchi, another bomber was engaged in its attack at D.10, Uruthirapuram.

Houses got damaged in bombings.

Again two bombers came at 11.30 noon and had their attacks on the residences of Paravipanchan and of D.10, Uruthirapuram. Houses and cattles got damaged on this.

**Date** 25.02.1991. **Name of Paper** EELANATHAM **Clipping of News Papers**

# கிளிநொச்சியில் குண்டு வீச்சு; கூட்டுறவுச் சங்க ஊழியர் பலி!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி நகரில் நேற்று விமானக் குண்டுவீச்சு இடம்பெற்றுள்ளது. இக் குண்டுவீச்சில் கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இரண்டு தொழிலாளர்களும், பாதசாரி ஒருவரும் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை பத்து மணியளவில் கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்திற்கு சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் குண்டுவீச்சு நடாத்தியதில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கட்டடம் பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன் அங்கு காவல் தொழிலாளியாக பணிபுரிந்த கனகலிங்கம் (வயது 40) என்ற ஜெயந்தி நகரைச் சேர்ந்தவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார். கே. சூரியகுமார், (ஜெயந்திநகர்)

ஆர். பசுபதிப்பிள்ளை (வட்டக்கச்சி) ஆகிய தொழிலாளர்கள் படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விருவருடன் கறுப்பையா என்பவரும் படுகாயமுற்றார். (லேர்)

BOMBING AT KILINOCHCHI
CO-OP EMPLOYEE KILLED

An employee of Karachchi South M.P.C.S. got killed and two others were injured in Bomber attack that took place yesterday. A pedestrian was injured too.

This occurred by about 10.00 a.m. and the bombers had their attacks on the M.P.C.S. Building and it got badly damaged and the watcher Mr.S.Kanakalingham, aged 40,from Jeyanthinagar got killed. K.Sooriyakumar and R.Pasupathipillai are hose who got injured and got admitted to Jaffna Teaching Hospital. In addition one,Karuppiah, a pedestrian passed that way got injured too.

**Date** 25.02.1991 **Name of Paper** Uthayan **Clipping of News Papers**

## விடியும் வேளையில் ஹெலி பரவலாகச் சூடு!

நேற்றுக் காலை விடியும் நேரம் பார்த்து நல்லூர், முத்திரைச்சந்தை மற்றும் ஊரெழு, உரும்பராய், கோண்டாவில் பகுதிகளில் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது.

நல்லூர் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் தனியார் நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் எம். குப்புசாமி [50 வயது], காயமடைந்தார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதே சமயம் பொலிகண்டி, உடுப்பிட்டி பகுதியிலும் நேற்று பிற்பகல் 8-30 மணியளவில் பொதுமக்கள் கூடியிருந்த இடங்களை நோக்கி ஹெலி தாக்குதல் நடத்தியது.

[ஓ-3-154]

### Straffing at Dawn

Straffings took place at Muththiraisanthai in Nallur, Urelu, Urumpirai and Kondavil areas yesterday at dawn.

One, M. kuppusamy aged 50 years, working in a Private Estabilishment got injured and admitted in Jaffna Teaching Hospital.

At the same time, Heli attacks took place at Polikandy and Udupiddy areas where the public were found in congregation.

## கோணாவிலில்

கிளிநொச்சி, பெப். 25

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயத்தை நோக்கியும் நேற்றுப் பகல் 12 மணியளவில் பொம்மர் குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

குண்டு வீச்சினால் தேவாலயம் சேதமடைந்தது.

தெய்வாதீனமாக பெரும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

[ஞ-76]

### ATTACK IN KONAVIL

Bombing took place towards a Roman Catholic Church at Konavil in Kilinochchi, yesterday by about 12.00 noon.

The Church building got damaged.

No deaths or injuries were caused to the public by God's Grace.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 26.02.1991 Name of Paper EELANATHAM Clipping of News Papers

# திருமலை சீனன்குடாவில் விமானப்படைத் தளத்தில் ஊழியர்களாகப் பணிபுரிந்த 9 தமிழரைக் காணவில்லை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சீனன்குடா விமானப்படைத் தளத்தில் வேலைபார்த்துவந்த ஒன்பது தமிழர்கள் அண்மையில் காணாமற் போயுள்ளார்கள்.

இவர்கள் காலையில் வேலைக்குச் செல்லும்போது அல்லது மாலையில் வேலை முடிந்து வீடு திரும்பும் போது ஒருவர் பின் ஒருவராகக் காணாமற் போயுள்ளார்கள். இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு வேலை செய்துவந்த ஏனைய [illegible] வேலை நிறுத்திவிட்டு தமது உயிரைப் பாதுகாக்கும் பொருட்டு வெளியிடங்களுக்குச் சென்றுள்ளனர்.

இவ்வேளை சிறிலங்கா இராணுவத்தினராலும், முஸ்லிம் ஊர்காவற் படையினராலும் இவர்கள் [illegible] டு படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தக் கடத்தல் நடவடிக்கையானது சிறிலங்கா விமானப்படையில் பணிபுரியும் தமிழர்களை அகற்றிவிட்டுத் தனிச்சிங்களவர்களை நியமிப்பதற்கான முயற்சியே என [illegible]

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
People's Front of Liberation Tigers

Date 26.02.1991 Name of Paper EELANATHAM Clipping of News Papers

AT CHINA BAY AIR FORCE BASE

9 TAMILS EMPLOYED AS LABOURERS ARE MISSING

9 Tamils employed as labourers in China Bay Air Force Base in Trincomalee are said to be missing recently.

They were lost one by one, when they go for work or return from works. Following this, the rest were forced to stop from going for work and have gone to some other places to save their lives.

The News reveal, that they were subjected to a well planned abduction and murder by the Sri Lankan Army and the Muslim Home Guards. This is an attempt to evacuate the Tamils employees from the Air Force Base and to appoint the Sinhalese in their places.

**Date** 26.02.1991 **Name of Paper** EELANATHAM **Clipping of News Papers**

திருமலை மாவட்டத்தில்

## முஸ்லிம் ஊர்காவற்படையின் கெடுபிடி தொடர்கிறது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் தமிழ்ப் பொது மக்கள் தினமும் கைதுசெய்யப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த பன்னிரெண்டாந் திகதி மூதூரில் மூத்தாக்குட்டி (வயது 55 [illegible]) என்பவரை முஸ்லிம் சமூக விரோதிகள் கைது செய்து அடித்துச் சித்திரவதை செய்த பின் அவரிடமிருந்த சைக்கிள், உடுப்புகள், [illegible] ரூபா பணம் என்பவற்றையும் பறித்தெடுத்துள்ளனர்.

மறுதினம் பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்த வயிரன் காளியப்பு (வயது 60) என்பவரைக் [illegible]. இதே வேளை அடுத்த பதினோராம் திகதி முஸ்லிம் ஊர்காவற் படையினர் சல்லி என்ற இடத்திற்குள் எஸ். எல். ஆர். துப்பாக்கிகளுடன் புகுந்து தமிழ்ப் பொதுமக்களை அடித்துத் துன்புறுத்தியுள்ளனர். மறுதினமும் இப்பகுதிக்குள் புகுந்த இவர்கள் சாமிநாதன் என்பவரை அடித்துச் சித்திரவதை செய்துள்ளனர்.

திருக்கோணமலையில் உள்ள சாம்பல்தீவு கிராமம் முஸ்லிம் ஊர்காவற்படையினரால் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகிறது. திருமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் இவ்வன்செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### EXCESSES OF MUSLIM HOME GUARDS IN TRINCOMALEE DISTRICT

Tamil civilians were arrested and subjected to torturings by the Muslim Home Guards daily.

On last 12th.,one Moothakuddi, 55 years was subjected to this type of excesses and was arrested and tortured. They seized his bicycle,clothes and the cash, he had.

On the next day, they have arrested one Vairavan Kaliyappu,60 years from Pallikudiyiruppu. On the same day,they have entered into the village of Challi,with S.L.R. rifles and assaulted and tortured the tamils. Next day also they entered into the same village and assaulted and tortured on Saminathan ofthat area.

Sambaltivu Village in Trincomalee is subjected to frequent attacks by the Muslim Home Guards.

News from Trincomalee reveal, that continued violecnes take place in areas where Tamils are living.

## கொழும்பில் தமிழ்க் குழுவால் இளைஞர் அடித்துக் கொலை

([illegible])

பளையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், கொழும்பில் வைத்து தமிழ்க்குழுவொன்றினால் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

கடந்த 19ஆம் திகதி செல்லப்பா ராஜன் வயது 20, என்பவர் வெளிநாடு செல்லும் நோக்கமாக கொழும்புக்குச் [illegible] 21ஆம் திகதி பயங்கர ஆயுதங்களால் இவ்விளைஞரை அடித்துக் கொன்றதாக, நேரில் கண்டு கொண்ட ஒருவர், இளைஞரின் பெற்றோருக்கு தெரிவித்துள்ளார். இறந்தவரின் சடலம் கொழும்பில் அவரது உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

### YOUTH ASSAULTED TO DEATH BY A TAMIL GROUPE

A youth from Pallai was assaulted to death in Colombo by a Tamil Groupe.

Sellappah Rajan, 20 years left for Colombo with an intention of going abroad. An eye witness of the Brutal killings with dangerous weapons, that took place on last 21st. had informed the parents about it. His body was cremated by his relatives in Colombo itself.

Date 26.02.1991 Name of Paper UTAYAN Clipping of News Papers

## சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், பெப். 26

மூதூர் இராணுவத்தினர் கடந்த வெள்ளியன்று கடற்கரைச்சேனைப் பகுதியைச் சுற்றிவளைத்து அப்பகுதியைச் சேர்ந்த க. கோணலிங்கம் [வயது 26] என்பவரைக் கைது செய்தனர். பின்னர் சம்பூரில் வைத்து படையினரால் இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## SHOT DEAD

Jaffna,Feb.26

Muthur Army have arrested one K.Gonalingham,20 years, while cordorning the Kadatkaraichenai area. Later,he was shot dead at Sampoor,on last Friday.

## கதிரவெளியில் 11 பேர் கைது

யாழ்ப்பாணம், பெப். 26

மட்டக்களப்பு மாவட்டம் கதிரவெளியில் கடந்த 19 ஆம் திகதி 11 குடும்பஸ்தர்களை படையினர் கைது செய்தனர்.

சின்னத்தம்பி லூகாஸ் [வயது 30], காசிநாதன் விஜயன் [வயது 22], இராசா பொன்னம்பலம் [வயது 25], கணபதிப்பிள்ளை கிருபா [வயது 35], கந்தையா தவராசா [வயது 24], வேலுப்பிள்ளை நாகராசா [வயது 28], முத்துலிங்கம் இரத்தினம் [வயது 24] உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். [உ]

## 11 arrested in Kathiraveli

Jaffna,Feb.26

Forces have arrested 11 familied men at Kathiraveli, in Batticaloa District on last 19th.

Sinnathamby Lucas,36 years,Kasinathan Wijeyan,22 years,Rasa Ponnambalam,25 years,Kanapathipillai Kiruba,35 years,Kandiah Thavarajah,24 years,Veluppillai Nagarajah,28 years and Muthulingham Ratnam, 24 years were included among the eleven arrested.

Date 26.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# கிழக்கில் தமிழர் கண்டபடி கைது!

## அப்பாவி மக்கள் மீது கெடுபிடி

கொழும்பு, பெப்ரவரி 26

கிழக்கில் — குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் — பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு வருவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கில் தமது "பிடியை" இழந்து வரும் ஸ்ரீலங்காப் படையினர், அப்பாவி மக்களை பெரும் கெடுபிடிக்கு உள்ளாக்கி வருவதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

கடந்த சில தினங்களாக அப்பாவித் தமிழர்கள் மிரட்டப்படுவதும், கைது செய்யப்படுவதும் அதிகரித்திருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

இவ்வாறு கைது செய்யப்படுவோர் பின்னர் காணாமற் போவதாகவும் தமிழ்க் குழு ஒன்றை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. மேலும் கூறியது.

மண்டூரில் 42 தமிழர்களை தாங்கள் கைது செய்ததை இராணுவத்தினர் ஒப்புக் கொண்டதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

இதற்கிடையில்—

நேற்று அம்பாறை மாவட்டத்தில் ஓரிடத்தில் ஏழு தமிழர்கள் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவிக்கிறது. [உ-3]

TAMILS ARREST D AT RANDOM IN EAST
EXCESSES ON INNOCENTS

Colombo, Feb. 26

The Agency News inform that in East, especially in Batticaloa District, tamils were arrested in large number by the Sri Lankan Army.

It further reveal that the Sri Lankan Army who loose their control in the East, are making the innocents subjected to their excesses.

B.B.C. in its news informed that threatenings and arrestings have increased for the past few days. B.B.C. quoting reference to a Tamil Groupe had announced that those who arrested were later under missing.

The Phillipenes Radio, Veritas also informed that the arrest of 47 tamils in Madoor, Batticaloa was accepted by the Sri Lankan Forces.

At the same time, another News reveal that seven tamils were shot dead by the Special Task Forces in Amparai District.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

Date 26.02.1991 Name of Paper UTHAYAN Clipping of News Papers

# மண்டூர் ராணுவத்தினரால் 400 தமிழர்கள் கைது!

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் சுமார் நானூறுக்கும் அதிகமான தமிழர்களைக் கைது செய்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெல்லாவெளி, பாலையடி வெட்டை, மண்டூர் 13, 14 ஆம் கொலனி முகாம்களில் இருந்து வெளியேறிய படையினரே இவர்களைக் கைது செய்திருக்கின்றனர்.

நெடியவட்டை, கல்வெட்டை, காக்காச்சி வெட்டை, பாலையடி வெட்டை, காலாசோலை, மேற்குச்சேனை, அலியாவெட்டை ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்த படையினர் சுமார் 150 இளைஞர்கள் உட்பட நானூறு பேரைக் கைது செய்து மண்டூர் முகாமுக்குக் கொண்டு சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [உ]

## 400 TAMILS ARRESTED AT MANDOOR

The news from Batticaloa reveal that the Army Personels who got out from Vellaveli Camp, have arrested about 400 Tamils.

The army who got out from the camps attached to Vellaveli, Palaiyadiveddai, 13th and 14th Colonys at Mandoor have arrested them.

They cordorned Neddiyaveddai, Kalveddai, Kakkachchiveddai, Palayadiveddai, Kalacholai, Mettkuchchenai and Aliyaveddai areas and arrested about 400, including 150 youths. Later they were taken to the Camp.

Date 2?.02 1991 Name of Paper EELANATHAM Clipping of News Papers

# பயணிகள்மீது புளொட் வவுனியாவில் கெடுபிடி

(ஈச்சமோட்டை)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாம் காவலரணில் நிற்கும் புளொட் இயக்கத்தினர் கொழும்பிலிருந்து வரும் இளைஞர்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்துவரும் பயணிகளிடம் பெருந்தொகை [illegible] பணத்தையும் [illegible] மதிமிக்க பொருள்களையும் அபகரித்து வருகின்றனர். இத்துடன் அங்கிருந்துவரும் இளைஞர்களைக் கொண்டு பற்றைகளைத் துப்பரவக்குவது, குழிகள் தோண்டுவது போன்ற கடுமையான வேலைகளுக்கு உள்ளாக்குகின்றனர். கடும் வெய்யிலில் இந்த இளைஞர்கள் வேலை செய்வதைக் காணமுடிந்தது [illegible]

## PLOTE EXCESSES ON PASSENGERS AT VAVUNIYA

Members of the PLOTE Groupe stationed at the Sentry Point in Thandikulam, Vavuniya are abducting the money and the other valuable goods from those returning from Colombo and Foreign Countries. Besides, the youths were asking to clear the bushes and to cut bunkers for them. These youths were seen to work in the hot sun.

# பச்சைப் புலிகளால் இருவர் திருமலை நகரில் கைது

கடந்த 21-02-91 இல் திருமலை கடற்காட்சி வீதியைச் சேர்ந்த ரஞ்சித் என்னும் தமிழ் இளைஞரும இலங்கை கடற்படைத் தளத்தில் சாரதியாக் கடமையாற்றும் காளிகோவிலடியைச் சேர்ந்த குட்டி என்பவரையும் பச்சைப் புலிகள் கைதுசெய்துள்ளனர். இவ்விருவரையும் கைது செய்யும் போது அந்த வெள்ளைநிற வானுக்குள் நன்றாக தமிழ் கதைக்கக் கூடியவர்கள் இருந்ததாகவும் இவர்கள் புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

## TWO ARRESTED BY THE GREEN TIGERS IN TRINCOMALEE TOWN

On 21.02.91, Green Tigers have arrested two persons - one Ranjith from Sea View Road, Trincomalee and another Mr.Kuddy, a driver attached to the Naval Base. While they were arrested, those who were in the white coloured van spoke tamil very fluently and are suspected to be PLOTE Groupe.

Date 28.02.1991 Name of Paper EELANAATHAM Clipping of News Paper

## காரைநகரில் ஷெல் தாக்குதல்: வயலில் நின்ற பெண் காயம்

(காரைநகர்)

காரைநகர் சிறிலங்கா கடற்படை முகாமிலிருந்து குடியிருப்புக்கள் மற்றும் நெல் வயல் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் நெல்வயலில் அறுவடை வேலையில் ஈடுபட்டிருந்த வி. புவனேஸ்வரி, வயது 28 என்ற பெண் படுகாயமடைந்துள்ளார். வயலிலிருந்த ஏனையோர் பாதுகாப்பான இடங்களை நாடி ஓடி மறைந்து கொண்டதால் மேலும் சேதம் ஏற்படவில்லை.

## SHELLING AT KARAINAGAR
## WOMAN GOT INJURED

One ogt injured in shelling that launched fromK Karainagar Naval Base towards the residential areas.

One,Puvaneswary aged 28 years,engaged in harvesting in a paddy field got injured in this incident that took place by about 11.30 a.m.yesterday. Others got escaped by running to safety spots.

## இளைஞர் மீது கடற்படை தாக்குதல்

(புங்குடுதீவு)

நயினாதீவில் உள்ள சிறிலங்கா கடற்படையினரால் [illegible] பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் தாக்கப்பட்டுள்ளனர். [illegible] நடையாக ரோந்து சென்ற படையினர் சைக்கிள்களில் சென்ற இளைஞர் சிலரை [illegible] வருமாறு அழைத்தனர். அதனைக் கவனியாத இளைஞர்கள் தம் வழியே சென்றதையடுத்து ஆத்திரமுற்ற படையினர் பின்னர் இளைஞர்களை முகாமிற்கு அழைப்பித்து நையப்புடைத்து அனுப்பினராம். ([illegible])

## YOUTH ATTACKED BY NAVY

Youths from Nainativu got attacked by Navy Personles last week.

Navy who had their patrol duty on foot, have called some youths who went on bicycle on that way. The youths who have not noticed or heard of it,proceeded further.

Navy Personels who got annoyed of this,called them to their Camp and had a severe attack on them.

# கிணற்றில் வீசப்பட்ட 13 தமிழரின் சடலங்கள்!

## மண் போட்டு மூடப்பட்டன!!

மன்னார், வங்காலை இராணுவத்தினரால் கடந்தவாரம் படுகொலை செய்யப்பட்டு, கிணறு ஒன்றில் போடப்பட்டிருந்த 13 தமிழர்களின் சடலங்களும் பின்னர் படையினரால் மண் போடப்பட்டு மூடப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலையுண்டவர்களின் உறவினர்கள் இது குறித்து ஐ.நா. அகதிகள் ஸ்தானிகராலய அதிகாரியிடம் முறை [illegible]

அந்த அதிகாரி இராணுவ முகாமுடன் தொடர்பு கொண்டு விசாரித்தார். படையினர் அது குறித்து எதுவும் தெரியாது என்று கூறி, மறுத்துவிட்டனர்.

அதைத் தொடர்ந்து சடலங்கள் போடப்பட்ட அந்தக் கிணறு "புல்டோசரின்" உதவியுடன் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு, படையினரால் மூடப்பட்டுவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

### 13 BODIES THROWN INTO THE WELL COVERED WITH SOIL

It is informed that the dead bodies of the 13 tamils, who were killed by the forces, last week in Vankalai, were thrown into a well and covered with soil.

The relatives of the deads have informed this to the UNHCR.

On inquiry made by the UNHCR, the forces had informed that they are not aware of this incident.

Continuing this, the well into which the dead bodies were thrown, was covered with soil by using a Bull-Dozer.

# சூடுபட்டு சேதமடைந்த நிலையில்

## படகு கரை ஒதுங்கியது; மூவரின் கதி தெரியவில்லை

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்றில் பிளாஸ்டிக் படகு துப்பாக்கிச் சூடுபட்டு சேதமடைந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி கிழக்குக் கடற்பகுதியில் வைத்து இப்படகு கடற்படையினரிடம் சிக்குண்டது தெரிந்ததே.

இப்படகில் சென்ற கணபதிப்பிள்ளை மகேந்திரன் [36 வயது], வேலுப்பிள்ளை வெற்றிவேலாயுதம் [28 வயது] செல்லத்துரை சிவசோதி [22 வயது] ஆகிய மூன்று குடும்பஸ்தர்களின் கதி என்ன என்று இன்னும் தெரியவரவில்லை.

இதே படகில் சென்ற பஞ்சலிங்கம் [33 வயது] என்பவர் அன்றைய தினமே கடலில் பாய்ந்து நீந்திக் கரை சேர்ந்துவிட்டார். [ஓ-144]

### DAMAGED BY FIRING BOAT ASHORED - POSITION OF 3 PERSONS NOT KNOWN

A Plastic boat ashored to the beach with damages caused by gun firings in Chempianpattu, Vadamarachchi East

This boat got trapped in the Sri Lankan Navy on last Sunday. The position of three married persons - Kanapathipillai Mahendran, 36 years, Veluppillai Vettivelnathan, 28 years, and of Sellathurai Sivasothi, 22 years are not known.

Another one, Panchaling ham, 33 years who went along with them jumped into the sea and escaped.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

**Date** 28.02.1991 **Name of Paper** - UTHAYAN **Clipping of News Paper**

## தமிழின ஒழிப்புக்கு எதிராக ஆசிரியர்கள் போராடுவார்களா?

### பயிற்சிக் கலாசாலை ஒன்றியம் கேள்வி

தமிழின அழிப்பு, தமிழீழத்தில் நடந்துவரும் கல்வி, கலாசார, உடைமை அழிப்புகள் போன்றவற்றை எதிர்த்துப் போராட ஆசிரியர்கள் முன் வருவார்களா?

இவ்வாறு கோப்பாய்/பலாலி பயிற்சி ஆசிரியர் ஒன்றியம் விடுத்த அறிக்கை ஒன்றில் கேள்வி எழுப்பியுள்ளது.

"நாளைய மாணவர் எழுச்சியில் ஆசிரியர்களின் நிலைப்பாடு" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழினமானது சொல்ல முடியாத துன்பங்களையும் துயரங்களையும் இழப்புகளையும் சுமந்து நிற்கின்ற நிலையில், கல்வியும் அதனுடன் இணைந்த உயிரிழப்புகளும் உடைமை இழப்புகளும் தொடர்கின்றன.

...ரான போராட்டத்தை ஏற்படுத்தி வழி நடத்த வேண்டிய பாரிய பணி ஆசிரியர்களைச் சார்ந்தது.

அடக்குமுறைகள் மற்றும் அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக மாணவர்களே சீறி எழுந்து போரிட முனைகின்ற வேளையில், ஆசிரியர்களில் அனேகர் ஒதுங்கி நடப்பது எவ்வாறு?

இவ்வாறான ஆசிரியர்களை நாளைய வரலாறு எள்ளி நகையாடும்; இவர்கள் மீது களங்கம் கற்பிக்கப்படும்.

இந்நிலையில் ஆசிரியத்துவத்தை வரைபுபடுத்தி சான்று பகர்கின்ற நிலையினை, ஆசிரியத்துவம் என்ற உயர்வான நிலைக்கு அமையப்பெற்ற ஒவ்வொருவரும் தகர்த்தெறிந்து பாதுகாக்க முன்வரவேண்டும்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

WILL TEACHERS FIGHT AGAINST TAMIL GENOCIDE
QUESTION RAISED BY COUNIL OF TEACHERS
TRAINING COLEGES

Will the Teachers come forward to fight the Tamils Genocide and the destruction of their properties,Education and Culture ?

This question was raised by the Council of Teachers' Training Colleges,in a Report issued.

Further, the report under the heading 'Teachers participation in Students' Upraising' which is scheduled tomorrow add -

The destruction of our Education,loss of lives and properties connected to it are being continued when Sri Lankan Tamils are undergoing agonies,sufferings and losses.

It is the duty of the Teachers to fight against those by organising struggles.

How can the teachers avoid these, when the students themselves had risen against the Oppression and destruction.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People Front of Liberation Tigers**

**Date** 28.02.1991 **Name of Paper** UTHAYAN **Cliping of News Papers**

The future Generation will laugh at them and accusation will be made on them.

The high status given to the Teachers should be preserved by demarcating their limits in Social strata - stated in the Report.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
**People's Front of Liberation Tigers**

**Date** 28..02..1991... **Name of Paper** UTHAYAN.................. **Clipping of News Paper**

# ஆசிரியர் படுகொலை தமிழ் மாணவரின் கல்விக்கு சாவுமணியா?

## பல்கலை. மாணவர் அவை அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 28

ஆசிரியர்களின் படுகொலைகள் தமிழ் மாணவர்களின் கல்விக்கு சாவு மணியா?

அண்மையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள வங்காலையில் அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஏனையவர்களின் படுகொலைகளைக் கண்டித்தும், மாணவர்களின் எழுச்சிக்கு ஆதரவளித்தும் யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

ஸ்ரீலங்கா அரசானது காட்டுமிராண்டித்தனமான இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் தமிழ் மக்களிடையே பட்டினிச் சாவையும் ஏற்படுத்த முயலுகிறது. பொருளாதாரத் தடையை விதித்து அதனை இறுக்கமாக இரா [illegible] முறைப்படுத்தி வருகிறது.

இந்நிலையில் ஸ்ரீலங்காப் படைகள் விமானக்குண்டு வீச்சின் மூலம் பாடசாலைக் கட்டடங்களைத் தகர்க்கின்றனர். பாடசாலை மாணவர்களை பாடசாலைகளுடன் சேர்த்து அழிப்பதற்கு விமானக் குண்டுகள் வீசப்படுகின்றன.

இன்று இவற்றிற்கெல்லாம் மேலாக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் படுகொலை செய்யப்படுகின்றனர்.

இதன்மூலம் தமிழ்மக்களின் கல்வியையும் சீரழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது புலனாகின்றது.

ஜி.சி.ஈ உயர்தரப்பரீட்சை, ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட்சை ஆகியவை பின்போடப்படுவதும், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் எரிக்கப்பட்டதும் இவற்றின் தொடர் நிகழ்வுகளே.

இராணுவக் கெடுபிடி, பொருளாதார நெருக்கடி என்பனவற்றின் மத்தியிலும் எமது மாணவர்களின் கல்வி பாதிக்கக் கூடாது எனும் தலையாய சிந்தனையுடன் தமது உயிரையும் துச்சம் என மதித்து சேவை புரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சர்வதேச சமூகமும் ஸ்ரீலங்கா இனவெறி அரசின் இந்த கொடூர நடவடிக்கைகளை புரிந்து கொள்ள வேண்டும்.

வங்காலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் இது தொடர்பான எழுச்சி நடவடிக்கைகளுக்கும் —

ஸ்ரீலங்கா அரசின் இன அழிப்பு, பொருளாதாரத் தடை, உற்பத்தித்தடை ஆகியவற்றின் பாதிப்புகளில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் நாம் ஆதரவு அளிப்போம் என்பதனை தெரிவித்துக் கொள்கி [illegible]

TEACHERS' KILLINGS
A DEATH NAIL TO TAMIL STUDENTS EDUCATION
REPORT BY UNIVERSITY UNDERGRADS

Jaffna, Feb.28

Are Teachers' Killings, a death nail to to Tamil Students' Education ?

It was revealed in a Report issued by the University Under Graduates, on the killing of principal, teachers and others at Vankalai recently.

It further added -

Sri Lankan Government, by its barbaric action through the forces, killing the Tamils and causing deaths due to starvation among the tamils. Economic Barrier is being implemented to a great extent through the Army.

At this stage, the Sri Lankan forces are destroying the School buildings.

Date 28.02.1991 Name of Paper UTHAYAN Cliping of News Papers

Actions are being taken to destroy the students along with the School buildings and had bombardments.

Further to it, principals,teachers,students and University Undergraduates are subjected to brutal killings.

By this action, it is clear that the Education of the tamils got deatroyed.

The postponement of G.C.E.(O/L) and G.C.E.(A/L) Examinations and the buring of East Lankan University are connected to this.

The teachers who went to School for the reason, that the education of the future generation should not be destroyed, inspite of the Army excesses and Economic Barriers imposed are brutally killed.

We condemn this action vehemently.

The International Commune should note the Sri Lankan Government atrocities.

We express our deep sympathy to the families of those who were killed and our support will be there for the for the students' Upraisings on it and for the actions taken against the Genocide of Tamils,Economic barrier and the prevention of productions etc.

# கோண்டாவில் டிப்போ மீது நேற்று விமான குண்டுவீச்சு!

## பஸ்கள் நாசம்; பல கோடி ரூபாவுக்கு நஷ்டம்

யாழ்ப்பாணம், டிச. 31

நேற்று மாலை ஐந்து மணி அளவில் மூன்று பொம்மர்கள் கோண்டாவிலில் உள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபை டிப்போமீது ஆறுக்கும் அதிகமான குண்டுகளை வீசின.

இதனால் டிப்போவின் பெரும் பகுதியும் சுமார் ஐம்பது பஸ்களும் சேதமுற்றன.

இந்த விமானக் குண்டுவீச்சினால் கோண்டாவில் சாலைக்கு பலகோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

குண்டு வீச்சு நடந்த சமயம் டிப்போவில் கடமையில் இருந்த எட்டு பாதுகாப்பு ஊழியர்கள் தெய்வாதீனமாகக் காயமின்றித் தப்பினர்.

பொம்மர்கள் வீசிய குண்டுகளில் ஒன்று, இரு மாடிகளைக் கொண்ட அலுவலகத்தை நாசமாக்கியது.

நான்கு குண்டுகள் கராஜ், களஞ்சியம் உள்ளிட்ட பகுதிகளில் விழுந்து அவற்றைச் சேதப்படுத்தின.

மற்றொரு குண்டு பஸ்களை திருத்துவதற்காக ஏற்றிவிடும் ''டிராம்ப்'' கட்டடை நோக்கி வீசப்பட்டது. அதனால் அதில் தரித்து நின்ற ஒரு பஸ் சின்னாபின்னமானது.

இந்தக் குண்டு வீச்சினால்- டிப்போவில் நின்ற - சுமார் முப்பது நல்ல நிலையில் உள்ள பஸ்களும் திருத்துவதற்காக விடப்பட்ட சுமார் இருபது பஸ்களும் பலத்த சேதமடைந்தன.

பல பஸ்கள் சின்னாபின்னமாகி, கண்ணாடிகள் நொருங்கி உருவம் குலைந்து

[2ஆம் பக்கம் பார்க்க]

AIR BOMBARDING ON KONDAVIL DEPOT TESTERDAY

- Buses devated: Several Million Loss -

Jaffna 3st December., Yesterday by about 5.00 P.M., 3 bombers attacked, Sri Lanka Transport Bus depot of Kandavil North Region, dropping more than 6 bombs.

As such, most of the depot portions and 50 buses subjedted to damages.

The Attack had caused several millions of loss to the depot.

Eight security guards, who were at the depot at the time of bombing narrowl escaped by the grase of God, without any injuries.


One of the bombs thrown at the depot from the bombers fell on the 2 storied building, devasting the office of the depot.

Further, four more bombs fell on the garage damaging the inside portions. Another bomb fell on the repairing Unit and damaged almost 2 buses, which were for repairs.

About 30 buses on good condition, along with about 20 buses due for repairs

- - -000- - -


# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
# People's Front of Liberation Tigers




30.12.1990 அன்று
கோண்டாவில் பஸ்டிப்போ
மீது நடத்தப்பட்ட ஸ்ரீலங்கா
விமானப்படையின் குண்டு
வீச்சில் சேதமுற்ற பஸ்
வண்டியும், கராஜ்சும்.
(1ஆவது படம்.)

The buses a d the Garage which were subjected to damages during the Sri Lankan air attack at Kondavil on 30.12.1990.

000000000









இக்குண்டு வீச்சில் சேதமுற்ற
பஸ் வண்டிகள்.
(2ஆவது படம்.)

Buses subjected to damages by the bombard-ment.



இக்குண்டு வீச்சில் சேதமுற்ற
பஸ் வண்டிகளும், பஸ்தரிப்பு
நிலையமும்.
(3ஆவது படம்.)

Buses and the bus stand affected by the bombing.